# சுடரொளி

சிறப்பு

# மணிவிழா மலர்



60

திரு. கந்தையா தருமகுலசிங்கம்

SLPS - 1

அதிபர்

யா/செங்குந்த இந்துக் கல்லூரி

# "சுடரொளி"

## சிறப்பு

# மணிவிழா மலர்

**திரு.கந்தையா தருமகுலசிங்கம்**

அதிபர் யா/செங்குந்த இந்துக் கல்லூரி

**2016**

# மலர்முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சுடரொளி<br>சிறப்பு மணிவிழா மலர் |
| இதழாசிரியர் | : | திருமதி.கலைவாணி விமலநாதன் |
| ஆண்டு | : | ஏப்ரல் 2016 |
| பொருள் | : | யா/செங்குந்த இந்துவின் அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் சேவையைக் கௌரவித்து வெளியிடும் மணிவிழா மலர் |

# மணிவிழா நாயகன்



# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானமறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே

– சுப்பிரமணிய பாரதியார்–

# பாடசாலை கீதம்

வாழ்த்திடுவோம் எங்கள் கல்லூரித் தாயை
வளமுடன் மாணவர் நாமே

செங்குந்த இந்துக் கல்லூரியை என்றும்
எங்களுக்குக் கல்வி அளித்து
பொங்கும் புகழுடன் வாழ்ந்திட நாமே
திங்கள் முடியோனைத் துதிப்போம்

கன்னல் சுவை தரும் தமிழ்மொழியுடனே
அன்னிய ஆங்கிலம் சேர்த்து
இன்னிசை யோடுயர் இலக்கியம் பலவும்
என்றுமே அளித்திடும் அன்னாய்!

இத்தல மீதினில் மாணவர் எல்லாம்
உத்தமராய் வாழ வேண்டி
சத்தியம் ஒழுக்கம் எனுமுயர் பண்பை
எத்தினமும் ஊட்டும் தாயே!

வறுமையாய் வாடினும் வளமுற்று வாழினும்
மறந்திட மாட்டோம் உன் நலனை
குறைகளின்றி உனைக் குவலயம் போற்றிட
இறைவனை வேண்டுவோம் நாமே

எந்தை போல் வந்தெமக் கறிவுரை கூறும்
இராசரெத்தினம் என்றும் வாழ்க
சிந்தையில் இந்துக்கள் கல்வியை நிறைத்த
“இந்துபோட்” ஸ்தாபனம் வாழ்க

வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வாழிய வாழிய என்றும்
வாழ்க! வாழ்க!! வாழ்க
வளம் பல பெருக்கி என்றும்
வாழிய எங்கள் கல்லூரி.

இயற்றியவர்
சிற்பி.எஸ்.சரவணபவன்




# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

மாசற்ற சமூகத்தை உருவாக்கும் மகத்தான ஆசிரிய சேவையை புனிதமாகப் பேணிப் புகழ் பெற்றவர்கள் பலர். ஆளுமைமிக்க அதிபராக விளங்கி, பல நூறு மாணவர்களை ஆற்றுப்படுத்தியவர்கள் பெருமைக்குரியவர்கள். ஆசிரியராக ஆளுமைமிக்க அதிபராக விளங்கி ஓய்வு பெறும் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பல அறிஞர்களைக் கலைஞர்களைத் தோற்றுவித்த செங்குந்த இந்துக் கல்லூரியின் அரியாசனத்தை அலங்கரித்த இப்பெருமகன் ஓய்வு பெற்றுச் செல்லும் வேளை, நன்றியுள்ள சமூகம் எடுக்கும் பாராட்டு விழா சிறக்க இதயபூர்வமான வாழ்த்தினையும் நல்லாசியையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*



# ஆசிச்செய்தி

*"மலர்தலை ஞாலத்து மண்ணுயிர்க்கெல்லாம்*
*தகுதியாய் வாழ்தல் இனிது"*

என்ற கூற்றுக்கிணங்க எம்மத்தியில், கல்விப் புலத்தில் புலமைமிகு ஆசிரியராகவிணைத்திறன்காண் அதிபராக திருவாளர் தருமகுலசிங்கம் அவர்கள் மிளிர்ந்து வருகின்றார். தனது நாமத்திற்குப் பொருத்தமாக தர்மநெறியில், குலப்பெருமை விளங்க சிங்கத்தின் வீரத்துடன் தனது செயற்பாடுகளை அவர் துலங்க வைப்பது போற்றுதற்குரியது. கடமைக்காக கடமையைச் செய்யாது ஆளுமை, அர்ப்பணிவு என்பவற்றை அணிகலன்களாக அணிந்து அதிபர் சேவையை அவர் அலங்கரித்து அமைந்தமை பாராட்டுதற்குரியது.

கல்லூரியின் வளர்ச்சி வீச்சினை தனது வாழ்வின் மூச்செனக் கருதி ஆசிரியர்கள், மாணவர்கள் என்போரின் உளப்பாங்குகளையும், தேவைகளையும் நன்கு புரிந்து கொண்டு கல்லூரியின் நிகழ்கால, எதிர்கால தேவைகளையும் நன்கு புரிந்து கொண்டு கல்லூரியின் நிகழ்கால, எதிர்கால தேவைக்ளை இனங்கண்டு தீர்க்கதரிசனம் பார்வையுடன் திட்டங்களை வகுத்து திடமாக செயற்பட்டதால் செங்குந்தா இந்துக் கல்லூரிக் கொடி வானுயரப் பட்டொளி வீசிப்பறந்ததை நாம் நன்கறிவோம்.

அனுபவச்சார் உலகியல் ஞானத்தெளிவும், ஆன்மீகம்சார் மெய்யியல் உணர்வும், அறிவுசார் புலமைத்திறனும் மணிமுடிகளாக மகுடம் சூட மணிவிழாக்காணும் அதிபர் அவர்களுக்கு,

*"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை உடைய செயல்"* என்ற குறள்மாலையை அணிவித்து வாழ்வதுடன் அவரும் அவர் குடும்பத்தினரும் அணைத்து நலன்களையும் பெற்று இன்பமே சூழ வாழ இறைவனின் அருளாசிகளை வழங்கி மகிழ்கின்றேன். கலங்கரை விளக்காக காலத்தில்

ஒளிர்க! வாழ்க! அறைஅருள் பெறுக!

"நீங்கள் உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருக்கின்றீர்கள்" (கிறிஸ்து இயேசு)

**அருட்திரு.அ.பீ.திருமகன்**
*உப அதிபர் யா/ புனித பத்திரியார் கல்லூரி.*

# எங்கள் அதிபர்



# எங்கள் பிரதி அதிபர்





# வாழ்த்துச் செய்தி

யா/இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு 22.04.2016 இல் ஓய்வு பெறும் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலராக வெளிவரும் "சுடரொளி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மனநிறைவடைகின்றேன்.

யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு 22.04.2016ல் ஓய்வுபெறும் கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் தனது ஆசிரியப்பணி, அதிபர்பணி என்பவற்றினைத் திறம்பட ஆற்றி ஓய்வு பெறுகின்றார். இவர் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் பெரும் பங்காறற்றியுள்ளார். இவர் தனது கடமைகளைப் பொறுப்புடன் மேற்கொண்டு வரும் இவரது சேவை பாராட்டத்தக்கதாகும்.

இவர் ஒரு சிறந்த சேவையாளர் என்பதனைக் கல்விப்புலம் சார்ந்தோர் மட்டுமல்ல அவரிடம் பயன்பெற்ற எல்லோரும் நன்கறிவர். அனுபவத்தின் பொக்கிஷமாக ஆளுமையின் சிகரமாக விளங்கிய இவர் ஓய்வு காலத்திலும் சமூகப்பணி செய்து சிறப்புற வாழ்வதுடன் தனது குடும்பத்தாருடன் நலமாக நீடூழி வாழ மனமார வாழ்த்துகின்றேன்.

**கௌரவ சிவஞானம் சிறிதரன்**
*பாராளுமன்ற உறுப்பினர்*
*யாழ் மாவட்டம்*



# உன்னத உழைப்பாளி

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு 22.04.2016 இல் ஓய்வு பெறும் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலராக வெளிவரும் "சுடரொளி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யா/இந்துக் கல்லூரியின் வரலாற்றில் தனக்கெனவும் ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்ட அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகள் யா/செங்குந்த இந்துக் கல்லூரியில் சேவை ஆற்றி தனது உன்னதமான உழைப்பினால் பாடசாலையின் உயர்வுக்கு வழியமைத்த இவர் தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறுகின்றார். இவர் தனது ஓய்வு காலத்தில் பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபவதுடன் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**கௌரவ C.V.K.சிவஞானம்**
***அவைத்தலைவர்***
***வட மாகாணம்.***



# வாழ்த்துச் செய்தி

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு 22.04.2010 இல் ஓய்வு பெறும் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலராக வெளிவரும் "சுடரொளி" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மனநிறைவடைகின்றேன்.

முப்பத்தொன்பது வருடகால கல்விப்பணியை சிறப்பாகச் செய்து மாணவ சமுதாயத்தினை சமூகப் பொருத்தப்பாடுள்ளவர்களாக உருவாக்கி பல்வேறு பாராட்டுக்களையும் பெற்ற திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 15 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி அப்பகுதி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அயராது உழைத்து அவர்களை உயர்நிலை அடையச் செய்தவர். அவரது நீண்ட கால அனுபவமும் ஆளுமையும் அவரினால் உருவாக்கப்பட்ட மாணவர்களின் செயற்பாடுகளின் மூலம் அறிய முடிகிறது. இவரது சேவையின் சிறப்பினை பயன்பெற்றோர் போற்றுகின்றனர்.

புகழ்பூத்த அதிபர்கள் வரிசையிலே தன்னையும் இணைத்துக் கொண்டு ஓய்வு பெறும் இவர் ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் நலமாக வாழ எமது மனநிறைவான வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**கௌரவ த.குருகுலராஜா**
***கல்வி அமைச்சர்***
***கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு***
***வடக்கு மாகாணம்***



# மாணவர் செய்த தவப்பயன்
# அதிபர் திரு.க.தருமகுலசிங்கம்

தாரமும் குருவும் தவப்பயன் என்பார்கள். கல்விச்சூழலில், அதிபர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள் அத்தகைய ஒரு தவப்புதல்வரே என்று சொன்னால் மிகையல்ல.

ஆசிரியராக 1977 இல் கிளிநொச்சி மாவட்டத்தில் வேம்போடுகேணி கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடாலையில் கற்பித்தற் பணியை ஆரம்பித்த திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள், தற்போது யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற உள்ளார். ஏறத்தாழ 40 வருடகாலக் கல்விச் சேவையில், கற்பித்தலிலும் கல்வி நிர்வாகத்திலும் இவர் வெளிப்படுத்திய ஆளுமை அவரை மாணவர்கள் செய்த தவப்பயனாகவே கருத வைத்திருக்கிறது.

அதிபர் க.தருமகுலசிங்கம் அவர்கள் ஒரு நல்லாசிரியர். கற்பிக்கும் பாங்கு கைவரப் பெற்றவர். இனிமையான சுபாவம் கொண்டவர். அதேசமயம், மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் கண்டிப்பானவர். தோழமை உணர்வு கொண்டவர். அதேசமயம், ஆசிரியர்களிடம் அவர் தம்கடமையைச் சரிவரச் செய்விப்பதில் கறாரானவர். இவற்றால், மாணவர்களினதும் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெரிதும் பெற்றவர்.

இத்தகைய ஒரு கல்வியாளனுக்கு, கல்விச்சேவையாளனுக்கு அவரின் சேவையைப் பாராட்டி நடைபெறும் சேவை நயப்புவிழா சிறக்க என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இம்மணிவிழா நாயகனின் பணிஓய்வு வாழ்வு சிறக்க நான் வணங்கும் இயற்கை என்ற பேரிறைவனை இறைஞ்சுகிறேன்.

**கௌரவ பொ.ஐங்கரநேசன்**
*விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி*
*கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல்*
*நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு*
*வடக்கு மாகாணம்.*



# பொதுநலம் கொண்ட கல்விமான்

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த இடங்களில் ஒன்றான பளைப் பிரதேசத்தினைத் தனது சொந்த இடமாகக் கொண்ட பெருமதிப்பிற்குரிய அதிபர் திரு. கந்தையா தருமகுலசிங்கம் அவர்களது சேவையைப் பாராட்டி வெளியிடப்படும் இம் மலருக்கு நானும் ஒரு வாழ்த்து மடலினை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

திரு. கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் சிறு பராயத்திலிருந்தே கல்வியில் சிறந்து விளங்கியதன் பயனாக தான் பெற்ற அரிய கல்வியறிவை தான் நேசிக்கும் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்குமுகமாக அரச சேவையிலே மிகவும் உன்னதமான சேவையான ஆசிரிய சேவையிலே 1977 ஆம் ஆண்டில் தன்னை இணைத்துக்கொண்டார்.

அதிபர் அவர்கள் தான் கல்வி கற்பித்த பாடசாலைகள் ஒவ்வொன்றையும் தனது அர்ப்பணிப்பான சேவையூடாக அவற்றின் கல்வி மட்ட அடைவுகளினை ஏற்றம் பெறச் செய்து மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தி ஒவ்வொரு மாணவரையும் அவர்களது நல் எதிர்கால வாழ்விற்கு ஏற்ற வகையில் தயார்ப்படுத்தினார்.

அவரது சிறந்த சேவையின் பயனாக 1985 ஆம் ஆண்டளவில் அதிபர் கடமையினை ஆற்றுமுகமாக பதவியுயர்வு பெற்று பல பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி 2013 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை அதிபர் சேவையின் தரம் 1 இல் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரிக்கு சிறந்த சேவையினையாற்றிவந்துள்ளார். இந்த வகையில் நான் கல்விகற்ற பாடசாலையான யாழ். செங்குந்த இந்துக்கல்லூரியில் அதிபராக கடமையினைப் பொறுப்பேற்றுக்கொண்டமையானது எமது பாடசாலைக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த நான் 2013ம் ஆன்டு நடைபெற்ற வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அடுத்த ஆண்டில் நடைபெற்ற கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக என்னை அதிபர் அவர்கள் அழைத்திருந்தார். இந்நிகழ்விற்குப் பின்னர் அதிபர் அவர்களுடன் பாடசாலையின் கல்வி மற்றும் பிற

விடயங்களின் அபிவிருத்தி தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டோம்.

இவ்வகையில் அதிபர் அவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் எமது பாடசாலை மாணவர்களை தரமுயர்த்த வேண்டும் என்று என்னிடம் கூறி பாடசாலை மைதானத்தின் புனரமைப்பு தொடர்பாக பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்வதுபற்றி கலந்துரையாடினார். இக்கலந்துரையாடலின் அடிப்படையில் நான் மேற்கொண்ட முன்முயற்சியினால் மைதானப்புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கப்பட்ட இந்நிதியில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகின்றது. மேலும் "அருகில் உள்ள பாடசாலையே சிறந்தது" என்ற மத்திய கல்வி அமைச்சின் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 2 பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றை முழுமையான பௌதீக வளங்கள் உள்ள பாடசாலைகளாக அபிவிருத்தி செய்ய உள்ளது.இவ்வகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் கீழ் யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி,கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயம் ஆகியன என்னால் பரிந்துரைக்கப்பட்டு மத்திய கல்வியமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.இவ் வகையில் இப் பாடசாலை தனது முழுமையான அபிவிருத்தியினை பெறவுள்ளது. இன்னும் பல அபிவிருத்திப்பணிகளை ஆற்றுவதற்கு பெரும் தூணாக நின்று அர்ப்பணிப்பான சேவையாற்றும் அதிபர் அவர்கள் 22.04.2016 ஆம் திகதியுடன் தனது 60 ஆவது அகவையினைப் பூர்த்தி செயது அரசசேவையில் இருந்து ஓய்வு பெறுகின்றார்.

மேலும் பொது நலம் கொண்ட அதிபரான திரு.க.தர்மகுலசிங்கம் அவர்கள் சக உத்தியோகத்தர்களிடமும், மாணவர்களிடமும் தோழமையுடன் பழகும் தன்மையை கொண்டிருப்பதனை நான் நன்கு அறிவேன். அத்தோடு அரச சேவையில் தனக்கொரு பாணியை வகுத்துக்கொண்ட அதிபர் அவர்கள் நேரகாலம் பாராது மகத்தான சேவையாற்றியுள்ளார்.தனது சேவைக்காலத்தில் பணம், புகழ் மற்றும் பதவி என்பவற்றுக்கு அடிபணியாமல் தான் சேவையாற்றிய பாடசாலைகள் அனைத்தும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்தவையாக இருந்த போதும் தனது சொந்த ஊர்ப் பாடசாலைகளாக எண்ணி அவற்றின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார் என்றால் அது மிகையாகாது.

இவர் இரக்க குணமும் தயாள சிந்தையும் கொண்டவரென பாடசாலை சமூகத்தினரால் பெரிதும் மதிக்கப்படுகின்றவராக கடமையாற்றினார். தனது பாடசாலை மாணவர்கள் வறுமைநிலை காரணமாக ஆகாரம் உண்ணாமல் பாடசாலைக்கு வரும் வேளைகளில் தனது சொந்தப் பணத்தில் அவர்களுக்கு ஆகாரத்தை வாங்கி வழங்கி கல்வியூட்டியவர் என்பதனை பெற்றோர்கள் மூலமாக நான் அறிந்துள்ளேன். அது மட்டுமல்லாது பாடசாலை மாணவர்கள் வெளி

மாவட்டங்களிற்குச் சுற்றுலா செல்கின்ற வேளைகளில் தனது உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் தானும் அவர்களுடன் நீண்ட தூரம் பயணம் செய்து மாணவர்களை எவ்வித பிரச்சனைகளுக்கும் ஆளாகா வண்ணம் பாதுகாத்து வந்துள்ளார்.

இவரது நற்செயல்களால் இவரது பிள்ளைகள் அனைவரும் நன்னிலையினை அடைந்துள்ளார்கள். இத்தகைய நல்லுள்ளம் கொண்ட அதிபர் எமது பாடசாலை சிறக்க ஆற்றிய அரும் பணிக்கு பாடசாலையின் பழைய மாணவன் என்ற வகையில் என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பதோடு இவரது ஓய்வுக்காலத்திலே தனது குடும்பத்தாருடன் சந்தோசமாக நீடூழி காலம் வாழவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கௌரவ Dr.கந்தையா சர்வேஸ்வரன்,**
*மாகாணசபை உறுப்பினர்,*
*வடக்கு மாகாணம்.*



# மணி விழாக்கான விழையும் மாண்புடை அதிபர் உயர்திரு.கந்தையா தருமகுலசிங்கம்

மணிவிழாக்கான விழையும் மாண்புடை அதிபர் உயர்திரு.க.தருமகுலசிங்கம் அவர்களை வாழ்த்தி செய்தியொன்றை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெருமையாக நினைக்கின்றேன். அயல் கிராமங்களில் பிறந்து குடும்ப நண்பர்களாக வாழ்ந்து ஆசிரியர் சேவையில் ஒரே ஆண்டில் இணைந்தோம். நான் 16.1.1977ல் ஆசிரியராக சேர திரு.க.தருமகுலசிங்கம் 4 மாதங்களின் பின்னர் தான் ஆரம்பக் கல்வியை கற்ற அவரது பிறந்த ஊரான வேம்போடு கேணி சி.சி.த.க. பாடசாலயில் ஆசிரியராக இணைந்தார். நான் பளை மத்திய கல்லூரியில் உப அதிபராக இருந்த போது அவர் இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். (1981,1982) நான் பளைக் கோட்டக்கல்வி அதிகாரி யாக இருந்த போது (கொத்தணி அதிபராகவும்) இவர் சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலையின் அதிபராக இருந்தார். இத்தகைய உறவு முறைகளில் எமது தொடர்பு இன்று வரை நீடித்து வருகின்றது.

ஒரு ஆசிரியர், அதிபர் என்ற வகைகளில் திரு.க.தருமகுலசிங்கத்தின் நடத்தைகளை நன்கு அறிவேன். மிக அமைதியானவர். கற்பிக்கும் பாடங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அவரது வீட்டிற்கு செல்கின்ற பல சந்தர்ப்பங்களில் அவரது தந்தையார் எம் இருவருக்கும் பல புத்திமதிகளைக் கூறுவார். ஆண்டவனுக்கு கணக்கு கொடுக்கும் தொழிலுக்கு வந்துள்ளீர்கள். அதில் தான் உங்கள் சந்ததி தங்கி உள்ளது. என்று இவரது தந்தையார் கூறிய கூற்றுக்கள் இன்னும் நினைவுள்ளது.

இவர் அதிபராக இருந்தபோது கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலை பளைக் கொத்தணிக்குள் உள்ளடங்கியது. அப்பொழுது யான் பளை மத்திய கல்லூரியின் அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் இருந்தேன். பின்னர் பளைக் கோட்டக்கல்வி அதிகாரியாக யான் இருந்த போதும் (1992–1994) இவரது நிருவாக உத்திகளை நேரடியாக அவதானித்தேன். ஆசிரியர்களோடு இவரது ஒன்றிணைந்த செயற்பாடுகள் மிக உன்னதமானது. கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகளில் இவர் செயலாளராக இருந்து செயற்பட்ட முறைகள் பலரால் பாராட்டப்பட்டது.

நான் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களின் கல்விப்

பணிப்பாளராக இருந்த காலங்களில் (1988–2008) இவரது பாடசாலைச் செயற்பாடுகளை பலர் கூறக்கேட்டு பெருமைப்பட்டேன். தன்னடக்கம், அடக்கமான போக்கு, எவரையும் கோபத்துடன் நோக்காது அணுகும்முறை என்பன இவரது பண்புகளாகும். உயர் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் மதிப்பு என்றும் உயர்வானது என உயர் அதிகாரிகள் என்னிடம் கூறி உள்ளனர்.

நான் ஆசிரியனாக பழகிய காலம், அதிபர்களாக இருந்து பழகிய காலம் நான் கோட்டக்கல்வி அதிகாரியாக, கல்விப்பணிப்பாளராக, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராக பதவி வகித்த ஒவ்வொரு காலத்திலும் திரு.க.தருமகுலசிங்கத்தை ஆசிரிய உலகில் மாண்புடை அதிபர் ஒருவராக பாராட்டுகிறேன். 39 வருடங்கள் ஆசிரிய சேவையில் பணியாற்றி ஓய்வு பெறுகிறார். பல ஆசிரியர்கள், அதிபர்கள் இவரைப் பார்த்து கற்க வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

பணி நிறைவடைந்து தனது குடும்பத்தினர், பிள்ளைகளுடன் சமூகப் பணிகளில் ஈடுபடும் காலம் அண்மித்துள்ளது. அவரது ஓய்வுக்காலம் மனநிறைவுடன் அமைய இறைவனை வேண்டுகிறேன்.

**கௌரவ ப.அரியரத்தினம்**
*ஓய்வுநிலை மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,*
*உறுப்பினர், வடக்கு மாகாண சபை.*



# வாழ்த்துச்செய்தி

யா/ செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபராக அரும்பணியாற்றி அதிபர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களின் கல்விச் சேவையை பாராட்டி வெளியிடப்படும் மணி விழாச் சிறப்பிதழான சுடரொளி சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1977 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெற்று தனது கல்விச் சேவையை ஆரம்பித்த இவருக்கு 1991 ஆம் ஆண்டில் அதிபர் சேவை நியமனம் கிடைக்கப்பெற்று தரம் I அதிபராக மாணவர் சமுதாயத்துக்கு 39 வருட காலமாக அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கியுள்ளமை பாராட்டதக்கதாகும். இவர் தனது சேவைக்காலத்தில் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றியிருந்தார். 2013 ஆம் ஆண்டு யா/ செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையேற்றுப் பாடசாலையின் வளர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் தனது கடமைகளைப் பொறுப்புடன் மேற்கொண்டுவரும் இவரது சேவை பாராட்டத்தக்கதாகும்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.இ.இரவீந்திரன்**
*செயலாளர்,*
*கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை*
*மற்றும் இளைஞர் விவகாரஅமைச்சு,*
*வடமாகாணம்.*



# வாழ்த்துச்செய்தி

யா/ செங்குந்த இந்துக் கல்லூரியினது அதிபர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களது சேவையினைப் பாராட்டி வெளியிடப்படும் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள் தனது ஆசிரியப்பணி, அதிபர் பணி என்பவற்றினை திறம்பட ஆற்றி ஓய்வில் செல்கின்றார். தனது சேவைக் காலத்தில் கிளிநொச்சி வலய கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தனது ஆசிரியப் பணியினை ஆற்றியுள்ளதுடன் பளைக் கோட்டப் பாடசாலையான கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலையில் அதிபராக சேவையாற்றி அப்பாடசாலை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றியுள்ளார்.

யா/ வல்வெட்டி இ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய காலத்தில் அப்பாடசாலை மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், உயர்வான பெறுபேறுகளைப் பெறவும் வழிவகுத்தார். யா/ செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபராகச் கடமையேற்றதன் பின்னர் அப்பாடசாலையினது கல்விச் செயற்பாடுகளை சிறப்புடன் ஒழுங்கமைத்து பாடசாலையினது பெறுபேறுகள் உயர்வதற்கு வழிகோலினார். இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு.செ.உதயகுமார்**
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்*
*வடக்கு மாகாணம்.*



# செயற்றிறன் மிக்க அதிபர்

யா/செங்குந்த இந்துக்கல்லூரியில் கடந்த 3 ஆண்டுகள் அதிபராகப் பணிசெய்து தனது 60வது அகவையில் இளைப்பாறும் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களுக்காக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தனது திறமையையும், உழைப்பையும் மாணவருக்கு உச்ச அளவில் வழங்கிய ஒரு முகாமையாளராகவே அவரைக் காண்கின்றேன். ஆசிரியர்களிடமிருந்து உத்தம பயன்பாட்டை பெற்றுக்கொள்ளும் ஆளுமை அவரிடமிருந்தது. நேர காலம் பாராது அவர் ஆற்றிய சேவை எல்லோராலும், எக்காலத்திலும் நினைவுகூரத்தக்கது.

வடமராட்சியில் பெயரறியப்படாத ஒரு பாடசாலைக்கு வல்வெட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை என பெயர் சூட்டி அப்பாடசாலையைப் பெறுபேறுகளாலும், ஒழுக்கத்தாலும் உன்னத நிலைக்கு கொண்டுவந்து இன்னும் அது துலங்க வழிசமைத்தவர். வருமானம் குறைந்த மாணவர்கட்கு இப்பாடசாலையை ஓர் கலங்கரை விளக்கமாக வடிவமைந்து அறிவூட்டிய செயல் வீரர். அதனால்தான் அவரது சொந்தப் பிள்ளைகள் இன்று சான்றோராக சமூகத்தில் மிளிர்கின்றனர். புறவயமாக நோக்கின் அவர் ஓர் சான்றோன் என்பதற்கு அவரது பிள்ளைகளே சாட்சி.

அவர் எமது வலயத்தில் செங்குந்த இந்துக் கல்லூரியில் ஆற்றிய பணிக்காக மனமுவந்து வாழ்த்துவதோடு அவர்தம் ஓய்வுக் காலம் மனைவி, பிள்ளைகளுடன் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு.ந.தெய்வேந்திரராஜா**
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*யாழ் கல்வி வலயம்.*



# வாழ்த்துச் செய்தி

யா/இந்துக் கல்லூரியின் அர்ப்பணிப்புள்ள அதிபர்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு 22.04.2016 இல் ஓய்வு பெறும் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பு மலராக வெளிவரும் “சுடரொளி” சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மனநிறைவடைகின்றேன்.

யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியின் திரு.க.தருமகுலசிங்கம் அதிபர் அவர்கள் அதிபர்களுக்கு ஓர் உதாரண புருஷராக விளங்கியவர். யாருடனும் முரண்படாத பண்பே அவரது வெற்றிக்கு காரணம் மேலும் அவர் பளையிலே கற்று அங்கேயே ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர் வல்வெட்டி இ.த.க.பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிச் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றார். அவர் செய்த கல்வித் தொண்டு அவரையும் அவரது குடும்பத்தையும் சிறப்புற வாழ வைக்கும். அவருக்கு எனது வாழ்த்துக் களும் பிரார்த்தனைகளும் என்றும் உண்டு.

**திரு.வே.த.செல்வரட்ணம்**
*ஓய்வு நிலைப் பிரதிச் செயலர்*
*கல்வி அமைச்சு,*
*வடமாகாணம்.*



# முதல்வரின் முதல்வனே நீடு வாழி!

அகவை இருபத்தொன்றில் ஆசானாய் அடிபதித்து ஆசானாய் ஆறாண்டு நான்கு பள்ளி பணி செய்து ஆசானுக்கிலக்கணமாய் மாணவரை அறிவூட்டி அறுபத்து அகவை கண்டு நீடு வாழி!

அகவை இருபத்தெட்டில் அதிபராய் பணியேற்று அதிபர் பணியோடு ஆசிரியப் பணி செய்து அறிவு புகட்டி நன்மாணவரை வளர்த்த முதல்வரில் முதல்வனே நீடு வாழி!

கல்விப்புலத்திலே ஆசிரியராக, அதிபராக இரண்டறக் கலந்து சுமார் நான்கு தசாப்த காலம் கனதிமிகு பணியாற்றி மணிவிழாக் காணும் திரு.க.தருமகுலசிங்கத்தை வாழ்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

திரு.க.தருமகுலசிங்கம் அற்புதமான ஓர் மானிடப்பிறவி, அவர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் பணியாற்றி தனது புகுந்த இடத்திற்கு இடமாற்றம் பெற்று வந்தார். வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் அவரை வகுப்பறையில் கற்பித்துக் கொண்டிருக்கும் போது நான் சந்தித்தேன். கற்பித்தற் செயற்பாட்டில் மிகுந்த ஆர்வமுடைய அதிபர் அவர். அவரது கற்பித்தற் செயற்பாட்டால் பயனடைந்த பாலகர்கள் பலர். பயன் பெற்ற பள்ளிகளும் பல எனலாம்.

இன்று வடபுலத்தில் பல பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. பல பள்ளிகள் மூடப்படும் நிலையிலுள்ளன. இப்படி மூடப்படும் நிலையிலிருந்து வல்வெட்டி இ.த.க.பாடசாலைக்கு 1998 ஆம் ஆண்டு திரு.க.தருமகுலசிங்கத்தை நான் இடமாற்றம் செய்தேன். இப்பள்ளிக்குப் புத்துயிரளித்தார். தனது பிள்ளைகளை இப்பள்ளியில் இணைத்தார். வடமராட்சியிலுள்ள பிரபல கல்லூரிகளுடன் வெற்றியடைந்தார். சிறிய பள்ளிகளும் சாதனைகளைப் படைக்கலாமென்பதை நிரூபித்தார். மூடப்படும் நிலையிலுள்ள பள்ளிகளைப் பாதுகாக்க இவரைப் போன்ற அதிபர்களே எமக்குத் தேவை. “நான் நேர்மையான ஒரு கல்விச்சேவகன்” என இறுமாப்புடன் கூறும் இவரை நான் கல்விப்புலத்திலே கண்டுள்ளேன். திரு.க.தருமகுலசிங்கம் இதனைச் செயலிலே காட்டினார்.

அவர் வடமராட்சியில் நடைபெற்ற கல்வி சார் நிகழ்வுகளில் முன்னின்று செயற்பட்டார். அதிபர்களுக்கு முன்னுதாரணம் அவரே. யா/செங்குந்த இந்துக் கல்லூரிக்கு அவர் இடமாற்றம் பெற்ற போது அப்பள்ளியும் வல்வெட்டி இ.த.க.பாடசாலையைப் போன்றே இருந்தது. இப்பள்ளியையும் குறுகிய காலத்தில் மீட்டு வளர்ச்சிப் பாதையில் பயணிக்கச் செய்தார். பெறுபேறுகளில் உயர்ச்சியைக் காட்டினார். சாவை நோக்கிப் பயணிக்கும் பள்ளிகளின் மீட்பர் அவரே. இத்தகைய மீட்பர்கள் பலர் தோன்றினால் எமது பள்ளிகள் பல மீட்கப்படும். எமது கல்வியும் மீட்கப்படும்.

**திரு.வ.செல்வராசா**
***ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர்***
***வடமாகாணம்.***



# கொள்கைவழி நின்ற அதிபர்

யா/வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை – கிராமப்புறத்தில் அமைந்துள்ள, குறிப்பிட்ட மாணவர்கள் கற்கும், பிரபலமற்ற வகை II பாடசாலை இப்பாடசாலையின் முகவரியை பெரும்பாலோர் அறிந்திருக்க மாட்டார்கள்.

1998 இன் பின்னர் இப்பாடசாலை தனக்கென ஒரு முகவரியைத் தேடிக்கொண்டது. இக்காலப் பகுதியில் இப்பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் பாடத்துறைசார் அடைவுகள் ஏற்றம் பெற்றன. பொதுப்பரீட்சை அடைவுகள் மட்டுமன்றி, பாடத்துறைசார் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் இப்பாடசாலையின் மாணவர்கள் வடமராட்சியில் குறிப்பிடத்தக்க நிலைகளால் பெற்று வந்தனர். இம் முன்னேற்றம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. இக் காலப்பகுதியில் இங்கு அதிபராகக் கடமையாற்றியவர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள்.

ஒரு கொள்கையாளன் முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென்பர். திரு.தருமகுலசிங்கம் அவர்களின் பிள்ளைகள் நால்வரும் கல்வியிற் சிறந்து விளங்கினார். யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பிரபலமான கல்லூரிகளில் அனுமதிபெறக் கூடிய தகைமைகளைக் கொண்டிருந்தனர். ஆனால், அதிபர் அவர்கள் தனது நான்கு பிள்ளைகளையும் தான் அதிபராகக் கடமையாற்றிய பாடசாலையிலேயே அனுமதித்தனர். ஏனைய பிள்ளைகளுடன் இணைத்து இவர்களுக்கும் கல்வி வாய்ப்புக்களை வழங்கினார். இவரின் இச் செயற்பாடு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "வீணான விஷப்பரீட்சையில் ஈடுபடுகின்றார்" எனப் பலரும் இவரின் செயற்பாட்டை விமர்சித்தனர். ஆனால், அதிபர் அவர்கள் தனது கொள்கையில் இருந்து விலகவில்லை. தனது பாடசாலையிலும் சிறப்பான கல்வியை வழங்க முடியும் என்பதை நம்பினார். தான் இப்பாடசாலையை உண்மையாகவே நேசிக்கிறேன் என்பதை நிரூபித்தார்.

தனது பாடசாலைக்கென கொள்கைகளை வகுத்தது மட்டுமன்றி, தனக்கெனவும் சில கொள்கைகளை வகுத்துக் கொண்டார். பணத்திற்கோ, புகழுக்கோ, பதவிக்கோ என்றும் விலைபோகாமல் இறுதிவரை தனது கொள்கை வழி நின்றவர். அதன்வழி வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

மாணவர் நலன்களில் இவர் காட்டிய அக்கறை போற்றத் தகுந்தது. தனது பாடசாலையில் கற்கும் பின்னடைவான மாணவர்கள் அனைவரும் அடிப்படைத் தேர்ச்சியாவது பெற வேண்டுமென அயராது உழைத்தார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். இப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் இன்று உயர்கல்வி, உயர்பதவிகளை அலங்கரிக்கின்றனர்.

பாடசாலை ஆசிரியர்கள், மற்றும் சமூகத்தினருடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வந்தார். பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் இணைந்தது ஒரு குடும்பமாகப் பணியாற்றி வந்தனர். ஆசிரியர்களின் தனிப்பட்ட நலன்களில் அக்கறை செலுத்தினார். ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்கு உதவியது மட்டுமன்றி, அவர்களின் வாழ்க்கைக்கும் உதவியுள்ளார். நல்ல வரன்களைத் தேடிக் கொடுத்துள்ளார். இவரின் ஆசிரியர் நலன்சார் செயற்பாடுகளை இன்றும் அவர்கள் நினைவு கூர்வதைக் கேட்டிருக்கின்றேன்.

பாடசாலையின் கல்வி அடைவுகளில் மட்டுமன்றி, பௌதிக வள விருத்தியிலும் அக்கறை காட்டி வந்தார். ஒரு சிறிய பாடசாலையாக இருந்தாலும் ஒரு பிரபலமான கல்லூரிகளில் உள்ள வளங்களில் ஒரு சிறிய அளவாவது தனது மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கிட்ட வேண்டுமென விரும்பினார். அவற்றைப் பெற்று பாடசலையை வளப்படுத்தினார்.

தனிப்பட்ட முறையில் திரு.தருமகுலசிங்கம் அவர்கள் மிக நல்ல மனிதர். இறைபக்தி மிக்கவர். எல்லோருடனும் அன்பு பாராட்டி வாழ்ந்தவர். பிறருக்கு தீங்கிழைக்க வேண்டுமென மனதாலும் நினைக்காதவர். அவரின் கல்விப்பணியை, சமூகப்பணியைப் பாராட்டி அவர் வாழ்ந்த வல்வெட்டி மக்கள் அவரின் பதவிக் காலத்திலேயே விழாவெடுத்து மகிழ்ந்தனர். மிகுந்த இறைபக்திமிக்க இவரின் சிந்தனைப்படியே இவருக்கு நல்லவை எல்லாம் வாய்த்துள்ளன. யா/வல்வெட்டி இ.த.க.பாடசாலையில் கற்ற இவரின் பிள்ளைகளும் இன்று நல்ல நிலையை எய்தியுள்ளனர். இவர் தனது குடும்ப உறவுகளுடன் பல்லாண்டு வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு.ஆ.ராஜேந்திரன்**
***முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்***
***வடக்கு மாகாணம்.***



# மணி விழா
# வாழ்த்துச் செய்தி

22.04.2016 அன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் ஆசான் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழாச் சிறப்பிதழான சுடரொளிக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

16.05.1977 இல் தனது 21 ஆவது வயதில் கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க பாடசாலையில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள், தனது தன்னலமற்ற ஆசிரியப்பணியை, பொல/மன்னம்பிட்டி அ.த.க பாடசாலை, கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை, கிளி/கௌதாரிமுனை அ.த.க பாடசாலை ஆகிய வற்றில் ஆற்றி, 01.02.1985 முதல் கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலையில் அதிபராக தனது பணியைத் தொடர்ந்தார். ஏறத்தாழ 39 ஆண்டுகளாக இடையறாத கல்விப் பணியின் பின்னர், இன்று யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெறுகிறார்.

நல்லாசிரியராகவும் நல்லதிபராகவும் வாழ்ந்த அவர், மாணவருக்குரிய சிறந்த முன் மாதிரியாகவும் விளங்கியதுடன், மிகுந்த தன்னம்பிக்கையுடையவராகவும் விளங்கினார். தனது சொந்தப் பிள்ளைகளையும் தனது பாடசாலையிலேயே கற்பித்துச் சிறந்த பெறுபேறுகளை அடைய வைத்ததன் மூலம், பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் மாணவருக்கும் தன்னம்பிக்கையை ஊட்டிய செயற்பாடு மிகுந்த பாராட்டுக்குரியதுடன், வரலாற்றில் மறக்கப்படமுடியாததுமாகும்.

அவர் தனது ஓய்வுக் காலத்தில், சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ, எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறேன்.


**திரு.கு.பிரேமகாந்தன்**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)*
*வடமாகாணம்.*



# வாழ்த்துச்செய்தி

திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள் யாழ் வலய பழம்பெரும் பாடசாலையான செங்குந்த இந்துக் கல்லூரியில் சேவையாற்றிய காலம் சிறிது என்றாலும் அவர் ஆற்றிய பணி பெரியது. தன்னடக்கம், ஆளுமை, நினைத்ததை சாதிக்கும் வல்லமை வலயக் கல்வி அலுவலகத்துடனான ஒட்டுறவு என்பன நான் அவரிடம் கண்ட நற்பண்புகளாகும். கிராமப்புறத்தில் பிறந்து கஷ்டப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வளர்ந்ததாலேயே இவரிடம் இப்பண்பு வளர்ந்தது என்று சொல்லாம். உண்மையில் என்னால் மதிக்கப்படுபவர்களுள் இவர் முக்கியமானவர் என்று கூறுவேன். தானும் தனது பாடசாலையும் தன் பணியும் என வாழ்ந்து அவர்களின் நலனுக்கென வாழ்ந்து, கண்டவர் இவர் இதனால் சொற்பகாலம் யாழ் வலயத்தில் கடமையாற்றினாலும் இவரை ஒரு தன்னிறைவான மனிதனாகக் காண்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவரது ஓய்வு காலம் சிறக்க எதிர்கால வாழ்வு நல்வாழ்வாக அமைய வாழ்த்தி விடைபெறுகிறேன்.


**திரு. கோ.வரதராஜமூர்த்தி**
***பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)***
***வலயக் கல்வி அலுவலகம்,***
***யாழ்ப்பாணம்.***



# வாழ்த்துச்செய்தி

யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களது சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவ் அதிபரது சேவைக் காலத்தில் இப்பாடசாலையானது புதுமெருகு பெற்றுச் சிறந்த கற்றல் கவிநிலையை உருவாக்கிக் கொண்டு பல சாதனைகளைப் படைத்துள்ளது. இதற்குச் சான்றாகப் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் உள்ளன. இவ் அதிபர் நான்கு தசாப்த காலம் கல்விப் பணி ஆற்றி அதிலும் சிறப்பாக 31 வருட கால அதிபர் சேவையில் பெற்றுக் கொண்ட அனுபவங்களை பாடசாலைக்கு அளித்து, இப்பாடசாலையை பயனுறுதிமிக்க பாடசாலையாக மாற்றியுள்ளார். இத்தகைய அதிபரது ஓய்வுக்காலம் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக அமைய இறைவனது அருளாசிகள் உரித்தாகட்டும்.

**திரு.ச.ரவீந்திரநாதன்**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)*
*வலயக்கல்வி அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*



# நல்லாசான்

திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் பளை பிரதேசத்தில் வேம்போடுகேணி நகரில் பிறந்தவர். தமது ஆரம்பக் கல்வியை வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையிலும் நடுநிலைக்கல்வியை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் பூர்த்தி செய்த வேளை ஆசிரியப் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியதால் மேற்படிப்பைத் தொடராது தாம் ஆரம்பக் கல்வி கற்ற வேம்போடுகேணி சி.சி.த.க.பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார்.

இப்பணியில் இவர் காட்டிய ஆர்வம், கடின உழைப்புப் போன்றவை மிகக் குறுகிய காலத்திலேயே அவரை அதிபர் தரத்திற்கு உயர்த்தியதால், கிளிநொச்சி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலையில் அதிபர் பதவியில் அமர்த்தப்பட்டார். ஆசிரியப் பணியில் மாத்திரமின்றி, அதிபர் பதவியிலும் அவருக்கு நிகர் அவரே என்று சகலராலும் பாராட்டப்படுமளவுக்கு அவரது அர்ப்பணிப்புடனான சேவை அமைந்திருந்ததில் ஐயமில்லை.

தாம் புகுந்த இடமான வல்வெட்டியில், உறங்கு நிலையில் இருந்த இ.த.க.பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்று கல்விசார் கல்விசாரா நடவடிக்கைகள் அனைத்திலும் இப்பகுதியிலுள்ள பெரும்பெரும் பாடசாலைகளிலும் கூடிய பெறுபேற்றைக் காட்டுமளவுக்கு இப்பாடசாலையைத் தரமுயரச் செய்த ஓர் செயல் வீரன்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த) பரீட்சை என்பனவற்றில் இப்பாடசாலையின் பெறுபேறுகள் உயர்மட்டத்தில் காணப்பட்டமையானது, கல்விசார் நடவடிக்கையில் இவர் பாடசாலையில் ஆற்றிய சேவையின் அறுவடையே!

தமது சுயவிருப்பில் வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து யாழ் கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்று, யா/செங்குந்த கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி தற்போது மணிவிழாக் காண்கின்றார்.

மணிவிழா நாயகனுக்கு ஒருபுறம் சேவை நயப்பு விழாவும், மறுபுறம் ஓய்வுநிலைக்கான கால்கோல் விழாவும் கொண்டாடப்படவுள்ள இச்சந்தர்ப்பத்தில் இவரது மனிதம் சார் பண்புகளைத் தொகுத்து இந்நாளில் நினைவு கூர்வதே பொருத்தமானது.

முதலிலே அவரின் குடும்பம் என்று நோக்கும் போது, "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" என்ற வள்ளுவத்துக்கு அமைய வாழ்ந்து காட்டியவர். இல்லத்தரசிக்கு நல்லதோர் கணவராக வாழ்ந்தவர். "சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே" என்ற சங்ககால சிந்தனைக்கமைய தம் புதல்வரை அவையத்து முந்தியிருக்க செய்துள்ளார். அவரின் நான்கு பிள்ளைகளுள் முதல் இருவரும் கணித ஆசிரியர்களாகவும், மற்றைய இரு பிள்ளைகளில் ஒருவர் கட்டடக் கலைப் பட்டதாரியாகவும், மற்றையவர் வைத்தியத்துறைப் பட்டதாரியாகவும் கல்வியைத் தொடர்கின்றமை தக்க சான்றுகளாகும்.

"ஙப் போல் வளை" என்ற ஔவை வாக்குக்கு இலக்கணமாக தம் உறவினரைத் தினமும் அனுசரித்து வாழ்ந்து காட்டிய பெருந்தகை!

குலம், அருள், தெய்வக் கொள்கை, மேன்மை, கலை பயில் தெளிவு, கட்டுரை வன்மை எனப் பவணந்தி குறிப்பிடும் நல்லாசான் இவர்!

"மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் அன்னார்" என்ற இலக்கணமாக உயிரைவிட மானத்தையே பெரிதாக மதித்தே இவரது வாழ்க்கை சென்று கழித்தமை கண்கூடு!

மனித உறவுகளில் மேலானது நட்பு, உடுக்கை இழந்தவன் கைபோல் நண்பர் இடுக்கண் களைவதிலே முன்நிற்பவர்.

அன்பு பண்பாகவும், அறன் பயனாகவும், கண்டவர். ஈதல் இசைபட வாழ்ந்தவர் இவர் வாழ்வு.

நல்லாசிரியருக்கான மலர் முகம், மலையளவு நெஞ்சுறுதி, அகழ்வாரைத் தாங்கும் நிலமனைய பொறுமை மிக்கவர். எல்லாக் குணங்களையும் சேர்த்து இறைவன் தாயைப் படைத்தவாறே இவரையும் படைத்தான் போலும்!

பாரதியாரின் கண்ணன் என் சேவகனிலே, "எங்கிருந்தோ வந்தான்" எனத் தொடங்கி "நண்பனாய் மந்திரியாய் நல்லாசானுமாய் பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனுமாய்" எனப் பாடியுள்ளவாறு, ஈங்கிவனை நாம் பெறவே என்ன தவம் செய்துவிட்டோம்?

ஆன்மீகப் பயணம் இனிதாய் அமைந்து அனைத்து வளமும் பெற்று "மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே" என இன்புற்று வாழ இறைஞ்சுகிறேன்.

**திரு.க.கனகரத்தினம்**
*ஓய்வுநிலைப் பிரதேச செயலர்,*
*நல்லூர்.*



# கண்ணியம்மிக்க அதிபர்

யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து அகவை அறுபதை அடையும் மணிவிழா நாயகன் கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மணிவிழா நாயகனும் நானும் ஒரே காலத்தில் ஒரே பாடசாலையில் கல்வி கற்றவர்கள். அவர் பச்சிலப்பள்ளியையும் நான் தென்மராட்சியையும் பிறப்பிடமாகக் கொண்டாலும் அக்காலத்தில் இரண்டு பிரதேச மாணவர்களையும் ஒன்றிணைக்கும் மிகச்சிறந்த பாடசாலையாக உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் விளங்கியது. இப்பாடசாலையில் வினைத்திறன் மிகு ஆசிரியர்கள், அதிபர்கள் சேவையாற்றிய காலத்தில் நாம் கற்றமை பெரும் பாக்கியமாக கருதுகின்றோம். மணிவிழா நாயகன் எனக்கு மூத்தவரான என் சகோதரனுடன் கல்வி கற்றதை அறிவேன். பள்ளிக்கு வரும் போது சந்தனப் பொட்டுடனும் புதிய சைக்கிளிலும் வந்த காட்சி என் மனதில் இப்பொழுதும் நினைவில் உள்ளது. மணிவிழா நாயகன் கல்வி கற்ற பொழுது நல்லொழுக்கம் மிக்கவராகவும், சைவ பாரம்பரியங்களை முறையாக கடைப்பிடிப்பவராகவும், ஆசிரியர்களின் நன்மதிப்பிற்குரிய வராகவும் விளங்கினார். பாடசாலைக் காலத்தில் கற்றதோடு மட்டும் நின்றுவிடாது விளையாட்டு தமிழ்மன்ற செயல்பாடுகளில் ஈடுபாட்டுடன் செயல்பட்டார்.

மணிவிழா நாயகன் ஆசிரியராக அதிபராக தான் பிறந்த மண்ணில் நீண்ட காலம் சேவையாற்றியுள்ளார். வடமராட்சியில் அதிபராக சேவையாற்றிய காலத்தில் சமூகத்தின் நன்மதிப்பையும் கல்வி சமூகத்தின் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளதை நாம் அறிவோம்.

யாழ் கல்லி வலயத்தின் செங்குந்த இந்துக் கல்லூரியில் அதிபராக நியமனம் பெற்ற பொழுது அவருடைய தொடர்பு ஏற்பட்டது. பாடசாலை அதிபருக்குரிய ஸ்தானததில் இருந்து மிகக்கண்ணியமாக நடாத்தினார். பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்களின் மனங்களை வென்றவராக வலம் வந்தார். மாணவர்களின் கல்வி அடைவை மேம் படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். வகுப்பறைகளில் தானே கற்பித் தலில் ஈடுபட்டார். பாடசாலையே தனது வீடாகக் கருதினார். எந்நேரமும் பாடசாலையில் நின்று செயல்பட்டார். இதனால் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றார். எனது கோட்டத்தின் அதிபர்

சங்கத்தின் தலைவராக இருந்து பல காத்திரமான கருத்துக்களை முன்வைத்ததுடன் பல செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்பட்டதை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

எமது வலயத்தில் குறுகிய காலம் அதிபராக சேவையாற்றினாலும் பாடசாலையின் வினைத்திறன் மிக்க சேவையின் மூலம் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்ற மணிவிழா நாயகன் நீண்ட காலம் இம் மண்ணில் வாழ்ந்து சமூகப் பணியில் ஈடுபட இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**திரு. அ. அகிலதாஸ்**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர், (கல்வி முகாமைத்துவம்)*
*யாழ். கல்வி வலயம்.*



# ஓய்வுபெற்ற அதிபர் க.தருமகுலசிங்கம் ஒரு குறிப்பு

அந்த வெண்குன்று மலைகள் அருகே அல்லி மலர்கள் நிறைந்த பொய்கை, மறுபுறம் பரந்த வெளி, மாடுகள் எங்கும் பரவி நின்று மேய்ந்திருக்கும் காட்சி: அதற்கும் அப்பால் கேரதீவு பரவு கடல் கௌதாரி முனையையும் அரியாலை கொழும்புத் துறையையும் இணைத்து நிற்கும் அழகு. ஓங்கி வளர்ந்த ஆலமரங்கள், மணல்குன்று களோடு நிமிரும் பனைகள். இவற்றை இரசித்தபடி கொளுத்தும் வெய்யிலை மறந்தபடி சங்குப்பிட்டி பூநகரி பாதையில் பஸ்ஸைவிட்டு இறங்கி பொடி நடையில் 10கிலோ மீற்றர் நடந்து வந்து இந்த அழகை இரசித்து நின்ற வேளையில் காலை 8.00 மணியளவில் கௌதாரிமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் சைக்கிளில் பாடசாலை அருகே வந்து சேரவும் நான் புதிய ஆசிரியர் என அறிமுகம் செய்யவும் "வாங்கோ தம்பி" என்று அவர் வரவேற்கவும் நமது கல்வி சார்ந்த உறவு 1982 ஏப்ரலில் ஆரம்பமாகியது. பின்னர் அது அதிபர் ஆசிரியர் உறவுக்கு அப்பால் அண்ணன் – தம்பி உறவாகி பளையில் அவர் அப்பா, அம்மா, சகோதரர்களும் எமது உறவாகி, கூடிக்களித்து, அமுதுண்டு இயற்கை எழில் கொண்ட வேம்போடுகேணிக் கிராமத்தின் விருந்தோம்பலை சுவைக்கும் வாழ்வாகியது. தொடர்ந்த காலங்களில் வெவ்வேறு களங்களில் இருவரும் பணி புரிந்த போதும் திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள் நிரந்தர அதிபராக சோரன்பற்றிலும், வல்வெட்டியிலும் திருமண பந்தம் காரணமாக இடம் மாறியும் அடியேன் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் பணி காரணமாக புலம் பெயரவும் காட்சிகள் மாறினாலும் அன்புறவு இன்று வரை தொடர்வது அன்பினால் மட்டுமே சாத்தியமாகியது.

***"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்".***

இன்று கடந்த இரண்டு வருடங்களாக செங்குந்த இந்துக்கல்லூரியில் அதிபராக இருந்து அரும்பணி புரிந்து ஓய்வு பெறும் நிலையில் கடந்த 34 வருட பாசத் தொடர்பையும் தொடர்ச்சியையும் கண்டு இறும்பூதெய்துகிறேன். அன்பு அண்ணனின் குடும்ப வளர்ச்சிகள் சிறப்புகள் என்பவற்றையும் வாழ்த்தி ஓய்வு நிலையிலும் கல்விச்சேவை சமூக சேவையாக மாறி ஒரு புதிய பரிமாணம் எடுக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
*சிரேஷ்ட ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளரும்,*
*மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும்.*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



# மறக்கமுடியா பண்பாளர்

தென்மராட்சி மண்ணின் மைந்தனாகப் பிறந்து, வடமராட்சி மண்ணின் பெருமைக்குக் காரணமாக வாழ்ந்த கல்வியியலாளனாக அதிபர் தருமகுலசிங்கம் அவர்களைப் பார்க்கின்றேன்.

வடமராட்சியின் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய பங்காற்றிய தருமகுலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் செங்குந்த இந்துக் கல்லூரியின் அதிபராகிய காலம் தொடக்கம் இன்று வரை அவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. பாடசாலையின் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்ற காலம் தொடக்கம் இன்றுவரை பெற்றோர், ஆசிரியர், மாணவர் தொடர்பாக அவரது அணுகுமுறைகள் மற்றைய நிர்வாகிகளுக்கு பின்பற்றலுக்கு உரிய விடயமாக நான் பார்க்கின்றேன். ஆசிரியர் இல்லாத எந்த வகுப்பாயினும் தான் சென்று பாடம் எடுப்பதை பல தடவைகள் பார்த்திருக்கின்றேன். அதுமாத்திரமல்ல பிற்பகல் வேலைகளில் விசேட வகுப்புக்களை தான் நடாத்தி, மற்றைய ஆசிரியர்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்ததை கண்டிருக்கின்றேன். இத்தகைய மாண்புநிறை அதிபரின் ஓய்வு யாழ்/செங்குந்த கல்லூரியில் ஓர் பாரிய இடைவெளியினை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் வயது அவருக்கு ஓய்வைக் கொடுத்தாலும், அவர் இப்பாடசாலைக்கு ஆற்றிய பணிகள் காலத்தில் அழிக்கப்பட முடியாதது. அதிபர் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.மாணிக்கராசா**
*பிரதிக்கல்விப் பணிப்பாளர், (கல்வி அபிவிருத்தி)*
*யாழ்ப்பாணக் கல்வி வலயம்,*
*யாழ்ப்பாணம்.*



# வாழ்த்துச்செய்தி

கல்வியாலும், கடமையுணர்வாலும், நற்பண்புகளாலும் பலரது அபிமானத்தைப் பெற்ற அதிபர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா குறித்து வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியெய்துகிறேன். பளை மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியாற்றிய காலந்தொட்டு இன்று வரை நான்கு தசாப்தங்களாக என் அன்புக்குப் பாத்திரமான விழா நாயகனின் சிறப்பை நன்கு அறிவேன். எப் பொறுப்பையும் நேர்த்தியாக நிறைவேற்றி தன் தூய பணியால் உயர்வு பெற்றவர் இவர். பிறந்த மண்ணிலும், புகுந்த மண்ணிலும், பணி செய்த இடங்களிலும் தன் ஆளுமையால் பலரது கௌரவத்துக்குரியவராக விளங்கும் இவர் சகல சௌபாக்கியங்களுடனும், நிறைவாக வாழ இதய பூர்வமாக வாழ்த்துகிறேன் வணங்குகிறேன்.

**திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
***இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்***
***தென்மராட்சி கல்வி வலயம்.***



# பிரதி அதிபரின் வாழ்த்துச்செய்தி

எமது பாடசாலையின் அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் மணிவிழா சிறப்பிதழாக வெளிவரும் யா/செங்குந்த இந்துக்கல்லூரியின் "சுடரொளி" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் ஏறத்தாழ முப்பத்தொன்பது வருடகால அரச சேவையை நிறைவு செய்து 22.04.2016 அன்று ஓய்வு பெறுகின்றார். தனது முப்பத்தொன்பது வருடகாலச் சேவையில் ஆசிரிய பயிற்சி கல்லூரி தவிர ஒன்பது பாடசாலைகளில் சேவையாற்றியுள்ளார்.

ஒரு நல்ல ஆசிரியரிடம் ஒரு நல்ல அதிபரிடம் எவ்வாறான பண்புகள் இருக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் தன்வசம் கொண்டு அரும்பணியாற்றியவர் குறிப்பாக, நேர்மை, பொறுமை, நல்லறிவு, புன்சிரிப்பு, வளமுகாமை, தூரநோக்கு என்னும் பண்புகளை தன்வசம் கொண்டவர். எமது அதிபரிடம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றது. பல்வேறு சவால்கள் நிறைந்த இன்றைய சமூகத்தில் எமது அதிபர் போன்ற அர்ப்பணிப்பு மிகுந்த அதிபரை காண்பது அரிது.

அறுபது வயதானாலும் அவரின் கல்விப்பணி மற்றும் சமூகப்பணி தொடரும் என நம்புகின்றேன். இவர் தனது ஓய்வு காலத்திலும், மனைவி பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்களோடு சீரும் சிறப்பாகவும், உடல் ஆரோக்கியத்தோடு நீடூழி வாழ மனநிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு.இ.பாலச்சந்திரன்**
*பிரதி அதிபர்*
*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*
*திருநெல்வேலி.*



# சுடரொளியே நீ வாழி....

செங்குந்த இந்துக் கல்லூரியின் மலராகிய சுடரொளி கடந்த 57 ஆண்டுகளாக வெளிவருவதையிட்டு மனம் மகிழ்கின்றோம். இவ்வாண்டும் அதிபர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களது மணிவிழாவையும் பணிநயப்பையும் முன்னிட்டு வெளியிடப்படுவது பாராட்டிற்குரியது 2013 ஆம் ஆண்டிலும் அப்போதைய அதிபர் அவர்களை கௌரவித்து வெளியிடப்பட்டது. மூன்று ஆண்டுகளின் பின் சுடர் பரப்பி மலர் வெளிவருகின்றது. நீண்டதொரு கல்விப்பாரம்பரியத்தையும், பண்பாட்டையும், தனித்துவத்தையும் கொண்ட இக்கல்லூரி பன்முக ஆளுமை கொண்ட சமய, சமூகத் தலைவர்களையும் கல்விமான்களையும், தொழில் விற்பன்னர்களையும் உருவாக்கி உலகெலாம் பெயர் சொல்ல வைத்துள்ளது. ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழுகின்ற, வாழ்ந்த புகழ் பூத்த நல்லாசிரியர்களையும், அதிபர்களையும் தந்த சிறப்பிற்குரிய இக்கல்லூரியில் சிலகாலம் அதிபராக இருந்து ஓய்வுபெறும் தற்போதைய அதிபரையும் அவரது சேவையையும் நயந்து போற்றுகின்றது கௌரவிக்கின்றது. அத்துடன் கல்லூரிக்கு பெருமை சேர்க்க பிரதி அதிபராக கடமையேற்றுள்ள திரு.இ.பாலச்நதிரன் அவர்களையும் வாழ்த்தி வரவேற்கின்றோம். கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றி வரும் எமது சங்கம் மணிவிழா நாயகனை வாழ்த்துவதோடு, சுடரொளியை வெளியிடும் அன்பு உள்ளங்களையும் பாராட்டுகின்றது. சுடரொளி மலர்ந்து மணம் பரப்பிட இனிதே வாழ்த்துகின்றோம்.

**திரு.கா.சண்முகதாஸன்**
*செயலாளர்*
*பழைய மாணவர் சங்கம்*
*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*



# வாழ்த்துச்செய்தி

வாழ்க வளமுடன்

"உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்ற எமது கல்லூரியின் மகுட வாசகத்திற்கு அமைய மேன்மையுறு கல்விச் சேவையினை மனநிறைவு கொள்ளும் வகையில் திறம்பட ஆற்றி அகவை அறுபதினை பெருமையுடன் நிறைவு செய்யும் மணிவிழா நாயகனாம் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களை மனதார வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தனது சேவைக் காலத்தில் ஆசிரியராகவும் எமது கல்லூரியில் சிறந்த அதிபராகவும் கடமையாற்றினார். "அடக்கமும் பணிவும் உயர்வின் படிக்கற்கள்" என்பதை செயல் மூலம் உணர்த்தி கல்விச் சமூகத்திற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்டார். எல்லோருடனும் மனிதநேய உறவுகளைப் பேணி தன்னுடைய பணிகளை ஆற்றினார். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடனும் அன்பாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டவர்.

இவர் தனது ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும் சீருடனும் சிறப்புடனும் இனிதே வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதுடன் பாடசாலை அபிவிருத்திக்குழு சார்பில் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


**திருமதி.ற.ரமேஸ்**
*செயலாளர்*
*பாடசாலை அபிவிருத்தி குழு*
*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*



# வாழ்த்துச்செய்தி

"என்னை இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்பதற்கமைய போற்றுதற்குரியது ஆலயம் மட்டுமல்ல கற்ற கல்லூரியும் தான். திருநெல்வேலி கிழக்கிலே 1934ஆம் ஆண்டு விஜயதசமி அன்று உருவாகிய எமது கல்லூரி இன்று 82 அகவைதனை நிறைவு செய்து கல்விப்பணி ஆற்றி வருகின்றது. பல்லாண்டுகள் வளர்ச்சியின் உச்சத்தையும் சில ஆண்டுகள் நலிவையும் சந்தித்த இக்கல்லூரி தேசியத்திற்கும், தேசத்திற்கும் சொத்தானவர்களை உருவாக்கிய பெருமைக்குரியது. கல்விப்புலத்திலே பேராசிரியர்களையும், வைத்திய நிபுணர்களையும், பொறியியலாளர்களையும், தொழில்சார் விற்பன்னர்களையும் தந்த பெருமைக்குரியது. எமது ஊரின் அறிவாலயமாக விளங்கும் இக்கல்லூரித்தாய்க்கு அவளது பெருமையை உலகிற்கு எடுத்தியம்பும் வகையில் 1959ஆம் ஆண்டு முதல் சுடரொளி எனும் மலர் வெளியிடப்பட்டதாக அறிகின்றோம். சிற்பி ஐயா அவர்களால் உருவாக்கப்பட்ட இம் முயற்சி இன்றுவரை தொடர்வது பாராட்டிற்குரியது. கல்லூரி அதிபரது பணிநயப்பினை சிறப்பித்து வெளிவரும் இம் மலரை வாழ்த்துவதோடு இம் முயற்சியில் பங்கேற்ற உள்ளங்களையும் பாராட்டுகின்றேன். கல்லூரித்தாயின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் எம் முன்னேற்றம் அதை வாழ்த்தி வரவேற்றிடுவோம்.

**திரு.சின்னத்துரை தர்மகுலசிங்கம்**
*பழைய மாணவர் சங்கம் சார்பாக*
*இலண்டன்.*



# வாழ்வில் ஒளியேற்றிய அதிபர்

யாழ் செங்குந்த இந்துக் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு. கந்தையா தருமகுலசிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

அதிபர் அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்தவர். சாந்தமும் சாதுரியமும் கொண்டவர். எமது சங்கத்தோடு பலமுறை தொடர்புகொண்டு பாடசாலையின் வளர்ச்சி பற்றி எம்மோடு கலந்துரையாடி பாடசாலையின் தேவைகளை எமக்கு உணர்த்தியவர். இவரது பணிக் காலத்தின் போது பல பிரபல பாடசாலைகளில் ஆசிரியராகவும், அதிபராவும் பணியாற்றியதன் மூலம் அளப்பரிய கல்விச் செல்வத்தை வாரி வழங்கி பல மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர். கடந்த மூன்று வருடங்களாக ஒரு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பாடசாலையாகிய யாழ் செங்குந்த இந்துக்கல்லூரில் தனது கால் தடங்களைப் பதித்து இக் கல்லூரியின் வளர்ச்சியில் பங்குகொண்டு தனது அறுபதாவது அகவையில் ஓய்வு நிலைக்குச் செல்லும் அதிபர் அவர்கள் தனது ஓய்வு காலத்தை, இன்பமாகக்களிக்கவும், நலம் பலபெற்று பல்லாண்டு வாழவும் யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் சங்க கனடாக் கிளையின் சார்பில் நல் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வி. இராமச்சந்திரன்**
*தலைவர் - யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மணவர்*
*ஆசிரியர் நலன் விரும்பிகள் சங்கம்*
*கனடா கிளை*



# உத்தமரே நீடூழி வாழி

எமது கல்லூரியின் அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களது மணிவிழாவைக் கொண்டாடுகின்ற இந்த நன்நாளில், யா/செங்குந்த இந்துக் கல்லூரியின் "சுடரொளி" சஞ்சிகையும் எல்லோரினது மடிகளிலும் தவழ்வதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மணிவிழா நாயகன் நம் கல்லூரியின் அதிபர் அவர்கள், எமது கல்லூரியில் பணியாற்றிய காலம் மிகவும் குறுகியது எனினும், அவரது சேவை, சாதனை அளப்பரியது. அவரது சேவைக்காலத்தின் பணி எமது பாடசாலைக்கு கிடைத்தது நாம் செய்த பாக்கியம் என்றே கூறவேண்டும்.

பாடசாலையின் பெறுபேற்று மட்டத்தை உயர்வடையச் செய்ய வேண்டுமாயின் முதலில் திட்டமிடல் அவசியம். அந்த வகையில் பல்வேறு விதமான கோணங்களில் திட்டங்களை வகுத்து, செயற்படுத்தி, மேற்பார்வை செய்து, அதற்கான தவறுகளை திருத்தி, பாராட்டி, உற்சாகப்படுத்தி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அயராது உழைத்த உத்தமருக்கு மணிவிழாவைக் கொண்டாடுகின்ற பெரும்பேறு எமக்குக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு ஆசிரியர் நல்லுறவு மன்றம் சார்பாக அவர் தனது ஓய்வுக் காலத்தில் என்றும் சீரும் சிறப்புமாக குடும்பத்தாருடன் வாழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிற்கின்றேன்.


**திருமதி.வ.கேதீஸ்வரசர்மா**

*செயலாளர்,*

*ஆசிரியர் நல்லுறவு மன்றம்*

*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*



## அதிபர் வரலாறு

# ஆசிரியத்துவத்தின் அடையாளம்

"வாத்தியார் வாத்தியார் என ஊரவர்கள் எல்லோராலும் அன்பாய் அழைக்கப்பட்ட அதிபர் தருமகுலசிங்கம் அவர்களிற்கு அகவை அறுபது ஆகிவிட்டது என்பதை நம்பமுடியவில்லை என்றாலும் காலச்சக்கரத்தின் வேக வீச்சை யாரால் தடுக்கமுடியும்.

ஆம் ஈழத்தமிழர் குறியீடாய் நிமிர்ந்து நிற்கும் பனை வளமும், தென்னஞ் தோப்புக்களும் சூழ்ந்திருக்கும் பச்சிலைப்பள்ளியெனும் பேரூரில் பழம்பெரும் நவனிவெளி அம்மன், ஞானவைரவர் ஆலயங்கள் நடுவே அமைந்த சிற்றூர்தான் மேம்போடுகேணி. இவ்வூரின் தலை மகனாய் வாழ்ந்த அமரர் கந்தையா அவர்களின் நான்கு ஆண் சிங்கங்களில் மூன்றாவது சிங்கம்தான் இவ் மணிவிழா நாயகன் திருவாளர் தருமகுலசிங்கம் அவர்கள்.

பண்பாடுமிக்க விவசாயக் குடும்பத்தில் பிறந்து கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க.பாட சாலையில் ஆரம்பக்கல்வியை நிறைவுசெய்து உயர்தரக்கல்வியை யா/உசன் இராமநாதன் கல்லூரியில் நிறைவுசெய்து ஆசிரியப்பணிக்கு வரும்வரை சிறிது காலம் அயலூர் இத்தாவில் பகுதியில் தென்னை அபிவிருத்திச்சபைக்கு சொந்தமான தென்னந்தோட்டத்தில் உத்தியோகத்தராக பணி யாற்றியிருந்தார்.

நான் அறிந்தவரை இவரது தந்தையார் அமரர் கந்தையா அவர்கள், நாமெல்லாம் போர் சூழ, ஊர் பிரிந்து செல்லும்வரை சமூகத் தொண்டுக்கும், ஆத்மீக வாழ்வுக்குமாய் தன்னையே அர்ப்பணித்தவர் எனலாம். மாரி மழை பொழிந்தால் எம்மூர் சிறு தீவுபோல் ஆகிவிடும் அப்போதெல்லாம், வெள்ளநீர் வழிந்தோட, வாய்க்கால் வெட்ட, ஊரையே கூட்ட பெரிய கறுப்புக் குடையோடு புறப்பட்டு விடுவார்.

எமது கந்தையா அண்ணர் வளர்த்த பிள்ளைகளும் அவர் வழியில் சமூகத் தொண்டுக்கு முதன்மை நல்கி வாழ்கின்றனர் எனலாம். எந்நிலையிலும் ஒழுக்கம், கட்டுப்பாட்டை மீறாத நற்பண்புகள் நிறைந்த குடும்பமாக இவர்களது இல்லம் எம் ஊரவர்களால் பார்க்கப்பட்டது.

எண்பதுகளிற்கு முற்பட்ட காலத்தில் எம்மூர் பாடசாலையில் அதிபராய் திருவாளர் குமாரசாமி அவர்கள் இருந்தார்கள். மிகவும் கண்டிப்பான இவர் காலத்து

மாணவனாய் எமது மணிவிழா நாயகன் அவர்கள் வேட்டிகட்டியே பாடசாலைக்கு சென்ற நினைவினை மீட்டிப் பார்க்கின்றேன்.

ஆசிரியப் பணிக்கு வரமுன்னர் மிடுக்கான இளைஞனாக இருந்து இவரது சமூகப்பணியானது இவரது வீட்டுக்கு அருகாக இருந்த வைரவர் ஆலயத்திலும், நவனிவெளி அம்பாள் ஆலயத்திலும், சச்சார்வெளி பிள்ளையார் ஆலயத்திலும் கண்டோம். இதேபோல் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இவரது பொதுப்பணி மிளிர்ந்தது. இவரது தந்தையின் அர்ப்பணிப்பான சமூக ஈடுபாடே அவரது நான்கு ஆண்பிள்ளைகளும் தந்தையின் அடியொற்றி சமூகத்தோடு ஒன்றிணைந்து செயற்படலுக்கு காரணமெனலாம்.

எம் விழா நாயகரது இரு அண்ணர்களைப்போல் ஒரு படி மேற்சென்று பணிக்கு முன்னிற்பவர் இவரது கடைசித்தம்பி ஸ்ரீ என நாம் அன்போடு அழைக்கும் தம்பி குமாரகுலசிங்கம் அவர்கள் இவர் எமது ஊரின் மேம்பாட்டிற்காகவும் ஊரின் ஆலயங்களான நவனிவெளி அம்மன் குறிப்பாக கச்சார்வெளிப் பிள்ளையார் ஆலயங்களின் மீள் அமைப்புப் பணிகளில் ஆற்றிய பங்கினை இவ்வூர் சைவ மக்கள் மறக்க மாட்டார்கள்.

எமது வேம்போடுகேணியூரின் வீதியானது A.9 வீதியிலிருந்து புகையிரதக் கடவையினைக் கடந்து செல்கின்றது. கடந்தகாலப் போரால் மிகவும் சின்னா பின்னமாகிப்போன ஊரின் மீள் குடியேற்றத்தின் பின் அமைக்கப்பட்ட புகையிரதப் பாதையின் கடவை மீண்டும் உரிய இடத்தில் அமைய எமது மணிவிழா நாயகன் எடுத்த முயற்சியானது எம் ஊர் மக்களால் என்றும் நன்றி உணர்வோடு பார்க்கப்படுகின்றது.

நேரிய பார்வையும், நிமிர்ந்த நடையும் நெற்றியில் சந்தணப் பொட்டுமாய் தூய துகிலுடை தரித்து கம்பீரமாய் எம் வீடு கடந்து கடமைக்குச்செல்லும் அழகை சிறுவனாய் நின்று பார்த்த ஞாபகம் இன்றும் நிழலாடுகின்றது மிகவும் கண்டிப்பும், கடமையுணர்வும் மிக்கதோர் வாத்தியாராய் எமது கிளி/வேம்போடுகேணி சி.சி.த.கபாடசாலையில் ஆசிரியர் பணியை ஆரம்பித்து வயதில் இளையோரான எமக்கெல்லாம் வாய்த்ததோர் வழிகாட்டியாய், திகழ்ந்தார். அதிகமாய் அலட்டிக் கொள்ளாத இவர் கூறும் ஒவ்வோர் வார்த்தையிலும் அர்த்தங்கள் பல இருக்கும்.

தான் கற்ற பாடசாலையிலேயே முதல் நியமனம் பெற்று ஆசிரியப்பணி ஆற்றும் வாய்ப்பு எல்லோர்க்கும் அமையாது. ஆனால் இவருக்கு இப்பெரும் பேறு கிடைத்தது. இங்கு ஆரம்பகால பணி முடித்து தனது ஆசிரிய வாண்மையினை மேன்மை செய்வதற்காய் யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்று பயிற்சியினை

நிறைவாய் முடித்து வெளிமாவட்ட சேவையின் நிமித்தம் பொல/மன்னம்பிட்டி அ.த.க.பாடசாலையில் கடமையாற்றி மீண்டும் கிளிநொச்சி மாவட்டப் பணியிலே கிளி/கௌதாரிமுனை அ.த.க.பாடசாலையிலே அதிபராக பணிக்குச் சென்று மிகவும் கஸ்டப்பிரதேச பாடசாலை மாணவர் கல்வி மேம்பாட்டிற்கு இவர் ஆற்றிய பங்களிப்புக்கு பலனாக இப்பாடசாலையில் அதிபர் தரம் இவருக்குக் கிடைத்தது.

இப்பாடசாலை அமைந்திருக்கும் இடம் வெள்ளை மணல்மலைபோல் காணப்படும் இடமாகும். பயணம் செய்வது மிகவும் கஸ்டமான காரியம் குடிநீர் கிடைப்பதும் கோடையில் அரிது. இவ்வாறிருந்தும் இவர் இங்கு சீரிய பணியாற்றினர்.

அதிபர்தரம் கிடைத்த இவர் நான்காவது பாடசாலையாகப் பளைக் கல்விக் கோட்டத்திலுள்ள கிளி/சோறன்பற்று சி.சி.த.க பாடசாலையில் கடமையேற்று நீண்ட காலம் இவர் இங்கு ஆற்றிய பணியை இன்றும் பளை பேராலையூர் மக்கள் மறந்திலர்.

இவர் இங்கு பணியில் இருந்த காலத்தில் ஓர் நாள் அப்பள்ளிக்கு செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அங்கு போனபோது அக்காலத்திலேயே அவர் அலுவலகத்தை வைத்திருந்த அழகு, பாடசாலை வளாகத்தின் நேர்த்தி, மாணவர்களிற்கான கல்விச் செயற்பாடுகள் அதற்கான முன்திட்டமிடல் போன்ற பல விடயங்களைக்கண்டு வியந்தேன் அங்கு அவர் நீண்டகாலம் கடமைபுரிந்து இடமாற்றம் பெற்றபோது பேராவையூர் மக்கள் மன விருப்பின்றி விடைகொடுத்ததை எல்லோரும் அறிவர்.

பளையில் கடமை முடித்து நல்லதோர் அதிபரால் மட்டுமன்றி, தக்கதோர் குடும்பத்தலைவனாய் மணம் முடித்து மனையாளது ஊரது வல்வெட்டிக்கு குடிபெயர்ந்து யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தில் அதிபராய் அமர்ந்து அரும்பணியாற்றி, அதே இடம் யா/வல்வெட்டி இந்து த.க.பாடசாலையில் சுமார் பதினைந்து ஆண்டுகள் வரை ஆற்றிய பணியை கல்விப்புலம் சார்ந்தோர் என்றும் மறக்க மாட்டார். பெரும்பாலான அதிபர்கள் தமது பிள்ளைகளை வேறு உயர் பாடசாலைகளிலேயே கற்பிப்பதில் குறியாய் இருக்க, இவர் தனது நான்கு பிள்ளை களையும் தனது பாடசாலை யிலேயே கற்பித்து பல நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பெற்ற உயர் நிலையை தன் பிள்ளைகளும் பெற வைத்த உயர் குணம் படைத்த உத்தமர் எனலாம்.

இவர் பணியாற்றிய எந்தவோர் பாடசாலையிலும் மேற்பார்வைக்குச் சென்ற வலயக் கல்விப்பணிப்பாளர்களது பாராட்டைப் பெறத் தவறவில்லை. இதனாலேயே விண்ணப்பித்து தேர்வு செய்து வழங்கப்படும் சிறந்த அதிபருக்கான 'பிரதீபா பிரபா' விருதானது இவர் விண்ணப்பம் செய்யாமலே வலயப்பணிமனையே இவரது

பெயரினை சிபார்சு செய்து இவருக்கான மேற்படி விருதினை ஜனாதிபதியிடம் இருந்து இவருக்கு கிடைக்க வழிசெய்யப்பட்டதெனலாம்.

இத்தகைய பல சிறப்புக்களை இவர் பெறுவதற்குப் பக்கத்துத் துணையாகவும் நாளும் பொழுதும் உறுதுணையாகவும் இருப்பவர் இவரது மனைவி திருமதி.தனமணி தருமகுலசிங்கம் ஆவார். இவரது அடக்கமும் பொறுமையும் அதிபரின் உயர்வுக்கு மட்டுமல்ல அவரது குடும்பத்தின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்புடையதாக அமைந்திருந்தது.

இவர் சுந்தரம் சரஸ்வதி ஆகியோரின் மகளாக 15.04.1957ம் ஆண்டு வல்வெட்டியில் பிறந்தார். இவருக்கு குலேந்திரராஜா, நாகேந்திரன், சுபேந்திரன் எனும் மூன்று சகோதரர்களும் தவமணி என்னும் சகோதரியும் உண்டு. இவர் தனது ஆரம்பக் கல்வியை வல்வெட்டி இ.த.க. பாடசாலையில் கற்று உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, உடுப்பிட்டி அ.மி.பாடசாலையிலும் உயர்கல்வியையும் கற்றுத் தேர்ந்தார். இவர் திரு.தருமகுலசிங்கம் அதிபரை 1985.04.11 திருமணம் செய்து கொண்டார். அன்றிலிருந்து இன்று வரை தன் குடும்பத்திற்காக பூரணமாக உழைத்து வரும் நல்லதொரு குடும்பப் பெண்மணி.

எம் அதிபர் அவர்கள் தம்மைப்போல் தனது நான்கு பிள்ளைகளில் மூத்த இருவரையும் ஆசிரியத் தொழிலுக்காய் அர்பணித்துள்ளதுடன் மூத்த மகளுக்கான வரனையும் ஆசிரியராகத் தேடிக்கொடுத்துள்ளார். அடுத்த மகள் சஞ்சியா அவர்களும் மருத்துவத்துறைக்கு தெரிவாகி எமது வேம்போடு கேணியூரிற்கு பெருமை சேர்ந்த்துள்ளார் எனலாம். கடைசி மகனும் நவீன தொழில்நுட்பக் கற்கை நெறி பட்டப்படிப்புக்காய் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி உயர்வு பெற்றுள்ளார். எனவே இவரது பிறர் பிள்ளை தலை தடவலுக்காய் இவரது நான்கு பிள்ளைகளையும் இறைவன் நன்னிலைக்கு இட்டுச் சென்றுள்ளார்.

இவ்வாறு எல்லா இடத்திலும் பன்முக ஆற்றல்களோடு பணியாற்றிய இவரது சேவையின் மதிப்பினை உணர்ந்ததினாலேயே கல்விக்காய் முதன்மை நல்கும், நல்லூர் திருநெல்வேலிக் கல்விச் சமூகத்தினர் எத்தனையோ புகழ்பூத்த அதிபர்கள் அலங்கரித்த செங்குந்த இந்துவின் அதிபர் பதவியினை எமது விழா நாயகனுக்கு கடந்த மூன்றாண்டு களிற்கு முன்பு வழங்கிக் கௌரவப்படுத்தினர். எமது விழா நாயகன் அவர்களும் செங்குந்தவின் கல்வி வளர்ச்சிக்காய் உழைத்த உன்னத உழைப்பை உணர்ந்தமையின் வெளிப்பாடாகவே இக் கல்லூரிச் சமூகம் எடுக்கும் இப்பெரும் மணிவிழாவினைப் பார்க்கமுடிகிறது.

எம் மணிவிழா நாயகன் அவர்கள் கல்விப்பணி, சமூகப்பணி, ஆத்மீகப்பணி என ஆய்ந்த பணியெல்லாம் ஆற்றி தனது வாழிடத்தையும் நல்லூர் கந்தனது மணியோசை கேட்கும் தூர எல்லைக்குட்பட்ட வைமன் வீதியில் அமைத்து தனது மிகுதிக் காலத்தை மிகுந்த ஆன்மீக உணர்வுகளோடு களிப்பார் எனலாம்.

இறுதியாக அகவை அறுபது கண்டு பணி ஓய்வுபெறும் எமது பளை வேம்போடுகேணி ஊரின் முதல் வாத்தியாரராய் உருவாகி தனக்கென தனி முத்திரைகள் பல பதித்துள்ள அதிபர் உயர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்கள் பணி ஓய்வுக்காலத்திலும் நல்ல ஆரோக்கியத்தோடு பல்லாண்டு வாழ்ந்து எம் ஊரின் பெருமைக்கு என்றும் வழிசமைக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு எம் ஊர் பிறந்த இப்பெருமகனுக்கு விழா எடுக்கும் செங்குந்த இந்துக் கல்லூரியின் கல்விச் சமூகத்திற்கும், மணிவிழாக் குழுவிற்கும் எமது ஊரின் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவிக்கின்றேன்.

**திரு.கந்தையா சுந்தரலிங்கம்**
***(உ.ப.அதிபர்)***
***கிளி/வேம்போடுகேணி சி.சி.சி.த.கபாடசாலை***
***இத்தாவில் பளை***

## வாழ்க்கைத் துணையுடன் அதிபர்





# சேவை நலன் பாராட்டு வாழ்த்துப்பா

செய்கடமை மேலென்று கொண்ட நெஞ்சம்
சீருறவே அனைத்தினையும் ஆற்றும் கொள்கை
மெய்ம்மையுடன் முழுமையுறச் சேவை தன்னை
சேய்நலத்தைக் குறியாக்கி ஆற்றும் நோக்கு
பொய் கலவாப் பொது நோக்கோடிணைந்த சேவை
பிள்ளைகளின் மேன்மையினைக் குறித்த சிந்தை
தெய்வ அருள் நாடும் உயம் கொண்ட எங்கள்
உயர் தர்மகுலசிங்கம் அவர் நீடுவாழ்க!

மாணவரின் வாழ்வுயர வேண்டும் என்ற
மாண்புமிகு நற்கொள்கை நெறியாய்க் கொண்டு
வேண்டுபவை அனைத்தினையும் ஈயும் நல்ல
வழிநடந்து காட்டுபவர் பாதை நேர்மை
கண்டிப்புடன் கருணை எனும் இரண்டும் கண்ணாய்க்
கொண்டு அவர் ஆற்றி வந்த சேவைக்காக
கல்லூரி முழுமையுமே அவரை வாழ்த்தும்!
கடவுளவர் பாதையெங்கும் அருளே பெய்வான்!

நல்லவர்க்கே சோதனைகள் அதிகம் என்பார்
நல்லவரால் அடுத்தவர்க்கே நன்மை சேரும்
நலம் மிக்க நினைப்புள்ள பெரியோரெல்லாம்
நாடுவது யாவர்க்கும் நன்மையாகும்
உள்ளமதைச் செல்வமெனக் கொண்ட எங்கள்
உயர்ந்த மன அதிபர் அவர் ஓய்வுக்காலம்
தெய்வ அருள் காவலென நிற்கும் அன்புத்
தூய வழிதான் வெல்லும் அமைதி சேரும்!

தருமகுலசிங்கம் என நாமம் கொண்டவர்
தர்மம் அதைச் சிந்தையென ஏற்றுக் கொண்டார்
தர்மமதை அனைத்திலுமே காணும் ஆவல்
தன்மனதை ஆள்வதனால் புகழும் கொண்டார்
தர்மம் அதுதான் வெல்லும் என்னும் உண்மை
தருமகுலசிங்கம் அவர் வாழ்வின் உண்மை
தர்மத்தின் வழிகாட்டி அவர் என்றும் வாழ்க
தர்மத்தை நிலைநாட்டித் தரணியெலாம் ஆள்க!

**திருமதி.வி.சத்தியபாலன்**
*ஆசிரியர்*
*யா/செங்குந்த இந்துக்கல்லூரி*

# அதிபரின் 60 வது பிறந்தநாள் நிகழ்வுகள்



# செங்குந்த இந்துக் கல்லூரியின் வரலாறு

நல்லூர் இராஜதானியைச் சூழ வாழ்ந்த செங்குந்த மரபினர் மத்தியில் கந்தபுராண கலாசாரம் எத்துணை ஆழமாக வேரூன்றி இருந்தது என்பதற்கு அவர்கள் அமைத்த கந்தவாச மண்டபமே ஒரு சான்றாகும். இளையதம்பி சாத்திரியாரின் முகாமைத்துவத்தின் கீழிருந்த கொன்றலடி வைரவசுவாமி கோவிலுக்குச் சொந்தமான "பண்டாரி வளவு" என்றழைக்கப்பட்ட காணியில் 1932ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட கந்தவாச மண்டபம் அந்தக் காலத்திலே ஓர் அத்தாணி மண்டபமாக விளங்கியது. சங்க காலத்திலே கூடல் மாநகரிலே தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடித் தமிழை ஆராய்ந்தது போல இந்த கந்தவாச மண்டபத்திலே பெரியார்கள் ஒன்றுகூடித் சைவச்சிறார்களுக்கு சைவச் சூழலிலே ஆங்கிலக்கல்வி புகட்டுவதற்கான வழி வகைகளை ஆராய்வது வழக்கமாக இருந்தது. சண்முகதாச வித்தியாசாலை மூடப்பட்ட பின் அடுத்து என்ன செய்யலாம் என இப் பொரியார்கள் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்த காலகட்டத்திலே சட்டசபைத் தேர்தல் வந்தது. இத் தேர்தலில் போட்டியிட்ட இந்துபோர்ட் இராஜரத்தினம். "நான் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் இக் கந்தவாச மண்டபத்தை ஒரு இருமொழிப் பாடசாலையாக ஆக்கித் தருவேன்" என கந்தவாச மண்டப முன்றலில் நின்று வாக்களித்தார். துரதிஷ்டவசமாக அத்தேர்தலில் அவர் வெற்றிபெற முடியாமல் போனாலும், பாடசாலை நிறுவும் எண்ணத்தை அவர் கைவிடவில்லை. இதன் பயனாக 1934ஆம் ஆண்டு, புரட்டாதி மாதம் முதலாம் திகதி விஜயதசமி தினத்தன்று காலை திருவாளர்கள் சி.கந்தையா, ஐயாத்துரை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சுவாமிநாதன், பொ.கயிலாசபதி, சி.கந்தசாமிஐயர், பண்டிதர் வேதாரணியம், ச.நடராசா, பண்டிதர் சு.இராசையா முதலிய பெரியோர்கள் ஆசி கூற தனது பிறவியின் பயனை அன்றுதான் அடைந்ததுபோன்ற பெரு மகிழ்ச்சியுடன் இளையதம்பி சாத்திரியார் வாழ்த்துரைக்க இராஜரத்தினப் பெரியோனால் செங்குந்த இருமொழிப் பாடசாலை கால்கோள் ஆயிற்று. செங்குந்த குலப் பெரியோர்களின் பண உதவி கொண்டு அமைக்கப்பட்ட கந்தவாச மண்டபத்தில் அமைந்த இப் பாடசாலையின் பெயரோடு செங்குந்தா என்ற பெயரும் இணைந்திருக்க வேண்டும் என்பதில் இராசரத்தினப் பெரியோன் மிக்க ஆர்வம் காட்டினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கல்லூரியின் முதல் அதிபராக சுன்னாகம் குமாரசாமிப்புலவரின் மகனாகிய திரு.இ.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (1934–1943) அவர்கள் நியமிக்கப் பட்டார். இவரையே ஊசிக்குடுமி வாத்தியார் என அழைத்தனர். இவருடைய காலத்திலே தான் (1940 ஆம்) ஆண்டு நாடளாவிய JSC பரீட்சையில் எமது கல்லூரி 100% சித்திய பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்ததுடன் இதனைக் கௌரவித்து 09.04.1941 இல் பொது விடுமுறையாக விடப்பட்டது.

செங்குந்த சைவத்தமிழ் கலவன் பாடசாலை என்று உருவாகிய இப் பாடசாலை சபா ஆனந்தர் (இணுவில்), கந்தையா (இடைக்காடு), சின்னத்துரை (இடைக்காடு), விஜயரட்ணம் (நல்லூர்), எஸ்.விஸ்வலிங்கம், சிவபாக்கியம், சின்னப்பிள்ளை எனப் பலர் முதல் ஆசிரியர் குழாமாக பதவி ஏற்று இருந்தனர். தன்னலம் கருதாது இவர்கள் பணியில் சிறப்படைகின்றனர். அத்துடன் பத்து ஆண்டுகள் அதிபர் பணியில் சிறப்புற்று ஓங்கி உயர்ந்த திரு.முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்கள் ஓய்வுபெற உயர்திரு கணபதிப்பிள்ளை (1944–1967) எனும் பெரியார் அதிபர் பதவி ஏற்றார். இவர் உள்ளத்தால் கல்லூரியையும் மாணவரையும் ஆசிரியரையும் கொள்கைகளைக் கொண்டு பாடசாலையின் பல்பரிணாம வளர்ச்சிக்கு வித்திட்டார். இவரது காலத்திலே ஆண்கள் வேட்டி சால்வையுடனும் பெண்கள் நீளப்பாவாடை சட்டை தாவணியுடனும் கல்வி கற்கவந்தனர். இக் காலத்தில் ஒட்டக் கூத்தர் விழா நவராத்திரி விழா என்பன சிறப்பாக நடைபெற்று வந்தது. இவரது காலத்தில் 1 – 5 வரையான ஆரம்ப பிரிவு அதிபராக திருச.நடராசா (சின்னத்தலைமை வாத்தியார்) பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகளில் அதிகளவு சமயப் பெரியார்களும் அறிஞர்களும் பாதம் பதித்த ஓர் கல்லூரியாக விளங்குகின்றது. கலாயோகி சுத்தானந்த பாரதியார் (19.09.1978 இல்), திருமுருககிருபானனந்த வாரியார், பேராசிரியர் ஆ.ச.அழகப்பன் (18.10.1960 இல்), தவத்திருகுன்றக்குடி அடிகளார், புலவர்கோவிந்தர் போன்ற இந்திய அறிஞர்கள் பாதம் பதித்த சிறப்புடையது. இப்பாடசாலை 1949இல் செங்குந்த இந்து ஆங்கிலப் பாடசாலையாக வளர்ச்சி கண்டது. இதனால் 1959இல் முதல் முதலாக க.பொ.த உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பரீட்சைக்குத் தோற்றியமாணவர்கள் 100% சித்தியடைந்ததுடன் 90ற்கு மேற்பட்டோர் பல்கலைக்கழகத்திற்கும் தெரிவாகி அகில இலங்கையில் சாதனை படைக்கப்பட்டது. 1939இல் ஜே.எஸ்.சிக்கு முதலில் தோற்றியமாணவர்களும் 100% சித்தியடைந்ததுடன் ஒரு நாள் விசேட விடுமுறையும் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து எஸ்.பி.நடராசா (1986 – 1979) அவர்கள் அதிபராகக் கடமையேற்றர் இவரது காலம் சொற்பமெனினும் சீருடையையும் முகாமைத்துவ ஒழுங்குமுறையும் அறிமுகப்படுத்தியதுடன் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டினார். இவரது காலத்திலே தான் 4 இல்லங்கள் உருவாக்கப்பட்டது. விளையாட்டுப்போட்டி பொறுப்பாசிரியராக திரு.எஸ்.கோபாலசிங்கம் அவர்களை நியமித்து பாடசாலையில் மைதானம் இல்லாத போதும் சாதாரண மைதானத்தில் இல்ல விளையாட்டுப் போட்டியையும் ஆரம்பித்து வைத்தார். அத்துடன் பாடசாலையில் சாரணியத்தையும் அறிமுகப்படுத்திவைத்தார். தொடர்ந்து இலங்கை நாயகம் (1971 – 1972) அவர்கள் அதிபர் கடமை ஏற்றார். இவரது காலத்திலேயே பழைய மாணவர் சங்கத்தால் படக்காட்சி மூலம் சேர்க்கப்பட்ட நிதியினைக் கொண்டு சட்டநாதர் ஆலயத்திற்கு சொந்தமான காணி விளையாட்டு மைதானத்திற்காக விலைக்கு வாங்கப்பட்டது. இக் காலத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 5

வரை உள்ள மாணவர்கள் அயலிலுள்ள பாடசாலைக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு இப்பாடசாலையில் தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புக்கள் இடம்பெற்றன.

தொடர்ந்து 1973இல் சிறிது காலம் நாகராஜா என்பவர் அதிபராகக் கடமையாற்றினார். பின்னர் அவர் வவுனியா கல்விப் பணிப்பாளராகச் சென்றதும் திரு.இ.பொன்னம்பலம் 1974இல் அதிபராக வந்தார் இவரும் சிறிது காலம் கடமையாற்றி இக்கல்லூரியை வளர்ச்சியடையச் செய்தார். இவரைத் தொடர்ந்து திரு.வி.மகாதேவா (1975 – 1977) அதிபராகக் கடமை புரிந்தார். இவர் தன் காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார் இதன் பின் திரு.எஸ்.சிவப்பிரகாசம் (1978) அதிபராக வந்தார் இவர் கல்லூரி வளவிலேயே இருந்து அல்லும் பகலும் கல்லூரியை வளர்த்தார். இவரது காலத்தில் விளையாட்டு மைதானத்தில் அரங்கு அமைத்து வெகு விமரிசையாக தமிழ்த்தினவிழா கொண்டாடப்பட்டது.

இவருக்குப்பின் திரு.ப.சுவாமிநாதசர்மா (1979 – 1985) அதிபராகக் கடமையாற்றினார் இவரது காலத்திலே தென் மேற்குப் பக்கத்திலே அமைந்துள்ள கட்டடம் அமைக்கப்பட்டதுடன் வடக்குப் பக்கமாக முத்துக்குமாரசுவாமி மண்டபமும் வைக்கப்பட்டது அதில் சித்திர அறை, நூலகம் மனையியல் அறை என்பன அமைக்கப்பட்டது.

இவருக்குப் பின் இக் கல்லூரியில் நீண்ட காலம் கற்பித்துவந்தவரும் உப அதிபராக கடமையாற்றிவரும் இலக்கிய உலகில் குழந்தை ம.சண்முகலிங்கம் என அழைக்கப்பட்டவருமாகிய ம.சண்முகலிங்கம் என்பவர் (1986 இல்) அதிபராக அலங்கரித்தார் இவரது காலத்தில் தனக்குக் கிடைத்த அதிபர் பதவியை தன்னிலும் வயது கூடியவரும் ஆசிரிய நண்பரும் ஆகிய ம.சண்முகலிங்கத்திற்கு விட்டுக் கொடுத்த மு.பரமேஸ்வரன் உப அதிபரானார். இவரது காலத்திலே தான் பழைய மாணவர் சங்கத்தால் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டது. கல்வி, ஒழுக்கத்தில் பாடசாலை முன்னேறி வரும் நிலையில் இவர் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு விரிவுரையாளராக சென்றது எமது துர் அதிர்ஸ்டமே. அதிபர் ம.சண்முகலிங்கம் குறுகிய காலத்தில் கல்லூரியில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தியதாக வட்டாரக்கல்வி அதிகாரியாக இருந்த சு.சிவஞாயக மூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து திரு.வி.அரியநாயகம் (1987இல்) அதிபரானார். இவரும் ஓராண்டு காலத்துடன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து கல்லூரிச் சமூகத்தின் ஏகோபித்த வேண்டுகோளுக்கமைய கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியரும் உப அதிபருமாகிய திரு.மு. பரமேஸ்வரன் அவர்கள் 1988இல் அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் இக்கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியராக கடமையாற்றிய திரு.தி.நவரத்தினம் அவர்கள் உப அதிபரானார். இவரது காலத்தில் பிரதம கல்வி

அதிகாரியாக இருந்த இக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமாகிய திரு.சோமசுந்தரம் அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்தார். இவரது காலத்தில் 844 மாணவரும் 32 ஆசிரியர்களும் கல்லூரியில் இருந்துள்ளனர். இவருடைய காலத்திலே தான் கல்லூரியில் மூன்று நாட்கள் பிரமாண்டமான வைரவிழா நடைபெற்றதுடன் பழைய மாணவர்சங்கம் கல்லூரிக்கென ரூபா ஒரு இலட்சம் நிரந்தர வைப்பிலிடப்பட்டது. அது இன்று மூன்று இலட்சமாகப் பெருகி அதன் வட்டிப்பணம் மாணவர் கல்விக்கு பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் முன்னாள் அதிபர்கள் அனைவரதும் உருவப்படங்கள் பிரதான மண்டபத்திலே திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. அதிபர்களது குடும்ப உறவினர்கள் திரைநீக்கம் செய்து வைத்தனர். வைரவிழா மலர் வெளியிடப்பட்டதுடன் கல்லூரி வாயிலில் பெயர் வளைவும் அமைத்து கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கனிஷ்ட பிரிவின் அதிபரும் ஆகிய திரு.சரவணமுத்து நடராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவரது காலத்தில் 1991இல் எமது கல்லூரி சாரணர் அணி யாழ் பரியோவான் கல்லூரி கிரிக்கெட் அணியை தோற்கடித்துச் சாதனை படைத்ததுடன் நாட்டிய நாடகத்திலே மாவட்ட மட்டத்திலே இரண்டாம் இடத்தையும், பண்ணிசையில் முதலாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் திரு.த.நாகராஜா உப அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில் சிறிது காலம் திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை எமது கல்லூரியில் இயங்கியதுடன் ஒரு பகுதியில் திருமலையிலிருந்து இடம்பெயர்ந்தவர்களும் தங்கி யிருந்தனர். 1992இல் மாவட்ட சாரணர் விழா எமது கல்லூரியில் நடைபெற்றதுடன் சனி, ஞாயிறு தினங்களில் இலவச ஆங்கில வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. 1993இல் எமது கல்லூரி மாணவர்கள் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பங்கேற்றிருந்தனர். இக்காலத்தில் திரு.கி.ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் IIIஇல் பகுதித் தலைவராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் பிரமாண்டமான கல்விக் கண்காட்சி நடத்தப்பட்டு கோட்டமட்டப் பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன. 1994இல் மூதறிஞர்களாகிய க.சி.குலரத்தினம், வித்துவான் வே.ஆறுமுகம் ஆகியோரின் நினைவுப் பேருரைகள் இடம்பெற்றன. 1994 வரை இரு நேரப் பாடசாலையாக இருந்த இக் கல்லூரி 1994 யூன் முதல் ஒரு நேரப் பாடசாலையாகியது. 1995இல் பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில் பாவேந்தர் பாரதிதாசன் விழா. கவிஞர் விழாக்கள் என்பன கொண்டாடப்பட்டன. இக் காலப்பகுதியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிப் பொருட்கள் எமது கல்லூரியில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் மீளப் பெறப்பட்டன. 1995 ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வினால் கல்லூரி மூடப்பட்டது. இந் நிலையில் 25.10.1995இல் ஆ.இராஜகோபால் (செம்பியன் செல்வன்) அதிபராகக் கடமையேற்றார். இவர் கடமையேற்று 5 ஆம் நாளில் இடம்பெயர்ந்து தென்மராட்சி கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக எமது கல்லூரிஇயங்கியது. ஒரு சில மாதங்களின் பின் மீண்டும் சொந்த இடம் திரும்பி வந்து கல்லூரி இயங்க ஆரம்பித்தது. அப்போது 1996இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

எமது கல்லூரியில் ஒரு பகுதியில் இயங்கியது. பின் மீள சொந்த இடத்திற்குச் சென்றனர். 1998 இல் முத்தமிழ் விழா சிறப்புற இடம்பெற்றதுடன் பெண் சாரணியர் சின்னம் சூட்டும் விழாவும் இடம்பெற்றது. இக்காலத்தில் மாணவர் தொகை சரிவைச் சந்தித்தது.

இந்த நிலையில் 1999இல் திருமதி.சி.விஸ்வலிங்கம் அதிபராகக் கடமை ஏற்றார். இவருடைய காலத்திலே 2000ஆம் ஆண்டு விஞ்ஞான ஆய்வுகூடம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. 2001இல் திருமதி.ரூபராணி இராஜரட்ணம் உப அதிபராகக் கடமை ஏற்றார். இவர் இக் கல்லூரியின் பழைய மாணவியும் நீண்ட கால ஆசிரியரும் ஆவார். தொடர்ந்து 2003இல் திரு.க.வடிவேல் இலங்கை அதிபர் சேவை 2-ஐ ஐச் சேர்ந்தவர் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலத்திலே தான் முன்னாள் அதிபர் நினைவாக கனடா வாழ் முன்னாள் ஆசிரியர், பழைய மாணவர், நலன்விரும்பிகளால் பரமேஸ்வரன் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்ப வைப்பாக மூன்று இலட்சம் ரூபா (300 000) கனடா பழைய மாணவர் சங்கத்தால் திருமதி.வ.மனோன்மணி, திரு.தி.சிறீஸ்கந்தராசா, திரு.சி.அமிர்தலிங்கம் ஆகியோர் பெயரில் நிரந்தர வைப்புச் செய்யப்பட்டு வட்டிப்பணம் பாடசாலை அபிவிருத்தி சங்கக் கணக்கிற்கு வர ஏற்பாடு செய்யப்பட்டது. 2004இல் லண்டன் பழைய மாணவர் சங்கத்தால் 113,750/= பெறுமதியான கற்றல் உபகரணங்களும் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையிலேதான் கல்லூரி மாணவர் தொகை வீழ்ச்சியை நிறுத்தவும், கல்லூரியை வளர்ச்சிப் படியில் வீறுநடை போட வைக்கவும், கல்லூரி மீது பற்றுடைய பழைய மாணவர் ஒருவரை அதிபராக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டு செயலுருப்பெறவே 2008இல் திரு.இ.பாலகுமார் அவர்கள் அதிபராகக் கடமையேற்றார்.

இவருடைய காலத்திலே பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதிமூலம் 2008ல் ஒலிபெருக்கி பெறப்பட்டதுடன் பிரதான மற்றும் பிரார்த்தனை மண்டபங்களுக்கு மின் இணைப்பும் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் றோணியோ மெசின் ஒன்றும் அவுஸ்ரேலிய பழைய மாணவர் சங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன் சிலிங்கோ சரவணாஸ் நிதியுதவியுடன் இரண்டு கணனிகளும் பெறப்பட்டது. இவ் ஆண்டிலேயே 2008-2009 உயர்தர மாணவர் உதவியுடன் சரஸ்வதி சிலையும் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே கல்லூரிப் பழைய மாணவர் சங்க நிதி மூலம் கல்லூரி முற்றம் சீர் செய்யப்பட்டதுடன் விளையாட்டு, பரிசளிப்பு விழாக்களுக்கான உதவிகளும் வருடாந்தம் பெறப்படுகின்றது.

2009இல் பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் கல்வியமைச்சின் EKSP திட்டத்தின் கீழ் கணனிகளும் அதற்குரிய தளபாடங்களும் வழங்கப்பட்டன. இக்காலத்திலேயே சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் அமைக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே அவுஸ்ரேலியா வாழ் திருமதி.க.கிட்ணர் அவர்களால் (பழைய மாணவியும் முள்ளாள் உப அதிபரும்) ரூபா ஒரு இலட்சம் 03.01.2009 இல் திரு.ச.சிவானந்தம், திரு.தி.சிறீஸ்கந்தராசா, திரு.சி.அமிர்தலிங்கம் ஆகியோர் பெயரில் நிரந்தர வைப்புச் செய்து அதன் வட்டி கல்லூரி நூலக அபிவிருத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு கனடா பழைய மாணவர் சங்கத்தால் பழைய மாணவரும் முதல் பழைய மாணவ அதிபருமாகிய மு.பரமேஸ்வரன் நினைவாக மேலும் மூன்று இலட்சம் திரு.தி.சிறீஸ்கந்தராசா, திரு.சி.அமிர்தலிங்கம் ஆகியோர் பெயரில் (04.05.2011) நிரந்தர வைப்பிலிடப்பட்டு பரிசளிப்புக்கு அதன் வட்டிப் பணம் அபிவிருத்திச்சங்கம் ஊடாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாண்டிலேயே பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி மற்றும் பழைய மாணவர் சங்க உதவியுடன் போட்டோப்பிரதி இயந்திரம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது. 2010இல் பழைய மாணவன் எஸ்.தர்மசீலன் அவர்களால் கல்லூரிப் பழைய கட்டடம் திருத்தியமைக்கப்பட்டதுடன் லண்டன் வாழ் பழைய மாணவனாகிய சி.தருமகுலசிங்கம் அவர்களால் ரூபா 130,000 செலவில் Multi Media Projecter அன்பளிப்புச் செய்யப்பட்டது. வடக்கின் வசந்தம் மகசெம திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபா செலவில் பெருந்தெருக்கள் திணைக்கள உதவியுடன் கல்லூரி முற்றம் கொங்கிறீற் கற்கள் பதிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. இவ்வாண்டிலேயே 170,000/= செலவில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் பெற்றோர் பங்களிப்புடன் சமையலறை அமைக்கப்பட்டது. இவ்வாண்டில் சமூகசேவைத் திணைக்கள தமிழ்ப் பாடசாலை அபிவிருத்தித்திட்ட நிதியில் மேல் மாடி சுவர்களுக்கு கிறில் போடப்பட்டது. இதற்கு 236,557.50 செலவிடப்பட்டது. இவ்வாண்டில் கல்வி அமைச்சார் நடாத்தப்பட்ட தொழில்நுட்பப் போட்டியில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம்பெற்றமைக்காக பரிசாக இரண்டு Multi Media Projector, ஐந்து மடிக்கணனிகள், டிஜிற்றல் கமரா ஒன்றும் வழங்கப்பட்டது. அத்துடன் ஒருபானை திட்டத்தினரால் 42" தொலைக்காட்சிப் பெட்டி அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

எமது கல்லூரியில் 2011இல் உலக வங்கி உதவியுடன் 50ஒ40 அடி நீள செயற்பாட்டறை மேல்மாடியும் அமைக்கப்பட்டது. இவ்வாண்டில் அவுஸ்ரேலியா வாழ் பழைய மாணவனாகிய த.இராசலிங்கம் அவர்களால் 127,500ஃஶ்ரீ பெறுமதியான மின்பிறப்பாக்கியும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் கமராவும் பெறப்பட்டது. 2012இல் அமரர் மு.பரமேஸ்வரன் குடும்பத்தினரால் கல்லூரி உள்ளக அரங்கு பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. ம.இராசேந்திரம் (முன்னாள் ஆசிரியை) நினைவாக குடும்பத்தினரால் சிறிய மணி வளைவும் அமைக்கப்பட்டது. இவ்வாண்டில் நிவிசன

தொலைக்காட்சி நிறுவனத்தால் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது. உப அதிபராகக் கடமையாற்றிய திருமதி.ரூ.இராஜரட்ணம் ஓய்வுபெற திருமதி.ஜெ.கலாதரன் உப அதிபராகக் கடமையாற்றுகின்றார். 2013இல் 110 அடி மைதான மதில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் அமைக்கப் பட்டதுடன் பழைய மாணவர் இ.லோகன் அவர்களால் தனது தந்தை நினைவாக திரு.கொ.கமலநாதன் மூலம் மைதானத்தில் திறந்தவெளி அரங்கு அமைத்துத் தரப்பட்டது. இவ்வாண்டிலே தான் லண்டன் வாழ் பழைய மாணவனாகிய திரு.சி.தருமகுலசிங்கம் அவர்களால் ரூபா ஐந்து இலட்சம் செலவில் நூலகம் மாபிள் போடப்பட்டு புனரமைக்கப்பட்டது. இவ்வாண்டிலே கல்லூரி பாண்ட் வாத்தியக் குழுவினருக்கான உடைகள் க.சூரியகுமாரன் அவர்களது உதவியுடன் புதிதாக வடிவமைக்கப்பட்டதுடன் இவ்வாண்டு முதல் கனடா வாழ் பழைய மாணவன் திரு.க.இராஜகுமாரன் அவர்களால் தரம் 6 முதல் 11 வரையான வகுப்பிலே அதிகூடிய புள்ளி பெறும் ஒவ்வொருவருக்கும் ரூபா 5,000/= வீதம் நிதி வழங்கப்பட உள்ளதுடன் அவரது முயற்சியால் மைதான மதில் வேலைக்கென ரூபா 118,000 வழங்கப் பட்டுள்ளது. இவ்வாறு பௌதிக வள அபிவிருத்தியில் முன்னேறும் எமது கல்லூரி 2013இல் வணிகப் பிரிவில் ஒரு மாணவனும் கலைப்பிரிவில் ஆறு மாணவர்களும் பல்கலைக்கழகம் சென்றமை குறிப்பிடத்தக்கது. முன்னேற்றப் பாதையில் கல்லூரி வீறு நடை போட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இவ்வகையில் சிறப்புறப் பணியாற்றி வந்த எமது கல்லூரி அதிபர் திரு.இ.பாலகுமார் 01.12.2013 இல் சிறப்பான பணியை நிறைவு செய்து ஓய்வுபெற்றார். அன்றைய தினம் அதிபர் அவர்களது மணிவிழா பிரதி அதிபர் கலாநிதி எஸ்.பத்மராசா அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றதுடன் சுடரொளி மலரும் வெளியிடப்பட்டு பழைய மாணவர் சங்கத்தால் மதிய விருந்தும் வழங்கப் பட்டது. அவரது சேவையை கௌரவித்த பழைய மாணவன் சி.தருமகுலசிங்கம் அவர்களது அன்பளிப்பாக தங்கச்சங்கிலி அணிவிக்கப்பட்டது. அவுஸ்ரேலியா, கனடா, இலங்கை வாழ் பழைய மாணவர்களாலும் பல்வேறு அன்பளிப்புக்களும், வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன. தொடர்ந்து அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமையால் இலங்கை அதிபர் சேவை தரம் இரண்டைச் சேர்ந்த பழைய மாணவனும் பிரதி அதிபருமாகிய கலாநிதி சின்னத்தம்பி பத்மராசா அவர்கள் பதில் அதிபராக கடமையாற்றி வந்தார். வடமராட்சி வலயத்திலிருந்து திரு.க.தருமகுலசிங்கம் அவர்கள் எமது கல்லூரிக்கு 18.11.2013இல் தரம் 1 அதிபராக இடமாற்றம் பெற்றார். எனினும் இவர் தனது அதிபர் கடமையை பொறுப்பேற்கவில்லை. ஆயினும் கல்வித் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய 02.03.2014 முதல் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.


இவருடைய காலத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களாகிய கௌரவ அவைத்தலைவர் C.V.K சிவஞானம் அவர்களது நிதி ஒதுக்கீட்டில் இருந்து கல்லூரி மண்டபங்களுக்கான வர்ணப்பூச்சுவேலையும், சைக்கிள் தரிப்பிட நிலவேலையும் மேற்கொள்ளப்பட்டது. M.K.சிவாஜிலிங்கம் அவர்களது நிதி ஒதுக்கீட்டில் ரேபிஸ்ரெனிஸ் மேசை பெறப்பட்டது. கௌரவ க.சர்வேஸ்வரன் அவர்களது முயற்சியால் வடமாகாணசபை நிதிமூலம் மைதான புனரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டது. மணல் பெறுவதில் உள்ள இடர்ப்பாடு காரணமாக அவ்வேலை பின்தள்ளப்பட்டுள்ளது. மற்றும் ஆய்வுகூடம் வர்ணப்பூச்சுவேலை அலுவலக வர்ணப்பூச்சு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. இலண்டன் பழைய பழைய மாணவர் சி.தர்மகுலசிங்கம் அவர்களது நிதியின் மூலம் கல்லூரி பெயர் வளைவு ஒன்றும் அமைக்கப்பட்டது. வடமாகாண கல்வி அமைச்சர் திரு.த.குருகுலராசா அவர் களால் புதிய போட்டோ பிரதி இயந்திரமொன்றும் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

2014ம் ஆண்டு கலைப்பிரிவிற்கு செல்வி.மு.சியானி, ஜெ.சிந்துஜா, பா.போதமிலாஞ்சனி, ரெ.அனுஷியா ஆகியோர் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 22.04.2016 ல் தனது அறுபதாவது வயதில் திரு.க.தருமகுலசிங்கம் இளைப்பாறியதை அடுத்து கிளி/பூநகரி மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய திரு.இராமலிங்கம் பாலச்சந்திரன் அவர்கள் பாடசாலையை பொறுப்பேற்றுள்ளார். மேலும் இவரின் வழிகாட்டலில் பாடசாலை முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பது ஐயமில்லை.

## மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தில் அதிபர்





# மணிவிழா முதல்வருக்கு - சூடும் கவிமாலை!

அலைகடல் சூழ் அணிதிகழ்
அன்னைத் திருநாடாம் – ஈழத்திலே
தர்மத்தின் சிகரமாய்
தரணிபுகழ் வேந்தனாய்
பளைப்பேரூரில் அவதரித்த
காருண்ய சீலரே
தர்மப் பேருரைஞர் தர்மகுலசிங்க முதல்வரே!

மகாமேதை வீரராய் நீங்கள்
பிரதீபா பிரபா விருதெடுத்து
மணிவிழாத் தகைமையிலும்
ஒளி விடும் அதிபர் நீங்கள்!
நல்லூரான் திருவிழாவில்
நல் சைவப்புலவராய் நின்றும்
நம் பள்ளிச் சுற்றுலாவில்
நல்லதோர் தந்தையாய்
நம்மைச் செதுக்கிய
செங்குந்த இந்துவின் சிற்பியே!


இரண்டரை வருடங்கள்
அதிபராய் ஆசானாய் தந்தையாய் – எமக்கு
பன்முக வடிவினில் பாதை தந்த
பண்பாளரே – நீங்கள்
காற்றாய்ச் சிறகடித்து
கல்லூரி முழுதும் தடம்பதித்து மாணாக்கரை


அன்பொடு தடவி
அறிவுரையோடு ஆதரவளித்து – எம்முன்னே
அறிவின் சிகரமாய்
அகவை அறுபதின்
மணிவிழா நாயகனே! உமை
வாழ்த்துகின்றோம்! வாழ்த்துகின்றோம்!!

எங்கும் எப்போதும்
எல்லாம் பெற்று
பல்லாண்டு வாழியவே!
வாழிய! வாழிய! வாழியவே!

**செல்வன்.பா.டிலக்ஷன்**
*13 (கலைப்பிரிவு 2016)*

# அதிபரின் இளமைக் காலங்கள்





# எங்கள் அதிபர்

அன்பினது ஆயுதமாய் தர்மத்தினது பேரொளியாய் தர்மத்தை இவ்வுலகில் நிலைநாட்ட வந்துதித்தவரே எங்கள் அதிபர் தர்மகுலசிங்கம் ஐயா அவர்கள். இவர் எமது பாடசாலையை விட்டு ஓய்வு பெற்றுச் செல்வது எமது துரதிஸ்டமாகும். துன்பம் பாராது சேவை செய்வதில் இவர் அருணந்தி சிவாச்சாரியாரை ஒத்தவர். அருணந்தி சிவாச்சாரியார் தன் வயிற்று வலியை முன் ஜென்மப் பயன் என எண்ணி கற்பிக்கும் போது மட்டும் தன் சால்வைக்குள் எடுத்து முடிந்து விடுவார். அதைப்போல் எம் அதிபர் தன் சேவையில் ஈடுபடும் போது தன் துன்பங்களை மறைப்பார். அறுபது ஆண்டுகள் வயது வந்து எமது அதிபர் ஓய்வு பெறுவது கவலையாக இருந்தாலும் எம் பாடசாலையில் இருந்தவாறே ஓய்வு பெற்றது பெருமை.

அவரது சாந்தமான முகமும் ஒருவருடனும் உரையாடாத நிலையில் புன்னகைத்த மலர்ச்சியான வதனமும் எல்லோரையும் கவர்பவை. தன் இன்பத்தை பகிர்ந்து துன்பத்தை தவிர்த்து வாழும் குணமுடையவர், எங்கள் அதிபர். அன்பு, ஆளுமை, உதவி செய்யும் மனப்பாங்கு எல்லோரையும் ஏற்றத்தாழ்வு பாராது சமமாக மதிக்கும் தன்மை. என்பவை தர்மம் காக்கும் தர்மகுலசிங்கம் ஐயா அவர்களையே சாரும். இவர் தண்டிப்பதுமுண்டு ஆனால் தண்டிக்கும் போது கூட புன்னகைத்த வண்ணம் எம் மனது களங்கப்படாது தண்டிப்பார். இவர் சமயோசித புத்தியுடன் எதையும் சிந்தித்து சிறப்புடன் செயலாற்றுவார். 2014 நான் 08ம் தரத்தினுள் நுளையும் போது அவர் எம் பாடசாலையுள் நுழைந்தார். இன்று 2016ம் ஆண்டு நடக்கின்றது இருவருடங்கள் எம் பாடசாலையில் சிறப்புடன் கடமையாற்றி எல்லோருடைய மனதையும் கொள்ளை கொண்டு விட்டார். சிறப்பான கடமையும் சிறந்த சித்தியும் இவரது முக்கிய குறிகாட்டிகளாக அவர் வந்த அந்த வருடம் கணிதம் தமிழ் உள்ளிட்ட சகல க.பொ.த. சாதாரண தர பாடங்களின் சித்தி வீதத்தை பல மடங்காகவே உயர்த்தினார். அவர் எல்லோருடனும் நட்பாகப் பழகுவார். அன்பாகவும் சகோதரத்துடனும் உரையாடுவார். இவர் எம் யா/செங்குந்த இந்துக் கல்லூரியை விட்டு ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவர் சேவை தொடரும். என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

**செல்வன் பா.அருண்ராம்**
*தரம் 10A*



# மனதில் நிறைந்த மாண்புறு அதிபர்

தர்மம் காக்கும் தலைவன் என்னும் பெயர் கொண்டு
தருமகுலசிங்கமாய் உருவெடுத்த செங்குந்த இந்துவின்
அதிபர் எனும்பெயர் பெற்றவரே
உமது சேவை சொல்லவும் வார்த்தையுண்டோ

பள்ளியில் பதவியேற்றது சில காலம் – ஆனால்
நீர் புரிந்த பணியைச் சொல்ல
நம்மிடம் போதாது நேரம் – இது நிஜம் தானா
காலம் சென்றாலும் அழியாது நீர் தந்த கல்வி

பள்ளிக்கதவைத் திறந்து – நமக்காகக் காத்திருந்து
வகுப்பைக் கூட்டச்செய்து விரைவாகப் பாடம் தொடங்கி
தடிகொண்டு புன்சிரிப்போடு எம்மைக் கண்டித்து
பாடம் நடத்தியவர் நம் கல்லூரி அதிபர்

வீட்டுவேலை பல தந்து மறுதினம் சரிபார்த்து
மாலையிலும் வகுப்பு வைத்து ஓயாது கற்பித்து
போதும் போதும் என சொன்னாலும்
விரட்டி விரட்டிக் கற்பித்தவர் நம் கல்லூரி அதிபர்

சாதாரண பரீட்சையிலே எம்மைச் சித்தி பெற வைத்து
உயர்தரத்தில் கற்பதற்காய் அயராது பாடுபட்டவர்
கணிதம் தமிழ் எனப் பல பாடமும்
நம்மை பயிலவைத்தவர் நம் அதிபர்

நாம் சித்திபெற்றுப் பள்ளிவந்து
ஓர் ஆண்டு காலம் ஆகும் முன்னே
காலம் அதன் சதி அதனால் – அறுபது
வயது அதனை அடைந்தீரே

மணிவிழாக் காணும் அதிபர் தருமகுலசிங்கம்
தன் ஓய்வுக்காலம் அதை நன்றாகக்கழித்து
நலமுடனும் மகிழ்வுடனும் வாழ
இறைவனைப் பிரார்த்திக்கும் எம் நெஞ்சம்
நம் அதிபர் என்றும் வாழி! வாழி! வாழி

**செல்வி.சூ.மதுக்ஷனா**
*தரம் 12 கலைப்பிரிவு*

# பாடசாலை நிகழ்வில் அதிபர்





# எங்கள் அதிபர்....!

அகர முதல எழுத்து சொல்லித் தந்த எங்கள் அதிபரே
அடக்கம் தனை அறிய வைத்த எங்கள் அதிபரே
ஆசை தீரப் பாடுகின்றோம் உங்கள் புகழையே
இனிய தமிழ், கணிதம் பயிற்றுவித்த எங்கள் அதிபரே
இனிய கதை சொல்லித் தந்த எங்கள் அதிபரே
ஈன்ற தாயைப் போல நாங்கள் வணங்குவோம் உங்களையே
ஐம்புலனும் அறிவியலை அறிய வைத்த எங்கள் அதிபரே
ஐயங்களை நீக்கி வைத்த எங்கள் அதிபரே
ஒழுக்கம் கற்று தந்த எங்கள் அதிபரே
உண்மை தனை எடுத்துரைத்த எங்கள் அதிபரே
உலகம் போற்ற வாழ வாழ்த்துகின்றோம் உங்களையே

**செல்வி.மு.சங்கவி**
*தரம்* 11B



# நிர்வாக ஆளுமைத்திறன் மிக்க எமது அதிபர்

ஒரு நிறுவனத்தின் தலைவரே அதன் வெற்றிக்கு அச்சாணியாக இருப்பவர். பாடசாலையைப் பொறுத்தவரையில் தலைமைத்துவப் பொறுப்பிலுள்ளவர் அதிபர் ஆவார். மக்களோடு நேரடியான தொடர்பினைக் கொண்ட பாடசாலையின் அதிபரின் வகிபாக மானது பரந்துபட்டதாகவும், ஒருவரையறைக்குட்படாமலும் நீடித்து நிற்கும். மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், திணைக்களம், சமூகம், ஏனைய நிறுவனங்கள் என்னும் பல்வேறுபட்டவர்களுடைய இடைத்தொடர்பை சரியான முறையில் பேணி, பாடசாலையை வெற்றியுடன் நடாத்துவதற்குப் பன்முகப்பட்ட ஆளுமைத்திறன் பெற்றவராக அதிபர் இருத்தல் வேண்டும்.

பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அதிபரானவர் பின்வரும் விடயங்களைக் கவனிக்கத்தக்கவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பாடசாலையின் தூரநோக்கினை நோக்கி மாணவரின் கல்விச் சாதனைகளையும் அடைவுகளையும், நெறிப்படுத்தக் கூடியவராக இருத்தல்.
2. கலைத்திட்டத்தை வினைத்திறனுடன் அமுல்படுத்தும் ஆற்றல் இருத்தல்.
3. ஆசிரியர்களின் தர உயர்ச்சிக்கான தரமுகாமை செய்தல்.
4. பௌதீக வளங்களின் உச்சப்பயன்பாடு.
5. மாணவர், ஆசிரியர், பெற்றோர், சமூக உறுப்பினருடன் வெளிப்படைத் தன்மையுடன் பழகுதல்

இவற்றைத்தவிர இன்னும் இன்னோரன்ன செயற்பாடுகளில் தன்னை இணைத்து இயங்குபவராக அதிபர் திகழ வேண்டும். அதிபரின் வினைத்திறனான செயற்பாடுகள் பாடசாலையை ஆரோக்கியமான சூழலில், வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்க உதவும்.

மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் 22.04.2016 ஆம் திகதியுடன் தமது சேவையை நிறைவு செய்து இளைப்பாறிய எமது கல்லூரி அதிபர் திரு.கந்தையா தருமகுலசிங்கம் அவர்களின் நிர்வாகம் சார்ந்த ஆளுமைத்திறன் பற்றி சிறிது நோக்கலாம்.

**பொதுவான விடயங்கள்**

2013 ஆம் ஆண்டு எமது கல்லூரியில் அதிபராகக் கடமையேற்றார். அன்றில் இருந்து இளைப்பாறும் வரை மிகவும் ஆளுமைத்திறன் மிக்கவராக விளங்கிப்

பாடசாலையின் தராதரத்தை உயர்நிலையில் பேணிக் கொண்டு வருகின்றார். ஆசிரியர்களை முகாமை செய்தல், மாணவர்களைக் கண்டிப்போடு வழிப்படுத்தல், சமூகத்துடன் நல்ல உறவைப் பேணல், திணைக்களத்தின் வழிகாட்டலை சரியான முறையில் பின்பற்றி கலைத்திட்டத்தைத் தயாரித்து முகாமை செய்தல் எனப் பல்வேறு வகிபாகங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வெற்றி கண்டார்.

**அலுவலக முகாமைத்துவம்**

எமது அதிபர் அவர்கள் அலுவலக முகாமைத்துவ ஆளுமை மிகவும் சிறப்பாக வாய்க்கப் பெற்றவர். எந்தக்கோப்பு எங்கு இருக்கின்றது என்ற விடயம் அத்துப்படி. யார் எந்த விபரம் தேடி அலுவலகத்திற்கு வந்தாலும் தானே சென்று அந்த விபரத்திற்குரிய ஆவணத்தை எடுத்துக் கொடுக்கக்கூடிய மனப்பாங்கு கொண்டவர். அதிபர் என்ற பெருமை இவரிடம் இல்லை. யாருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டவர். மற்றும் திணைக்களத்தில் இருந்து கேட்டுவரும் விபரங்களுக்கு உடனடியாகவே பதில்களைத் தயார் செய்து அனுப்பி விடுவார். எல்லாவிபரங்களையும் அனுப்புவதற்கு முன்பு மேலோட்டமாகப் பார்ப்பார். எந்தத் தவறு இருந்தாலும் இவரது பார்வையில் இருந்து தப்பிவிடாது. அவ்வளவு நுணுக்கமாக ஆனால் வேகமாகச் சரிபார்க்கும் திறமை மிக்கவர். அலுவலக நடைமுறைகள், சுற்றறிக்கைகள் என்பன பற்றிய தெளிவான அறிவினைக் கொண்டவர். எனவே எந்த நடைமுறைகளையும் எளிதாகக் கைக்கொள்ளக்கூடிய தன்மை உள்ளவராகச் செயற்பட்டார்.

**மாணவர் கல்விச் செயற்பாடு**

அதிபர் தனது மாணவர்களுக்கு ஒழுங்காகப் பாடம் நடக்கிறதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எங்கள் அதிபர் இந்த விடயத்திலே மிகந்த கவனம் கொண்டவர். கலைத்திட்ட முகாமையிலே பூரணமாக வெற்றி கண்டவர். பாடசாலைக்கு வரும் எந்த ஒரு மாணவனும் பாடசாலை முடிவடைந்து வீடு போகும்போது ஏதோ ஒரு விடயத்தையாவது பெற்றுச் செல்ல வேண்டும் என்ற நிலையில் மிகவும் உறுதியாக இருப்பவர். பதில் பாடவேளை ஒழுங்கில் மிகவும் கவனமும் கண்டிப்பும் கொண்டவர். எந்த ஒரு வகுப்பும் ஆசிரியர் இல்லாமலும், கற்றல் கற்பித்தல் நடவடிக்கை நடைபெறாமலும் ஒரு பாடவேளையேனும் இருப்பதை அனுமதிக்கமாட்டார். மாணவர் அடைவுமட்ட முன்னேற்றத்தில் இவரது செயற்பாடு முக்கிய பங்கை வகித்தது என்று கூறலாம். தற்பொழுதுள்ள வடமாகாண பாடப்பதிவுப் புத்தக முறையை எமது அதிபர் முன்னரே நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர் - மாணவர்களுடனான இடைத்தொடர்பு**

பாடசாலை சிறப்பான முறையிலே நடைபெறுவதற்கு அதிபர் – ஆசிரியர், மாணவர்கள் இவர்களுக்கிடையிலான இடைத்தொடர்பு முக்கியம் பெறுகின்றது. எமது அதிபர் ஆசிரியரோடும், மாணவர்களோடும் அவர்களின் நிலைக்கே இறங்கிவந்து அவர்களின் தேவையை உணர்ந்து வழிகாட்டியவர். “கோபம் இருக்கும் இடத்திற்தான்

கூடவே குணமும் இருக்கும்" என்ற முதுமொழிக்கு இணங்க கண்டிப்பான அதிபராக இருந்தாலும் கனிவு இவரிடம் நிறையவே உண்டு. மாணவர்களுடன் சிலவேளை கண்டிப்பாக இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டாலும் மறுவேளைகளில் அவர்களது தவறை உணர்த்தி அன்போடு ஆற்றுப்படுத்தும் பண்பையும் கொண்டிருந்தார். மாணவர்களின் குடும்பச்சூழல், வறுமைநிலை போன்ற தகவல்களை அறிந்து வைத்திருப்பார். ஆசிரியர்களின் குடும்ப நலனினும் அக்கறை கொண்டவர். இக்கட்டான சூழ்நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கும் தற்துணிவுடனும், புத்திசாதுர்யத்துடனும் செயற்பட்டு இறுக்கத்தைத் தகர்த்தெறிந்து இயல்புநிலைக்கு வர உதவியாக இருப்பார். தனது சேவைக்காலத்தில் சிறந்த ஆசிரியர் மாணவர் இடைத்தொடர்பைப் பேணிய அதிபராக இவர் விளங்குகின்றார்.

**பரீட்சைச் செயற்பாடு**

எமது அதிபர் தவணைப் பரீட்சை ஒழுங்குகளை மிகவும் சிறப்பாக மேற்கொள்வார். பரீட்சைக் காலங்களிலே ஆசிரியர்களுக்கு மிகுந்த வேலைப்பழு ஏற்படுவது வழக்கம். ஆனால் எமது அதிபர் எமக்குச் சுமை தெரியாதவாறு வேலைகளைப் பங்கீடு செய்து, நேர அட்டவணைக்கேற்ப ஆசிரியர்களுக்கான பொருத்தமான பரீட்சை மேற்பார்வையை ஒழுங்காகத் தயாரித்து வழங்குவார். அதனூடாக வேலைகளைச் சுமை என உணராமல் கடமையாற்றச் செய்வார். இதன் மூலம் ஆசிரியர்கள் தமது மதிப்பீட்டுப் பணியைச் சிரமமின்றி மேற்கொள்வர். பரீட்சை மேற்பார்வை, மாணவர்களுக்கான அறிவுறுத்தல் வழங்குதல், உரிய நேரத்தில் வினாப்பொதி கிடைக்கப்பெறல் என்பன நேர்த்தியாக நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வார்.

**மதிய உணவு வழங்கும் செயற்பாடு**

அரசாங்கம், மாணவர்கள் ஒழுங்காகப் பாடசாலை வரவேண்டும் என்பதற்காகவும், போசாக்கின்மை மாணவர் கல்விக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவும், இலவச மதிய உணவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய காலை 10.30 மணிக்கு உணவு வழங்க வேண்டும். இந்த விடயத்தில் எமது அதிபர் மிகவும் கண்டிப்பானவர். எமது பாடசாலைக்கு வரும் மாணவர்கள் அன்றாடம் வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் பிள்ளைகளே. இவர்கள் காலையிலே தூர இடங்களிலிருந்து கால்நடையாகவே வருகின்றார்கள். இவர்களின் குடும்பநிலை, மாணவர்களின் கற்றலுக்கான தயார்நிலை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு எமது அதிபர் அவர்கள் மதிய உணவைக் காலை 10.30 மணிக்கு வழங்குகின்றார். இச் செயற்பாட்டின் மூலம் மாணவர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பது தெரிகின்றது.

**மனிதநேயம் மிக்கவர்**

கணித பாடத்தில் O/L சித்தி அடையாத பல மாணவர்கள் எமது கிராமத்திலிருந்தும், அயல்கிராமங்களிலிருந்தும் எமது பாடசாலையையே உயர்கல்வி

கற்பதற்காக நாடி வருகின்றார்கள். காரணம் உயர்தர வகுப்புக்களுக்கு தாம் கல்வி கற்ற பாடசாலையில் அனுமதி நிராகரிக்கப்பட்டமையே ஆகும். இவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலக வேண்டிய அபாயநிலை ஏற்பட இடமும் உண்டு. எமது அதிபர் அவர்களின் நிலையை உணர்ந்து அவர்கள் கல்விப்புலத்திலிருந்து வெளியேறாமல் இருப்பதற்காக உயர்தர வகுப்பில் அனுமதி வழங்கியுள்ளார்.

தொடர்ச்சியான கண்காணிப்பு, முறையான கலைத்திட்ட அமுலாக்கம் என்பவற்றினால் அவர்களை உயர்தர வகுப்பில் இல் நல்ல முறையில் கல்வி கற்க வைப்பதோடு O/L கணிதபாட மீள்பரீட்சையிலும் தோற்றுவதற்கு வழி செய்வார். மாணவர்களின் நலனுக்கும், முன்னேற்றத்திற்கும், அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் முன்னுரிமை கொடுத்து, மாணவன் ஒருவனுக்கு கல்வி கிடைப்பதில் எந்தப் பின்னடைவும் ஏற்படக்கூடாது என்பதிலே மிகவும் உறுதியாக இருக்கும் இவரது செயற்பாடு சிறந்த மனிதாபிமானப் பண்பு உடையவர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**நேரமுகாமை**

அதிபரின் நிர்வாகச் செயற்பாட்டில் நேரமுகாமைத்துவம் முக்கிய இடம் வகிக்கின்றது. இந்த விடயத்தில் எமது அதிபர் வித்தியாசமான நிலைப்பாட்டை உடையவர். தனது நடவடிக்கைகளிலே நேரமுகாமைத்துவத்தை மிகவும் கவனமாகக் கைக்கொள்ளும் அதிபர் பல்வேறு குடும்ப நெருக்கு வாரங்களின் மத்தியில் காலையில் சற்றுப்பிந்தி வரும் ஆசிரியர்களின் மனம் நோகும் வகையில் ஒருபோதும் நடந்ததில்லை. பிந்தியதால் அவதிப்படும் ஆசிரியரை அதிபரும் அகோரமாகப் பார்த்தால் அன்றைய தினம் முழுவதுமே ஆசிரியரின் மனம் கடமையில் முழுமையாக ஈடுபடாது என்ற உட்பொருளை உணர்ந்து பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்பட்டவர்.

எமது அதிபர் அவர்கள் சேவைக் காலத்தில் தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றி நிறைவான அதிபராகச் செயற்பட்டுள்ளார். இவர் தனது நிர்வாக ஆளுமை மற்றும் மனிதாபிமானப்பண்பு என்பவற்றினால் ஏனைய அதிபர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றார். கோட்ட, வலய மட்டத்தில் சிறந்த அதிபர் என்ற இடம் இவருக்குண்டு. இவரது வினைத்திறனான சேவையைப் பாராட்டிக் கல்வி அமைச்சு அதி உயர் கௌரவமான "பிரதீபா பிரபா" விருதை வழங்கியுள்ளமை இதற்குச் சான்றாக விளங்குகின்றது.

**திருமதி.க.விமலநாதன்**
***ஆசிரியர்***
***யா/செங்குந்த இந்துக் கல்லூரி***



# ஆன்மீகத்தில் அதிபர்

நாம் எல்லோரும் எப்போதும் ஆனந்தமாக வாழவே விரும்புகின்றோம். ஆனால் அது எம்மால் முடிவதில்லை. ஆன்மிகவாதிகளுக்கே அது சாத்தியம். எனினும் நாமும் சிறுசிறு சந்தோஷங்களையாவது அனுபவிக்க வேண்டும். மன அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டும். இந்த அரிய மானிட உடலைப் பெற்ற நாம் மிருகங்களைப் போல ஏன் பிறந்தோம். எதற்கு வாழ்கின்றோம் என்று தெரியாமல் வாழ்ந்து மடிவதா? நாம் வாழ்வாங்கு வாழ வேண்டுமனால் எமது வாழ்க்கைப் பயணம் ஆன்மிகப் பாதையில் அமைய வேண்டும். இத்தகைய உன்னதமான பாதையில் நடந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்து கொண்டிருப்பவர் எமது அதிபர் உயர் திரு.க.தருமகுலசிங்கம் அவர்களாவார். அவரது வாழ்வின் ஆன்மீகப் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பது அனைவருக்கும் நலம் தருவதாகும்.

அதிபர் அவர்களின் ஆன்மிக வாழ்வு பற்றி அறிவதற்கு முன், ஆன்மிகம் என்பதன் விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். "ஆன்மிகம் என்றால் துறவு பூண்டு, காவி தரித்து, இறைவனைப் பணிந்த வண்ணம் இருப்பது" எனச் சிலர் நினைக்கின்றனர். இன்னும் சிலர் "தள்ளாத வயதில் அல்லது தலை நரைத்த பின்பு கடவுளே கதியென்று திரிதலே ஆன்மிகம்" என நினைக்கின்றனர். "ஆன்மிகம் என்பது ஆன்மா பற்றி அறிவதே" எனப் பெரியோர் கூறுவர். "ஆன்ம நலனைப் போதிப்பது ஆன்மிகம்" எனவும் கூறப்படுகிறது. ஆன்ம நலன் என்பது உடல் நலம், உள நலம், அறிவு நலம், சொல் நலம், செயல் நலம், உறவு நலம் என அனைத்து நலன்களையும் பாதுகாப்பதாகும். "அறிவு, மனம், சொல், செயல் என்பவற்றை ஒருங்கிணைக்கும் பயிற்சியே ஆன்மிகம் என காஞ்சி மகாபெரியவர் கூறியுள்ளார். எனவே ஆன்ம நலனைப் பேணி சமூகத்துடன் இணைந்து வாழும் அறிவு பூர்வமான வாழ்க்கையே ஆன்மிக வாழ்க்கை எனக் கொள்ளலாம்.

உளத்தூய்மை உடையவரே ஆன்மிக வழியை நாடத் தகுதியானவர். தூய்மை உள்ள இடத்திலே தான் இறைவன் குடியிருப்பான். "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற சுவாமி விபுலானந்தரது கூற்றும் இதனையே வலியுறுத்துகின்றது. இத்தகைய தூய்மையான உள்ளத்தைக் கொண்டவரே எமது அதிபர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பார்கள். அவருடைய தூய்மையான உள்ளம் முகத்தில் பிரதிபலிப்பதை நாம் பார்க்கலாம். அவர் தன் உள்ளம் மட்டுமன்றி தன்னைச் சுற்றியுள்ள

இடமும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனமுடையவர். எனவே ஆன்மிக வழியை கடைப்பிடிப்பதற்குரிய தகுதியும் அவரிடமுண்டு.

அதிபர் அவர்களுடைய தோற்றம் அவர் ஆன்மிக வழியில் செல்பவர் என்பதை வெளிபடுத்தி நிற்கின்றது. எளிமையின் வடிவும், வாரி இழுத்த தலை, புன்னகை தவழும் முகம், அதனை மெருகூட்டும் சந்தனப் பொட்டு என நம் கண் முன்னே காட்சி தருவார். அவருடைய முகத்தில் அன்பு, கருணை, சாந்தம் என்பவற்றுக்கு அப்பால் தெய்வீக ஒளி வீசுவதையும் தெளிவாகக் காணலாம். எல்லோருடைய முகத்திலும் இந்த ஒளியைக் காண முடியாது. “அபிராமி அன்னையின் அருள் எமக்குத் தெய்வ வடிவையும் தரும்” என்று கூறியுள்ளார் அபிராமிப்பட்டர். அதை நாம் நிஜத்தில் பார்க்கின்றோம்.

அதிபர் அவர்கள் பேசும் போது அடிக்கடி சில விடயங்களைக் கூறுவார். “உயர்ந்த பேறுகளைப் பெற நான் பெருமுயற்சி எதுவும் செய்யவில்லை. அவை எல்லாம் கடவுள் எனக்குத் தந்தவை, நான் கடவுளைக் கும்பிடுகின்றேன். எனக்கு எந்தத் துன்பமும் நேராது” இவ்வாறான அவரது தீர்க்கமான வாசகங்கள் அவருக்கு கடவுள் மீது இருக்கும் அசையாத நம்பிக்கையையும், அவர் கடவுளின் அன்பிற்குப் பாத்திரமானவர் என்பதையும் ஐயத்திற்கு இடமின்றி எமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

கடவுளின் கருணை இருந்தால் போதும் என அவர் இருந்துவிடவில்லை. ஏற்றத்தாழ்வு இன்றி அனைவருடனும் அன்பாகப் பழகுபவராக, பிறருக்கு உதவுபவராக, பிறரது இன்ப துன்பங்களில் பங்கெடுப்பவராக, இரக்க சிந்தனை உடையவராக, சமாதானத்தை விரும்புவராக, உண்மையைப் பேசுபவராக, நேர்மையைக் கடைப்பிடிப்பவராக, நேரத்தைக் கடைப்பிடிப்பவராக, ஒழுக்கம் உடையவராக, சுறு சுறுப்பு உடையவராகத் தான் விளங்கியதோடு தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் அவ்வாறே மாற்ற முயற்சி செய்தார். அதிபர் அவர்களுடைய இத்தகைய பண்புகள் அவர் ஆன்மிகம் காட்டிய வழியில் பயணிக்கின்றார் என்பதை எமக்கு உணர்த்தி நிற்பதோடு எம்மையும் அவ் வழியில் செல்லத் தூண்டுகின்றது.

இன்று நாம் நவீன உலகின் தாக்கங்களுக்கு உட்பட்டு, பல மாற்றங்களுக்கு ஆளாகி சுயத்தை இழந்து கொண்டிருக்கின்றோம். எனினும் அதிபர் போன்றவர்கள் எம்மிடையே இருந்து கொண்டிருப்பதால்தான் நாம் மறந்து கொண்டிருக்கின்ற பல நல்ல விடயங்களை இன்னும் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றோம். உதாரணமாகப் பிள்ளையார் சுழி இட்டு எழுத ஆரம்பித்தல், நற்கருமங்களுக்கு வலது கையைப் பயன்படுத்தல், பெரியவர்களிடம் இரண்டு கைகளாலும் கொடுக்க, வாங்கப் பழகுதல், நல்ல நேரத்தில் நற்கருமங்களை ஆரம்பித்தல், பெரியவர்கள் முன்னிலையில் எழுந்து நின்று பேசுதல் முதலிய பல விடயங்களைக் குறிப்பிடலாம். இத்தகைய ஆன்மிக

விடயங்களில் அதிபர் அவர்கள் மிகுந்த கவனமுடையவர். தான் பின்பற்றுவதோடு எம்மையும் பின்பற்ற வைப்பவர்.

விஞ்ஞான உலகில் நாம் பல நல்ல ஆன்மிக விடயங்களைப் புதைத்துவிட்டாலும் தெளிந்த சிந்தனையுடையோரின் ஆன்மிக வழிகாட்டல்கள் அவற்றை மீண்டும் தோண்டி எடுக்க வைக்கின்றன. மனிதர்களில் மிகப் பெரிய புத்திஜீவிகளுள் பெரும்பாலானவர்கள் ஆன்மிகவாதிகளாக இருப்பதனாலேயே உலகம் இன்றும் நின்று நிலைத்துக்கொண்டிருக்கின்றது. இந்த வகையில் எமது அதிபரும் தன்னால் இயன்றவரை ஆன்மிக வழியில் நடப்பதோடு எமக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார். இனியும் அவரது ஆன்மிக செயற்பாடுகள் எம்மை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இறைவன் அருளினால் அவர் பணி சிறக்கட்டும்.

**திருமதி.மதிவதனி முருகன்**
*ஆசிரியர்*
*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*

# பாடசாலை நிகழ்வுகளில் அதிபர்





# கண்டேன்
# "ஒரு நல்ல மனிதரை"

ஒரு நல்ல மனிதனால் மட்டுமே
ஒரு நல்லாசிரியனாக இருக்கமுடியும்

இக் கூற்றில் மட்டும் எத்தனை உண்மையான உயர்ந்த வரிகள். இந்த வரிகளினூடே ஒரு நல்ல மனிதனை மட்டுமல்ல பூரணத்துவமான ஆசிரியத்துவத்தையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஒரு நல்ல மனிதன் என்பவன் நேசமுள்ளவனாய், சினேகிதமுள்ளவனாய் தியாக சிந்தையுள்ளவனாய், நேர்மையுடையவனாய், நேர்த்தியுடையவனாய், புரிந்துணர்வுள்ளவனாய், பரிவுணர்வு கொண்டவனாய் கண்டிப்பு மிக்கவனாய் காரியமாற்றுபவனாய், சிந்தனை ஆற்றலுள்ளவனாய், பல நல் மானுடத் தன்மைகள் பொருந்தியவனாய் இருப்பவன் அத்தகைய நல்ல மனிதன். தெய்வமாய், தாயாய், தந்தையாய், தோழனாய் சோதரனாய் பல்பரிமாணமுள்ளவனாக மாறும் ஆற்றலுள்ளவனே நல்லாசானாகின்றான்.

இத்தகைய சிறப்பான தன்மைகள் கொண்டு சமூகத்தில் மிளிர்கின்ற சமூக நட்சத்திரமே ஒரு நல்ல ஆசிரியர். இவ் உயர் தொழிலாம் ஆசிரியத் தொழிலை ஒருவர் விரும்பிச் செய்யப்புறப்படும் பொழுது உலகெலாம் ஒளி கொடுத்து உருகி ஓடும் மெழுகுதிரி போன்றும், உயர்ந்தோராகவே ஏற்றி ஏற்றிவிடும் எளிமையான ஏணியாய் நின்றும், சமூகத்தை செதுக்கி வடிவமைக்கும் நல்லதொரு சிற்பியாகவும் தியாகியாகவும் மாற்றமுறுபவரே ஆசிரியர். இத்தகைய ஆசிரியத்தொழிலுக்குள் புகுத்தவர்கள் இயன்றவரை இத்தகைய இயல்புள்ளவராயும் இல்லையேல் இத்தகைய இயல்புகளால் தம்மை வடிவமைத்துக் கொள்பவராகவும் மாறவேண்டும். காலம் காலமாய் சமூகத்தில் எண்ணிடலங்கா ஆசிரியர்கள் தோன்றினாலும் சமூகத்தில் போற்றப்படுபவரும் துதிக்கப்படுபவரும் ஒரு சிலரே.

ஒரு சமூகம் ஒரு ஆசிரியரால் துலங்கிக்கொண்டிருக்குமானால் அத்தகைய ஆசான் போற்றுதற்குரியவராகின்றார். அத்தகைய மாண்புடையோரை நம் வாழ்வில் சந்தித்தல் அரிது. அந்த வகையிலே என் ஆசிரிய, வாழ்விலும் நல்லாசானாய் இருந்து கொண்டிருக்கும் நல்லதொரு அதிபரைக் கண்டேன். பார்வையிலே பசுவாக நல் பக்குவம்

கொண்ட ஆன்மீக வாதியாய் தோற்றமளித்த திரு.கந்தையா தருமகுலசிங்கம் என்பவரை 2013ம் ஆண்டு யா/செங்குந்த இந்துக் கல்லூரியிலே கண்டேன்.

"ஆள்பாதி ஆடைபாதி" என்பார்கள். ஒரு மனிதனின் எண்ணங்களும் நடத்தைகளும் ஆடை அலங்கரிப்பில் தெரியும். எங்கள் அதிபரின் உடை அமைப்பில் அவர் உள்ளத்து நேர்த்தியும் அவர் சேவையின் நேர்த்தியும் தெளிவாகத் தெரிந்தது. ஒரு ஆன்மீக வாதியாய் தோற்றமளிக்கும் அதிபர் தன் நிர்வாக நடவடிக்கையில் கற்றலின் உயர்ச்சிக்காக ஒருபுறம் ஜனநாயக வாதியாகவும் மறுபுறம் சர்வாதிகாரியாக தோற்றமளிப்பார். மாணவர் கற்றலுக்காக மட்டுமே தன்மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் அவர் செய்யும் மிகப்பெரிய சேவை போற்றுதற்குரியது. பள்ளிவரும் ஒரு பிள்ளை ஒரு நிமிடத்தையேனும் வீணடிப்பதை விரும்பாத அதிபர் சுற்றிச் சுழன்று பாடசாலையையே மனப்பாடம் செய்து நிற்பார்.

கல்வியிலே எவ்வெளவுக்கெவ்வளவு கண்டிப்பும் கரிசனையும் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு வகுப்பறை நேர்த்தியிலும் சுத்தத்திலும் நின்றார். ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவரினது ஒவ்வொரு மேசையையும் பார்த்து மாணவர் சுத்தத்தினையும் பேணி நிற்பார். பிள்ளைகளுக்கு கணிதம் கணிதம் என்று கணக்கிற்கு கணக்கிலா முக்கியம் கொடுக்கும் நம் அதிபர் கணக்கில் சித்தியடையாத மாணவனையும் தெருவில் விடாது பள்ளியிலிணைத்து நிற்கும் "பிள்ளை நேயம்" மிகுந்தவர்.

ஒவ்வொரு பிள்ளைபற்றி மட்டுமல்ல அப்பிள்ளையின் குடும்பப் பின்னணிபற்றியும் நேரடியாக அறிந்து வைத்திருக்கும் தகவல் பெட்டகமாய் இருப்பார். மாணவர் நலனில் மட்டுமல்ல தன்னுடன் இணைந்து கற்றல் நடவடிக்கைகளுக்கு கரம் கொடுக்கும் அனைத்து ஆசிரியர்களினதும் ஏனைய கல்விசார ஊழியர்களினதும் தனிப்பட்ட வாழ்வில் அக்கறையும் கருணையும் கொண்டவர். ஒவ்வொருவரினதும் இன்பதுன்பங்களிலும் குடும்பத்து உறவு போன்று உதவிடும் பண்பாளர். அது மட்டுமன்றி பாடசாலை அலுவலகம் வரும் அத்தனை பேரையும் வரவேற்று இருக்கையில் அமர்த்தி உபசரிப்பதில் மட்டுமன்றி அலுவலகத்திற்கு வரும் அத்தனை பேரின் தேவைகளை தானே முன்னின்று முடித்து வைக்கும் பண்புடையவர்.

பாடசாலையில் மட்டுமன்றி பாடசாலையைவிட்டு மாணவர்களை வேறு நிகழ்வுகளுக்குச் சென்றவேளைகளிலெல்லாம் அவர்களுக்கு மதிய உணவு அனுப்புவ திலிருந்து அங்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று அடிக்கடி தொலை பேசியிலேயே களநிலவரம் அறிந்துகொண்டிருக்கும் நல்லதொரு நிர்வாகியாகியவர்.

ஒருமுறை (சுற்றுலா) களப்பயணத்தின் போது கதிர்காம மலை ஏற வேண்டிய நிலையில் நம்மில் ஒரு சிலர் பின்வாங்கி நின்ற நிலையிலும் பிள்ளைகளுக்காக அவர்களின் பாதுகாப்பிற்காக தன்வயது உடல்நிலை எல்லாவற்றையும் புறம்தள்ளி அத்தனை படிக்கட்டுக்களை ஏறிக்கடந்தும் தொடர்ந்தும் தம்பணியினை சோர்விலாது செய்தமை அவரின் தன்னம்பிக்கை, தளர்விலா உள்ளம், எடுத்த காரியம் யாவற்றையும் முடிக்கும்திறன் என்பவற்றை பறைசாற்றி நின்றது.

இவர் ஒரு சிறந்த அதிபர் என்பதனை இவர் பெற்ற இலங்கை அரசின் உயர் விருதாகிய பிரதீபா பிரபா" விருதின் மூலம் எல்லோரும் அறிந்தமையே இவர் எங்கள் பாடசாலையில் மட்டுமல்ல தான் சென்ற அனைத்துப் பாடசாலைகளிலும் நல்ல மனிதனாகவும், நல்லாசானாகவும் நடந்துகொண்டமை இவர் தந்தையாரின் மரணச் சடங்கிற்கு வேறு பாடசாலைக்களிருந்து ஆசிரியரும் மாணவர்களும் பேருந்தில் வந்திறங்கியமை சான்று பகர்வதோடு அவரின் சமூக ஆரோக்கிய நன்நிலையையும், அவரின் ஆத்ம சேவையின் பலனையும் பலருக்கு உணர்த்தி நின்றது.

இவர் அதிபர் சேவையில் சரி ஆசிரிய சேவையிலும் சரிவேறு எந்தவொரு நிகழ்விலும் பிழைகளின்றி ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதில் மிகவும் கவனமாகவும் கண்டிப்பாகவும் செயற்படுவது, "செய்வன திருந்தச் செய்" என்பதனை அடிக்கடி பலருக்கு உறைக்கச் செய்யும் அதற்காக பல விடயங்களை தானே எழுந்துசென்று பார்வையிட்டு சரிபார்ப்பது மட்டுமல்லாது தனது கையெழுத்தின் நேர்த்தியையும் அழகையும் போன்று எல்லோரும் செயற்பட வேண்டும் என்பதும் எந்தப் பத்திரம் (Form) என்றாலும் பிழையின்றிச் சரியாக நிரப்புவதில் அவருக்கு நிகர அவரே.

இத்தகைய பல பக்க நல்ல தன்மைகள் கொண்ட நல்ல அதிபரை மட்டுமல்ல நல்ல மனிதரை நம்பாடசாலை மட்டுமல்ல நாமும் பெற்றது நல்வரம் என எண்ணத் தோன்றுகிறது. அந்த வகையில் அகவை அறுபதை பல நற் தகமைகளோடு தாங்கிநிற்கும் திரு.க.தருமகுலசிங்கம் அதிபருக்கு என்றென்றும் நிறைவான அமைதியான வாழ்வு கிடைக்க இறைவனைப் பிரார்த்தித்து நீடுழிகாலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி.வாசுகி சுதாகரன்**
*ஆசிரியர்*
*யா/செங்குந்த இந்துக்கல்லூரி*



# தோன்றிற் புகழொடு தோன்றுக

"தோன்றிற் புகழொடுதோன்றுக" என்னும் வாசகத்திற்கு இலக்கணமாக விழங்குபவர் அதிபர் திரு.தருமகுலசிங்கம். நான் செங்குந்த இந்துக்கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருக்கின்ற காலப் பகுதியில்தான் (2013ம் ஆண்டு) திரு.தருமகுலசிங்கம் அவர்கள் எங்கள் கல்லூரியின் அதிபராகக் கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். முதுமை தவழுகின்ற பக்குவமான பருவத்தில் கல்லூரியின் நிர்வாகப்பொறுப்பை அவர் கையேற்றமை பாடசாலைக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

மெலிந்த தோற்றமும் மலர்ச்சியான முகப்பொலிவும் சிந்தனை தோய்ந்த பார்வையும் அவரது கடமையுணர்வையும் கட்டுப்பாடான வாழ்வியல் முறைமை யினையும் படம்பிடித்துக் காட்டும் சான்றுகளாக அமைகின்றன. தான் செய்கின்ற தொழிலைத் தெய்வமெனப் போற்றும் பக்குவமுடையவராக அவரைப் பார்க்க முடிகிறது. தினமும் காலை 7.30 மணிக்குப் பாடசாலைக்கு வந்து விடுவார் சில நாட்களில் 7.00 மணிக்கே பாடசாலையில் அவரைக் காணலாம். ஏன்? என்று உங்கள் மனது கேட்பது எனக்குப் புரிகிறது. அவர் பாடசாலையின் அதிபராக மாத்திரமல்ல ஒரு சிறந்த ஆசிரியராகவும் பணி புரிந்தவர். மாணவர்களுக்கு மேலதிக வகுப்பெடுப்பதற்காகவே நேரத்தோடு பாடசாலைக்கு வருகை தருவார். என்கடன் பணிசெய்து கிடப்பதே எனும் அப்பர் வாக்கிற்கமைய தனக்குரிய பணியை அக்கறையோடும் நேர்த்தியாகவும் செய்யும்திறன் படைத்தவர் அவர்.

ஒரு அதிபருக்குரிய முக்கிய பண்புகளில் ஒன்று நேரமுகாமைத்துவமாகும். இந்நேர முகாமைத்துவம் அவரிடத்தில் ஊறியிருந்ததொன்று என்றுதான் கூறவேண்டும் பாடசாலைக்குரிய வருடாந்தச் செயற்றிட்டங்கள் அனைத்தும் உரிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட்டிருக்கும். இந் நேர முகாமைத்துவத்திற்கு பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வொன்றினை நினைவு கூரலாம் என்று எண்ணுகின்றேன் 2014ஆம் ஆண்டு பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழா காலை 9.00மணிக்கு ஆரம்பமாகவிருந்தது. உரிய நேரத்திற்கு பிரதம விருந்தினர் வருகை தராத பட்சத்திலும் விழா சரியாக 9.00 மணிக்கே ஆரம்பமாகியது. பிந்தி வந்த பிரதம விருந்தினரும் அதிபரின் நேர முகாமைத்துவம் பற்றி மிகவும் பெருமையாகவே பேசினார். அவருடைய நிர்வாகத்தில் எந்த ஒரு விடயமும் பட்டியலிட்டு ஒழுங்கமைத்துக் கோவைப்படுத்தப்பட்டிருக்கும். உரிய

நேரத்தில் தேவையான விடயத்தைத் தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளலாம். இது கூட நேரமுகாமைத்துவத்தின் ஒரு கூறு என்று குறிப்பிட்டுக்கொள்ளலாம்.

அதிபர்கள் மேற்பார்வை, நிர்வாகம் என்பவற்றோடு தமது சேவையை மட்டுப்படுத்திக் கொள்வர். ஆனால் இவர் எல்லாவற்றிற்கும் மேலதிகமாக நலன் கருதி கற்பித்தலில் முழுப்பங்கினைச் செலுத்திய நல்லாசிரியராகவும் விளங்கினார். பாடசாலை நேரங்களில் விடுப்பில் நிற்கும் ஆசிரியர்களின் வகுப்புகளை அவர் விட்டு வைப்பதில்லை. மாணவருக்கு ஏற்ற வகையிலே கணித பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்பதில் அக்கறையுடையவராக இருந்தார். தமிழும் அவர் மாணவர்களுக்கு விரும்பிக் கற்பிக்கின்ற பாடமாகும். மாணவருக்கு மேலதிக வகுப்புக்கள் நடாத்துவதில் அதிக கவனம் செலுத்தினார். நாள்தோறும் நேர அட்டவணைப்படி மேலதிக வகுப்புக்கள் காலை, மாலை நடைபெறும். காலை வகுப்புக்கள் அதிகமாக அதிபராலேயே நடாத்தப்படும். க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கப்போகும் மாணவருக்கான பயிற்சிப் பரீட்சைகளை காலை 7.30 மணிக்கே ஆரம்பித்து விடுவார். வகுப்புகள் குளம்பி விடக்கூடாது என்பதற்காக பரீட்சைகள் இவ்வாறு நேரத்தோடு நடாத்தப்பட்டன. அவருடைய நிர்வாக காலத்திலே குறிப்பிட்ட பாடங்களின் தேர்ச்சி மட்டங்கள் உயர்வடைந்து இருந்தமையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

அவர் வாயிலிருந்து வரும் தாரக மந்திரம் “பிள்ள பாவமம்மா” என்பதுதான். எந்தச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளின் நலன் கருதி அவர்களின் பக்கம் நின்று பேசுகின்ற ஒரு நல்ல அதிபராக நாம் அவரைக் கண்டோம். அது மாத்திரமல்ல பாடசாலையில் கல்வி பயில்கின்ற ஒவ்வொரு பிள்ளையினது சுயவிபரமும் அவருக்குத் தெரியும். மாணவர்கள் எங்கிருந்து வருகிறார்கள். அவர்களது குடும்பநிலை எத்தகையது. என்கின்ற மாணவர் பற்றிய பல்வேறு விடயங்களையும் அவர்களது இருப்பிடங்களுக்குச் சென்றே அறிந்து வைத்திருப்பார். மாணவர் வரவொழுங்கில் அதிக அக்கறையுடையவர். அதற்காகவே அடிக்கடி பாடசாலையிலே பெற்றோரைச் சந்தித்துப் பேசுவார். அதற்கான பதிவுகளைக்கூட பேணிப் பாதுகாத்து வந்துள்ளார். மாணவர்களின் சித்திவீதத்தை உயர்த்தவேண்டும் என்பதற்காகவே ஆசிரியர்களோடு சிலவேளைகளில் அவர் முரண்பட்டதும் உண்டு.

பாடசாலையின் பௌதீகச்சூழல் கவினுறும் வகையில் அமைய வேண்டும் என்கின்ற வகையிலே பாடசாலையின் உட்சுத்தம். வெளிச்சுத்தம் என்பவற்றிலே அதிககவனம் செலுத்தினார். தினமும் காலை பாடசாலை ஆரம்பிப்பதற்கான முதல் மணி அடித்தவுடன் பாடசாலை முழுவதையும் சுற்றிப் பார்வையிட்டு மூலை முடுக்குகளில் கூட சிறு குப்பை இருப்பினும் உடனே அவுற்றை அகற்றுவித்து விடுவார். பாடசாலைக்குரிய தளபாடங்களை சீர்செய்து தானே முன்நின்று கணக்கெடுத்து

வைக்கப்பட்டிருக்கும். எனவே பாடசாலைக்காக அதிக நேரத்தை அர்ப்பணித்து முழுமனதுடன் சேவை செய்த ஒரு அதிபராக நாம் அவரைக் காண்கினறோம்.

அதிபர் திரு.தருமகுலசிங்கம் அவர்களின் இளம் பருவத்து சேவைக்காலம் வசந்தமான காலம் என்று தான் கூறவேண்டும். அக்காலப்பகுதியில் அவரது நேர்மையான உழைப்பையும் சேவை மனப்பாங்கையும். மாணவரிடத்தில் அவர் கொண்டிருந்த அக்கறையினையும் வெளிச்சமிட்டுக் காட்டும் வகையில் அமைந்ததே 2005ம் ஆண்டு அவருக்குக் கிடைத்த பிரதீபா பிரபா விருது என்னும் தேசிய விருது. உண்மையிலேயே தமது ஆசிரியர், அதிபர் என்கின்ற நீண்ட காலசேவைப் பயணத்தில் அவர் மிகச்சிறந்த சாதனையாளன் என்பது சாலப்பொருத்தமாக அமைந்துள்ள தெனலாம்.

**செல்வி. முருகசுந்தரி கனகசுந்தரம்**
*கலைப் பட்டதாரி - பட்டப்பின் கல்வி டிப்ளோமா*
*முதுகலைமானி பண்பாட்டியல்*
*ஆசிரியர் யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்*

# பாடசாலை நிகழ்ச்சிகளில் அதிபர்





# நீண்ட தூர, நீண்ட கால நண்பர்கள் உள்ளத்திலிருந்து.....

பளை வேம்போடு கேணியில் மாமரங்களும், தென்னை மரங்களும், இயற்கைச் சூழலில் அமைந்துள்ள, ஆவினங்கள் சூழ்ந்துள்ள, மரக்கறித் தோட்டம் அமைந்துள்ள வீட்டில் சின்னையா கந்தையாவுக்கும், கந்தையா செல்லாம்மாவுக்கும் நான்கு புத்திரர்களும், மூன்று புத்திரிகளும் கிடைத்த வேளையில் நான்காவது புத்திரனாக 1956 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 22ஆந் திகதி தருமகுலசிங்கம் பிறந்தார். பெயருக்கு ஏற்ற மாதிரி குணங்களும் காணப்படுவதும் உண்டு. அதே போல தர்மத்தின் குலமாகவே தருமகுலசிங்கம் திகழ்ந்தார்.

1979 ஆம் ஆண்டு ஆனி மாதம் 23 ஆந் திகதி யாழ்/கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் திரு.கனகநாயகம் இராசநாயகம் ஆகிய நானும், எனது நண்பன் குலமும் கலாசாலையில் சந்தித்தோம், நானும் குலமும் மிகவும் நெருக்கமாகப் பழகி இணை பிரியாத நண்பர்களானோம்.

குலமும் நானும் கலாசாலையில் அனைவருடனும் அன்பாகப் பழகி, அனைவரது செல்லப் பிள்ளைகளாக இருந்தோம். ஆரம்பத்தில் தனியாக ஒரு வீடு எடுத்து பதின்மூன்று பேர் "சிவகிரியில்" தங்கினோம். பின் நானும், நண்பன் குலமும் பத்மநாதன் மிஸ்சின் சகோதரியின் வீட்டில் தங்கியிருந்தோம். குலம் அனைவருக்கும் உச்ச உதவி புரிவதே நோக்காகக் கொண்டிருந்தார். "நீறில்லா நெற்றி பாழ்" ஆனால் குலத்தின் நெற்றியில் எந்த நேரமும் திருநீறும், சந்தனப் பொட்டும் இருக்கும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் என்னைத் துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக் கொண்டு கலாசாலையின் பக்கத்திலிருந்த வீட்டிலிருந்து நல்லூர் கோயிலுக்குச் சென்று குலம் கும்பிட்டு வரும் வரை நாவலர் மண்டபத்திற்கு முன்னால் நான் இருப்பது வழக்கம். வணக்கம் முடிந்த பின் மீண்டும் நாங்கள் தங்கியிருக்கிற சிவா மிஸ்ஸின் வீட்டுக்கு வருவோம்.

கலாசாலையில் அனைவரும் குலத்தைத் தம்பி தம்பி என்று மிகப் பாசமாக அழைத்தனர். பலருக்கும் பல வழிகளிலும் உதவி புரிவதே குலத்தின் குணமாகும். இவ்வாறு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த நாம் ஆறுமாதம் கலாசாலையிலும், அடுத்த ஆறுமாதம் வெளிக்களப் பயிற்சி பாடசாலையிலும் போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, நண்பன் குலத்திடம் சொன்னேன். பின்பு ஒரு சந்தர்ப்பம் மன்னம்பிட்டிக்கு வரக் கிடைக்க

மாட்டாது, எனவே இந்த ஆறு மாதமும் எனது ஊருக்கு வா என்று சொன்னதும் எந்த மறுப்பும் இன்றி சம்மதம் தெரிவித்ததும் நானே விண்ணப்பப் படிவத்தை நிரப்பினேன். அப்போது குலத்தின் அப்பா சொன்னார் “மன்னப்பிட்டியை விடத் தூரமான இடம் இல்லையா” என்று மாத்திரம் கேட்டார். நாம் இருவரும் சனிக்கிழமை ஞாயிறு மத்தியானம் இரண்டு நாட்களும் வேம்போடுகேணியில் தங்குவோம். குலத்தின் அம்மா எனது தாயைப் போல என் மீது பாசம் காட்டி விதம் விதமான சாப்பாடுகள் சமைத்து தருவார். இன்றும் அந்த அம்மா தந்த மாம்பழமும் பிட்டும் மறக்க முடியாது.

வெளிக்களப் பயிற்சிக்காகப் பொலனறுவை மாவட்ட மன்னம்பிட்டி தமிழ் மகா வித்தியாலயத்தில் 1980.01.01 தொடக்கம் ஆறு ஆறு மாதங்களாக இருந்த பயிற்சி 1980.12.31 வரை ஒரு வருடமாக நீடித்தது. அக்காலத்தில் எங்கள் வீட்டில் தங்கியருந்த குணத்தின் குன்றான குலம் எனது உற்றார் உறவினர்களுடனும் எனது குடும்ப உறுப்பினராகவும், எனது மன்னம்பிட்டிக் கிராமத்தில் ஒரு உறுப்பினராகவும், அனை வருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி மன்னம்பிட்டி தமிழ் மகா வித்தியாலய அதிபர் அமரர் அரசகோன் கணபதி அவர்களது அன்புக்குப் பாத்திரமாகி க.கனகராசாவின் உறவுச் சகோதரனாகி எங்கள் வீட்டில் எனது தாயாரின் செல்லப் பிள்ளையாக இருந்த குலம் எங்கள் வீட்டு வேலைகளிலெல்லாம் நூறு வீதமான பங்களிப்புச் செய்து, எங்கள் குடும்பத்தில் இன்றும் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், பாடசாலையில் பாடங்களில் மாணவர்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தல், பாடசாலைக் கடமைகளில் மாணவர்களை திறம்பட ஈடுபடுத்தியமை இவ்வாறு ஒருவருடம் எனது ஊரில் அளப்பரிய சேவை செய்து விட்டு மீண்டும் நாம் 1981 ஜனவரி தொடக்கம் யாழ்/கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வந்தோம். எங்களது காலத்தில் தான் ஆண் பயிற்சியாளர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்கது.

நாம் இருவரும் விரிவுரையாளர் சிவா மிஸ்ஸின் வீட்டில் தங்கியிருந்த காலத்தில் எமது இருவரின் உடைகளை சனி, ஞாயிறு தினங்களில் தோய்த்துத் தூய்மைப்படுத்துவது என் நண்பன் குலம் என்றால் துணிகளை அழுத்திக் கொண்டு வருவது நானாக இருக்கும் இவ்வாறு எந்தவித வேறுபாடுமின்றி அந்நியோன்னிய மாகப் பழகி வந்தோம். பண விடயம் கூட எனது என்ற எந்தவித வேறுபாடுமின்றிப் பழகி வருகின்றோம். “ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து நாம் பழகினால் எதிர்பார்த்தது கிடைத்த போது அந்த நட்பு அத்துடன் நின்று விடும் என்றும், எதிர்பார்ப்பு எதுவுமின்றிப் பழகுவது தொடரும் என்றும்” கேள்வியுற்றிருக்கின்றேன். அதே போல 1979 இல் நான் கண்ட குலம் இன்றும் அதே பெறுமதியுடன் அதே புதுத்தன்மையுடன் தான் காணப்படு கின்றான். எங்கள் நட்புத் தொடர்ந்து எமது குழந்தைகளுக்கும் ஊடுகடத்தப்பட்டு விட்டது.

1981 டிசெம்பர் வரை எங்கள் கலாசாலை வாழ்வில் குலம் பலரது வாழ்விலும் பங்காளியாகவும் வாழ்ந்துள்ளான். எங்களது நட்பு ஏறக்குறைய 37 வருடங்களைக் கடந்தாலும் இன்றும் புதுமையாக, இனிமையாக, பாசமாகவே காணப்படுகிறது. நான் சேவைக் காலத்தில் இருந்த போது எனது மாணவர்களோடு சுற்றுப் பிரயாணம் வருகின்றேன் என்று நண்பனிடம் சொன்னேன். தங்குமிட வசதியை மட்டுமே எதிர்பார்த்து நின்ற போது குலம் 100 மாணவர்களுக்கு இரவு உணவு சமைத்து, தங்குமிட வசதி ஒழுங்குகளுடன் எமது வரவை எதிர்பார்த்து தனது பாரியாருடன் காத்துக் கொண்டிருந்தது இன்றும் நினைவில் அழியாமல் உள்ளது. என் அண்ணன் மகன் குலம் வீட்டிலேயே ஐந்து ஆறு மாதங்களாக கணிதப் பிரிவின் சந்தேகங்களை கேட்டு விளங்கி இன்று கணிதப் பிரிவில் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்.

எமது கலாசாலை நட்பு இன்றும் ஆல் போல் தளைத்து அறுகு போல் வேரூன்றிப் படர எல்லாம் வல்ல இறைவன் நற்கதி அருள வேண்டும் என நல்லூர் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

ஆசிரியர் தொழிலில் பலர் இருக்கின்றார்கள். ஆனால் ஆசிரிய தொழிலை சேவையாக எண்ணுபவர்கள் சிலரே. எனவே அவ்வாறான ஆசிரிய சேவையாளன் தான் தருமகுலசிங்கம் “மாற்றான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்” என்பர். அதற்கோர் உதாரண புருஷன் குலம். தனது குழந்தைகள் நால்வரில் தனது பணியைத் தொடர மகளையும் மகனையும் கணித ஆசான்களாகவும், மருமகனையும் கணித ஆசானாகவே பெற்று ஏனைய மகனை பொறியியல் தொழில்நுட்ப துறைக்கும் மகளை வைத்தியத் துறைக்கும் அனுப்பவும் ஆண்டவர் அருள் பாலித்துள்ளார். குலத்தின் பரந்த மனதிற்கும், சிறந்த ஆசானாகத் திகழ்ந்தமைக்கும் இறைவன் கொடுத்த வரம் எனலாம்.

குலத்தின் வாழ்க்கை செழிக்க அவனது பாரியாரையும் இச்சந்தர்ப்பத்தில் “மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்” என ஞாபகப்படுத்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

குலம் ஓய்வு நிலையில் அறக் கருத்துக்களையும் அறிவியல் கருத்துக்களையும் பரப்பி சுக வாழ்வு வாழ என்றென்றும் வாழ்த்தும்

**திரு.கனகநாயகம் இராசநாயகம்**
(B.Ed Tamil, SM Dip) J.P
***ஓய்வுநிலை அதிபர் - மன்னம்பிட்டி.***



# ஒரு பொழுதின் மாற்றம்

அதிகாலை நேரம் ஆதவன் செங்கதிர்களைப் பரப்பி விடியலை வா வா என அழைத்துக் கொண்டிருந்தான். பறவைகளின் இனிய நாதமும், பூக்களின் நறுமண வாசமும் காற்றில் கதைபேசின. கமலம் முகாமின் கூடாரச் சீலையை விரித்து வானை நோக்கினாள். புதுநாட்கள் புதிதாகப் பிறந்தாலும் தன் வாழ்வில் ஒரு விடியல் பிறக்குமா என்று வானை நோக்கிக் கேட்கிறாள். தொட்டிலில் உறங்கும் சிறுபிள்ளை அவளை பரிதாபத்திற்கு உள்ளாக்கியது. கமலத்தைப் பழைய நினைவுகள் அலை மோதிப்பார்த்தன.

சோலை எனும் இயற்கை எழில் கொஞ்சும் கிராமம். அங்கு ஒரு விவசாயக் குடும்பம் தான் கமலத்தின் குடும்பம். கமலத்தின் கணவர் சுந்தரம் ஒரு நேர்மையான குடியானவர். மகள் சங்கீதா சங்கீதாவின் கணவர் நிமலன். அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை. மகன் குமரன். பள்ளி செல்லும் பிஞ்சுப்பாலன். இதுதான் கமலத்தின் குடும்பம். வறுமை அவர்களை வாட்டிப் பார்த்தாலும் அன்புக்கு வாட்டம் காட்டாத குடும்பம் கமலத்தின் குடும்பம் அதிகாலை நேரம் 6 மணி எனக் கடிகாரம் காட்டியது. கமலமும் விரைவாக எழுந்து தன் கடைமைகளை முடித்து கணவரையும் தோட்டத்திற்கு அனுப்பினாள்.

“யே புள்ள சங்கீதா மருமகன் சாப்பிட்டாரோடி” என்றாள் கமலம்
“ஓமம்மா அவர் சாப்பிட்டார்” நீங்க போய்க் குமரனைப் பள்ளிக்கூடம் அனுப்புங்கோ”

என்று கூறிய மகளின் வார்த்தையைக் கேட்டுக் குமரனைப் பாடசாலை அனுப்பினாள். குமரன் மனதில் பல இலட்சக் கனவுகளோடு தான் ஒரு வைத்தியராக வேண்டுமென்றே பேராடிப் படிக்கின்றான்.

“கவனமாப் படியப்பு அம்மாவப் பாக்கோணுமல்லே”
நீங்க யோசிக்காதேங்கோ அம்மா நான் கட்டாயம் டொக்டரா வருவன்” என்ற தன்னம்பிக்கையும் தினமும் பாடசாலை செல்வான். இவ்வாறு வழக்கம் போல கமலத்தின் குடும்பம் அன்றாட வாழ்வை நிகழ்த்திக் கொண்டிருந்தது.

ஆனால் அந்தக் குடும்பத்தை மட்டுமல்ல முழு ஊரையுமே காலன் காவுகொள்ளத் தயாரானான். அதுதான் யுத்தம். பெரும்பாலான கிராமங்களை யுத்தங்கள் அழித்தபோதும் அது சோலைக் கிராமத்தைப் பெரும்பாலும் பாதிக்கவில்லை. ஆனால் தற்போது சோலைக் கிராமம் நிரந்தர யுத்தக் களமாக மாறி விட்டது. பொழுது விடியும் நேரம் கமலம் வழக்கம் போல எழுந்து கொண்டாள்.

“அடிபுள்ள என்னால ஏலாமக்கிடக்கு”
“நீ அப்பாவையும் மருமகனையும் தோட்டத்துக்கு அனுப்பிவை”
“குமரன் சாப்பிடாமப் போடுவான் அவனையும் சாப்பிட வை”
சரியம்மா நீங்கள் படுங்கோ நான் எல்லாஞ் செய்யிறன்” என்றவாறே சங்கீதா தன்வேலைகளை முடித்து அப்பாவைத் தோட்டத்திற்கு அனுப்பி வைத்தாள்.

“நீங்கள் போங்கோ மாமா
நான் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு வாறன்”

என்றவாறே மருமகன் கொஞ்சம் தாமதித்து நின்றான். சங்கீதா துளசி மாடத்தை வலம்வந்து கொண்டிருந்தாள். சுந்தரம் மண்வெட்டியுடன் விரைவாகத் தோட்டத்தை அடைந்தான். கமலம் தனது செல்லப்பேத்தி தொட்டிலில் அமைதியாகத் தூங்குவதை அவதானித்து இரசித்த வண்ணமே அமர்ந்திருந்தாள். அக்குழந்தையின் மழலை முகத்தில் அப்படியொரு ஆனந்தம் அவளுக்குத் தென்பட்டது. திடீரென ஒரு பாரிய சத்தம். சங்கீதாவின் வீரிட்ட குரல் கமலத்தின் காதில் ஓங்கி ஒலித்தது. தொட்டிலில் உறங்கிய பிள்ளை திடுக்கிட்டுக் குழறிது. கமலத்தின் வீடு அதிர்வில் ஒருகணம் முன்சென்று பின்வருவதாக அவள் உணர்ந்தாள் கமலத்தின் நெஞ்சு படபடத்தது.

“பிள்ள சங்கீதா.. என்னடி சத்தம்?”

என்றவாறே சங்கீதாவை நோக்கி ஓடினாள். சங்கீதா செய்வதறியாதவளாய் உறைந்து போய் நின்றாள். அருகில் பார்த்தால் சங்கீதாவின் கணவர் இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தார். சுற்றுமுற்றும் ஹெலிகொப்டர்கள் சுற்றிக் கொண்டன. அறம்புறமாகக் குண்டுகள் வந்து விழுகின்றன. இது என்ன சோதனை என அடித்தடித்துக் குழறியவள். சங்கீதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு தொட்டிலில் தூங்கிய சிறுபாலனையும் இடுப்பில் கொண்டு, குமரனையும் கூட்டிக் கொண்டு அயலவர் களுடன் ஓடினாள். பல தூரம் காலில் முட்கள் தைக்க ஓடியவள் இறுதியில் முள்ளி வாய்க்காலை அடைந்தாள். வேறு வழியில்லை நீரில் இறங்கி அடுத்தகரையைச் சென்றதாக வேண்டும்.

“சங்கீதா அம்மாண்ட கைய வடிவாப்பிடியம்மா
குமரா அக்காண்ட கையவிட்டிடாத
கவனமா வாங்கோ”

“சரியம்மா ம் ம் ம்...”
என்று அழுதவாறே குமரன் கூறிக் கொண்டான். நீரில் இறங்கிப் பாதிவழி சென்றதும் அயல்வீட்டுக் கணேசன் ஓடிவருவதைக் கமலம் கண்டாள்.

“அடி கமலம், உன்ர மனுசன் தோட்டத்தில செல்விழுந்து மண்டபிளந்து செத்துப் போச்சுதாமடி”

என்ற கணேசனின் குரல் கமலத்தின் செவிகளில் விழுந்தது. செய்வதறியாதவள் பிடித்திருந்த சங்கீதாவின் கைகளை விட்டாள். அவள் கைவிட்டது தான் தாமதம் சங்கீதா
“என்ர அப்பா செத்துப்போட்டாரோ?
ஐயோ! என்ர அப்பா.... கடவுளே!..”
என்று புலம்பியவாறே அலக்கமலக்க ஓடினாள் ஓடியவள் எங்குபோனாளோ தெரியவில்லை.

“புள்ள சங்கீதா அம்மாட்டவாம்மா
எங்கேடி நிக்குறாய் சங்கீதா?”
என்று சுற்றிச் சுற்றித் தேடினாள் கமலம் எங்கும் சங்கீதாவைக் காணவில்லை.

“குமரா நீயெண்டாலும் வாடா? எங்கேடா இருக்கிறா? குமரா.....”

குமரனையும் காணாத கமலம் பதைபதைத்துத் தேடினாள் எங்கேயோ இருந்து அம்மா... அம்மா.. எனக் குமரன் அழைப்பது போல இருந்தது. கமலம் திரும்பிப் பார்த்தாள். குமரன் நீரில் மூழ்கித் தலை மட்டும் வெளியில் நீட்டியவனாய் நின்றிருந்தான். உடனே ஒரு பெரிய சத்தம். கமலம் உணர்ச்சி எதுவுமின்றி கல்லானாள். நீரில் மூழ்கிய குமரனின் தலைமேல்தான் செல் வந்து விழுந்தது. குமரன் தனது கனவுகள் எல்லாம் கலைந்துபோக இரத்த ஆற்றில் மூழ்கினான். தனித்துப் போன கமலம் தனி மரக் கொப்பில் ஒரு கனியை ஏந்துவது போல அந்தக் குழந்தையை ஏந்திய வண்ணம் தனியாக நின்றாள்.

ஐயோ! அம்மா கூ......
ஊ..... கடவுளே! என்ர அம்மா!

என்ற மக்களின் அவலக்குரல் அவளின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவள் எந்த அசைவையும் காட்டவில்லை. கையில் இருந்த சிறுகுழந்தை மட்டும் பயத்தால் துடித்துக் கொண்டிருந்தது.

“ஏ இங்கேயே நிண்டு சாகப் போறியே?
வா எங்களோட எங்கயாது ஓடித்தப்புவம்”

என்று ஊர்மக்கள் அவளை இழுத்துச் சென்றனர். பசியோ அவளை மட்டுமல்ல அந்தச் சிறு பாலனையும் வாட்டியது. போகும் வழியில் சிரட்டையில் கஞ்சி வாங்கிக் குடித்தவள். தெளிவை மட்டும் தான் குடித்துச் சோற்றைச் சிறுபிள்ளைக்கு ஊட்டினாள். கால்நடையாகவே ஓடி ஓடி யாழ்ப்பாணம் வந்தடைந்தாள். அங்கு அகதிகளுக்காய் அமைக்கப்பட்ட சிறு கொட்டிலுக்குள் தனது பேரக்குழந்தையுடன் வசிக்கிறாள். அவளின் வாழ்க்கையில் ஒரு பொழுதில் காலை விடிந்து மாலை ஆவதற்குள் இத்தனை மாற்றங்கள், இழப்புக்கள், சோதனைகள் என சிந்தித்துப் பார்த்தாள். அவளின் கண்ணில் தன் மருமகனின் மரணம், சங்கீதாவின் பிரிவு, செல்ல மகனான குமரனின சாவு, கணவர் இறந்தசெய்தி வழியே வழிந்தன.

அவளது வாழ்வில் இத்தனை இன்னல் வந்தாலும் அவள் தனது பேரக்குழந்தையை மட்டும் “சிற்பி முத்தை மூடிக்காப்பது” போல பாதுகாத்து வருகிறாள். “தன் வாழ்வின் ஒருநாள் பொழுது மாற்றத்தை ஏன் ஏற்படுத்தினாய்? எனப் பகலவனை கேட்டு நிற்கிறாள்.

**அ.தர்மினா**
*11B*



# வாழ்வாங்கு வாழக்கல்

***"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்***
***கற்றாரோ டேனையவர்"***

என்பது வள்ளுவர் வாக்கு. மனிதனது நல்வாழ்வுக்கு கல்வி முதற்காரணமாக அமைகின்றது. மனிதனாகப் பிறந்தோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓர் இலட்சியம், குறிக்கோள் உண்டு. அவ் இலட்சியத்திற்கு செயல் வடிவம் கொடுப்பது கல்வி. "அனைவருக்கும் கல்வி" என்ற கோஷம் இன்று உலக நாடுகள் எங்கும் ஓங்கி ஒலிக்கப்படுகிறது. அரசுகளின் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. எனவே எமது வாழ்க்கையை மேம்படுத்தும் கல்வியை பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம்.

மனித சமுதாயம் பலவகையான மக்கட் கூட்டத்தைக் கொண்டுள்ளது. படித்தவர், பாமரர், செல்வர்கள், ஏழைகள், நல்லவர்கள், தீயவர்கள் எனப் பல்வேறு பாகுபாடுகள் நிலவுகின்றன. சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டுமா? இவை அவசியந்தானா? என்றால் இல்லையென்றே கூறுவர். எனவே இதுபற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மனிதனுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவு என்பதாகும். பகுத்தறிவே மனிதனை உன்னத நிலைக்கு இன்றுவரை உயர்த்தி வைத்துள்ளது. இதன் மூலமே மனிதனால் மொழிகளை உருவாக்கவும் விஞ்ஞான ரீதியில் புதியன பலவற்றை உருவாக்கவும் புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கவும் முடிகிறது. காலந்தோறும் தாம் கண்டறிந்த உண்மைகளைத் தத்தம் மொழிகளில் பதிந்துவைத்தும் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். தாம் அடைந்த முன்னேற்றத்தை நிலைநாட்டவும், தத்தமக்கேற்ற வழிகளில் பயன்படுத்தவும் கல்வியே மனித சமுதாயத்திற்கு உகந்த ஒரேயொரு சாதனமாகத் திகழ்கிறது. கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடும், விழுமியங்களும் அழிந்தொழியாது பாதுகாக்கப்பட முடியும். இந்நிலையில் மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன், சமத்துவமாகச் சகலரும் வாழ்வதற்குரிய வழியினைக் காட்டவல்லது கல்வி ஒன்றேயாகும். எல்லோரும் சமத்துவமாக, எல்லாம் பெற்று வாழ வேண்டுமாயின் அனைவருக்கும் உகந்த கல்வி அளிக்கப்படுதல் அவசியமாகும்.

“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர் தூக்கின் மன்னரிற் கற்றோன் சிறப்புடையன்” என்கின்றார் எமது ஔவைப்பிராட்டியார். நாம் வாழும் சமுதாயத்தை ஒரு உடலாக உருவகிப்போமாயின் அந்த உடலில் உள்ள எந்த உறுப்பையும் நாம் ஏற்றது அல்ல என ஒதுக்கிவிடமுடியாது. ஓர் உறுப்புக்கு ஊறு நேர்ந்தால் அது உயிரின் இயக்கத் திற்கே பாதிப்பை ஏற்படுத்திவிடும். இதேபோன்று தான் கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் மூச்சாயமைந்துள்ளது. சமுதாய உறுப்புக்கள் யாவிலும் கல்வி தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அதற்குப் பங்கம் விளைவித்தால் சமுதாயமே பெரிதும் பாதிப்புறும்.

“அரிது அரிது மானிடராய் பிறந்தல் அரிது” என்கின்றார் ஔவையார் சில நாளில் தோன்றிச் சில நாளில் மறைந்து போவதாகிய இம் மக்களுடம்பிற் பிறந்தவர்களான நாம் எந்த வகையான செல்வத்தைப் பெறுவதற்கு முயல வேண்டுமென்றால், என்றும் அழியாதாய் நம் உடம்பு அழிந்தாலும் தான் அழியாமல் நமது உயிரோடு சேர்ந்து நம்மை எல்லாப் பிறப்புகளிலுந் தொடர்ந்து வருவாதாய் உள்ள அழிவில்லா கல்விச் செல்வத்தையே அடை வதற்குக் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். கல்வி என்பது நமது கண்போன்றது. கல்விக்கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம். இவ்வுண்மையை நன்குணர்ந்தமையால் தான் ஒவ்வோர் நாட்டரசும் தனது குடிமக்களுக்குக் கல்வியளிப்பதைப் பெரும் கடனாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

கல்வியினால் உயர்ந்தவர்கள் பலர். ஆனால் இன்றைய சமூகத்தின் பார்வையில் கல்வியின் நிலை என்ன? ஒரு சிலர் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்து அதனை முழுமையாகக்கற்று வாழ்வில் முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். ஆனால் பெரும்பான்மையோர் கல்வியின் முக்கியத்துவத்தை அறியாது வாழ்க்கையை வீணாக்குகின்றனர். ஒரு சமுதாயத்தில் இருந்து மருத்துவர், ஆசிரியர், எழுத்தாளர், விஞ்ஞானிகள் போன்ற அரச நியமன தொழிலாளராக காணப்படுகின்றனர். அதேவேளையில் அச் சமூகத்திலே படித்துக்கொண்டிருக்கும் வேறு சிலர் தாம் படித்து என்ன செய்வது? என்ற எண்ணத்தினால் படிப்பினை இடையில் முடித்துவிட்டு வேறு செயல்களில் ஈடுபடுவதை இன்று அவதானிக்கமுடிகிறது. மற்றும் மிகவும் கஷ்டப்பட்டு கல்வியைக் கற்றுக்கொண்டிருக்கும் வேறு மாணவர்கள் தமக்கு பல்கலைக்கழகம் கிடைத்தால் அங்கு சென்று நான்கு வருடத்தை வீணாகும் என்று பணம் சம்பாதிக்கும் வழியில் ஈடுபடுகின்றனர் என்பதில் மாற்றமில்லை.

இன்றைய சமூகத்தினர் கல்வி கற்பது பணம் சம்பாதிப்பதற்கு என தவறாக நினைக்கின்றனர். மற்றும் சிலர் அனைவருக்கும் எழுத வாசிக்கத்தெரிந்தாற் போதும் என கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அது மிகவும் தவறாகும். கல்வி என்பது ஒரு மனிதனைப் பூரணப்படுத்துவதுடன் அவனது வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றது.

"ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" என்றார் பாவேந்தர் பாரதிதாசர். இதன் மூலம் சமூகம் ஒன்றிற்கு கல்வி புகட்டவேண்டும் என கூறப்படுகின்றது.

இன்றைய சமூகத்தில் கல்வியை பணம் திரட்டும் சாதனமாகவே பார்க்கப்படு கின்றது. இன்று மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கே செல்ல விரும்புவதில்லை. மாணவர்கள் பலர் கல்விபெறும் வாய்ப்பினை இழந்து விடுகின்றனர். வீட்டு வேலை களுக்கும். வியாபார நிலையங்களுக்கும், கூலித் தொழில்களுக்கும் செல்லும் மாணவர்கள் கல்வியின் அருமையை அறியாது பின்னாளில் இரங்க வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர், பெற்றோர்களின் தவறு குறித்து வருந்துகின்றனர். படிக்கும் காலம் பொற்காலம் என்பர். அக்காலத்தை இழந்துவிடும் மாணவர்கள் கல்விக் கண்ணை இழந்தவர்களாகின்றனர். இது பெரும் கொடுமை. இக்கொடுமை ஒழிய வேண்டுமாயின் சமூகத்தின் பார்வையில் கல்வி உயர்ச்சியடையவேண்டும்.

பல சமூகங்களில் கல்வியினைப் பெறுவதற்கு பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன. இன, மத, சாதி வேறுபாடுகள் குறுக்கிடுகின்றன. கிராமப்புற மாணவர்க்கும் நகர்புற மாணவர்களுக்குமிடையே கல்வி வசதிகளை அளிப்பதில் பாகுபாடுகள் காணப்படுகின்றன. பணம் படைத்தோர் பிள்ளைகள் அனுபவிக்கும் வாய்ப்பு வசதிகள் ஏழை மாணவர்களுக்கு எட்டுவதாயில்லை. இந் நிலைகள் மாறவேண்டும். முதலில் சமூகத்தில் உள்ளவர்கள் கல்வியின் உண்மையான உட்கருத்தை நன்கு உணர்தல் வேண்டும்.

கல்வியினைக் கற்பதன் மூலம் குடும்பத்தின் நிலைமாற்றமடையும். நிறைவான அறிவுடையவராக வாழமுடியும். சமூகத்தில் மதிப்பு, அந்தஸ்து கிடைக்கும், கல்வியே எமக்கென்று ஒரு அடையாளத்தை தரும். ஒரு சமூகத்தில் படித்த ஒருவர் தன்னுடன் மட்டும் வைத்துக்கொள்ளாது தான் கற்ற கல்வியால் சமூகம், நாடும் பயன் பெறும் வகையில் செயற்பட வேண்டும். கல்வி பற்றி தவரான எண்ணங்களை வளர்ப்பவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துதல் வேண்டும். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பது முதுமொழி. நாம் பெறும் கல்வியானது வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் இருக்கக்கூடாது அது வாழ்க்கைக்கு உகந்த கல்வியாக இருத்தல் வேண்டும். கல்வி கற்றவர்கள் சமூகத்திற்கு தொண்டாற்ற வேண்டும். "என் கடன்பணி செய்து கிடப்பதே? என்றார் அப்பர் சுவாமிகள், 'பணிபுரி பயனை எதிர்பாராதே' என்றார் கிருஷ்ணர். "உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி" என்றார் இயேசு பெருமான். இவர்களது அருளுரைகள் எல்லாம் நமக்கு எதைப் போதிக்கின்றன? நாம் உள்ளத் தாலும் உடலாலும் பிறர்க்கு உதவ வேண்டும் என்ற உன்னத குறிக்கோளையே உணர்த்துகின்றன. சமூகத்தின் இந்த அறியாமையை கல்வி கற்றவர்களாலேயே மாற்றியமைக்க முடியும்.

நல்ல கல்வியைக்கற்று வாழக்கையில் தோற்றவர்கள் யாருமில்லை. சமூகத்தில் அறியாமை என்னும் இருளில் அகப்பட்டவர்களாகிய நாம் அறிவை இழந்து அழியாச் செல்வத்தை அடைய முயலாமல், நிலையின்றி அழிந்து போகும் பொருள்களையே நிலையாகப் பிழைபட நினைத்து அவற்றைப் பெறுவதிலும் அவற்றை நுகர்வதிலுமே எமது காலத்தைக் கழித்து வருகின்றோம். சமூகத்தின் இந்நிலை மாறவேண்டும். கல்வி ஒன்றே அழியாச் செல்வம் என்பதை உணரவேண்டும்.

“மன்னனுக்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச் சென்றவிட மெல்லாஞ் சிறப்பு” என்ற ஔவையாரின் வாக்கு மன்னனுக்கு தன் நாட்டில் மட்டும்தான் சிறப்பு ஆனால் கற்றவனுக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பதனை தெளிவுபடுத்துகின்றது. இன்றைய சமூகத்தினர் தாம் சென்ற இடம் எல்லாம் மதிப்பினைப் பெறவேண்டுமாயின் கல்வியைக் கற்றவேண்டும். இவ்வாறு கல்வியின் சிறப்பை யாவரும் அறிந்து கற்பார்களேயானால் சமூகமும் நாடும் நன்மையடையும்.

**த.வான்மதி**
*தரம் - 12*
*கலைப்பிரிவு*



# நம்தாய் மொழி தமிழ்

திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த பழமை மிக்க மொழியாக நம் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ் என்னும் சொல் "த்ரவிட" என்னும் சமஸ்கிருதச் சொல்லின் திரிபு எனவும், மூலம் எனவும் கூறப்படும் அதேவேளை தமிழ் என்னும் சொல்லுக்கு "த்ரவிட" என்பதே மூலம் என்ற கருத்தை கால்டுவேல் முன்வைத்தார். அதாவது, "தமிழ் என்னும் சொல் த்ரவிட – திரமிட – திரமிள – தமிழ் – தமிழ் என்று ஆனது" என்கிறார் கால்டுவெல்.

தமிழ் என்பது தனது மொழி, தன்னிலிருந்து மலர்ந்து வரும் ஒலி, சரியான பேச்சுமுறை என்றெல்லாம் பல்வேறு பொருளை உணர்த்தும் சொல்லாக இலக்கியங்களில் கையாளப்பட்டுள்ளது. தமிழ்மொழி எம்தாய்மொழி. எம்மைப் பெற்றெடுத்த தாய் தாலாட்டியதும் தமிழ் மொழியே. நாம் இம்மண்ணிலே பிறந்து முதலில் வாய் திறந்து பேசியதும் தமிழே. உறவாடவும், சிந்திக்கவும், சிந்தனையை வெளிப்படுத்தவும், எம்முள் புதைந்துள்ள ஆற்றல்களை செம்மையாக சமூகத்திற்கு வெளிப்படுத்தவும் தமிழ்மொழியே பயன்படுகிறது. ஆகவே நம் தாய்மொழியின் செழுமை பற்றியும், பழமை, புதுமை, மேன்மை பற்றியும் அறிந்து கொள்வது மகிழ்ச்சிக்குரியதாகும்.

எத்திசையும் புகழ் மணக்கும் எழில்மிகு தமிழ்மொழியானது உலக நாடுகள் அனைத்திலும் பேசப்படும் மொழியாக, அழியாத கன்னித்தமிழாக, தெள்ளுதமிழ், தேன்தமிழ், இன்பத்தமிழ், செந்தமிழ் என்றெல்லாம் போற்றப்படும் எம் தாய்மொழி செம்மொழியாக இன்று பெருமைபெற்று நிற்கிறது. தொன்மை மிக்க தமிழ்மொழியானது சொல்லிடங்கா சிறப்புடையது. இலக்கண இலக்கிய நூல்களையும் பல்வேறு துறைகளிலும் அள்ளி வழங்கியது நம்தாய்மொழியே.

***"தமிழுக்கும் அமுதென்று பெயர்***
***அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"***

என்று எழுச்சியோடு பாடினான் பாரதிதாசன். சாகா மருந்தென்னும் அமிர்தத்திற்கு ஈடானதாக தமிழ்மொழி சிறப்பித்துக் கூறப்பட்டது. அறிவியல்தமிழ், ஆட்சித்தமிழ், இசைத்தமிழ்,, இயற்றமிழ், சட்டத்தமிழ், செந்தமிழ், நாடகத்தமிழ், மருத்துவத்தமிழ்,

மீனவத்தமிழ், பிராமணத்தமிழ் என்று துறைவாரியாகவும், மட்டக்களப்புத்தமிழ், தென்னகத்தமிழ், வடமராட்சித்தமிழ், யாழ்ப்பாணத்தமிழ் என்றும், குமரித்தமிழ், சென்னைத்தமிழ், கொங்குதமிழ் இவ்வாறு வட்டார வழங்குத் தன்மையிலும் நம் தாய்மொழி வேறுபடுத்தப்பட்டாலும், அனைவராலும் பேசப்படுவது ஒரே மூலமே. அதனாற்றான் பாரதிதாசன் தமிழை "உயிர்" என்று கூறினான்.

பொதுவாக, மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கும் சிறப்பான வாழ்க்கைக்கும் அவசியமானது அவன் பேசுகின்ற மொழிதான். மொழியே கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ள உதவும் ஊடகமாகும். மனிதனின் பேச்சும் மூச்சும், வீச்சும், இனத்தின் அடையாளமும் அவன் எத்தகைய சிறப்புடையவன் என்பதை வெளிப்படுத்திக் காட்டிவிடும். அது அவன் பேசம் தாய்மொழியிலேயே தங்கியுள்ளது. இத்தகைய பெருமைகள் கொண்ட தாய்மொழியாகவே நம் தமிழ்மொழி விளங்குகிறது. எம் தாய்மொழியான தமிழ்மொழியானது, சிவபெருமானே ஆராய்ந்த மொழியாகவும், முருகனும் அகத்தியரும் காத்த மொழியாகவும் புராணக் கதைகளில் கூறப்படுகின்றது.

***"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்***
***இனிதாவது எங்கும் காணோம்"***

என்று சுப்பிரமணிய பாரதியார் அழகாகத் தமிழ்மொழியின் பெருமைதனை எடுத்துக் காட்டியுள்ளார். சங்ககாலம் முதல் இன்றுவரை பல்வேறு புலவர்கள் கவிஞர்களால் போற்றிப் பாடப்பட்ட தமிழ்மொழி தெவிட்டாத இன்பமாக யாவருக்கும் நாவில் தவழ்ந்திடும் மொழியாகும்.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு இலக்கியங்கள் பழந்தமிழர் மரபினையும், வீரவாழ்வினையும், பண்பாட்டு விழுமியங்களையும் பறைசாற்றி நிற்பவை. பழந்தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்கள் எம்போன்ற மாணவர்களுக்கு தமிழ்மொழியின் மகத்துவத்தை புலப்படுத்தி எமக்கு தமிழ்ப்பற்றை ஊட்ட வல்லவை.

"பக்திக்கு ஒருமொழி தமிழ்மொழி" என்று பெருமைப்படுத்தியவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் தமிழ்மொழி பல பக்தி இலக்கியங்களைப் படைத்திட உதவியது.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்க வல்ல" பக்திச்சுவை நனிசொட்டும் பதிகங்கள் பலவற்றை இறையடியார்கள், நாயன்மார்களாய் பாட வைத்தது.

"வடவேங்கடம் முதல் தென்குமரி வரை" தமிழன் வாழும் எத்திசையிலும் நெஞ்சம் நிமிர்ந்து தமிழர்கள் பெருமிதத்தோடு நிற்பதற்கு தமிழ்மொழியின் உச்சரிப்பும் தெளிவுமே காரணமாகும். எல்லா மதத்தவர்கள், இனத்தவர்களாலும் விரும்பிப் படிக்கக் கூடிய மொழியாக எம்தாய்மொழி அமைந்தது. தேம்பாவணி –

வீரமாமுனிவராலும் (பெல்கி பாதிரியார்) போப் ஐயரின் திருவாசக ஆய்வும் கால்டு வெல்ட் ஐயரின் ஒப்பியல் ஆராய்வும் இவ்வாறு தோன்றியவையே.

இவ்வாறு தமிழ்மொழி மனிதனுடைய வாழ்வில் சகல நிலைகளிலும் கலந்துள்ளது. தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என்று வீர ஆவேசத்துடன் பாட வைத்தது.

***"சாகில் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன்***
***சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்"***

என்று பாடினார் பண்டிதர் க.சச்சிதானந்தன். இத்தகைய தமிழ்ப்பற்றுமிக்க, பெரியார்கள் பலரை தந்த எம் தாய்நாட்டில் தமிழ்மொழியான நம் தாய்மொழியை அழிந்துவிடாது காக்க வேண்டி பாடுபட்டவர்கள் எத்தனை பேர். தாய்மொழியின் சிறப்பு சொல்லியடங்காது.

பழமையான முறைமையிலிருந்து நவீன உலக மயமாக்கல், விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்தில் காலத்தின் போக்கிற்கேற்ற வகையில் பழமைக்கும் புதுமைக்கும் பிழையேற்படாத வகையில் புதுப்பரிமாணம் பெற்று வழங்கிவரும் தமிழ்மொழியானது, முத்தமிழ் என்ற நிலையை தான் அறிவியல் தமிழ், கணணித்தமிழ் என்று பரிமளிப்பதைக் காண்கின்றோம்.

தமிழ்மொழியை பிழையின்றி பேசவும், எழுதவும் முயன்றிடுவோம். பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப் படித்து புதுமைகளைப் படைத்திடுவோம்.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானமளந்த தனைத்தும் மளந்து
வளர்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி
எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

**செல்வன் ராஜகுமார் லோஜன்**
***தரம்*** - 7A



# ஒழுக்கம் விழுப்பம் தரும்

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்” என்பது வள்ளுவரின் வாக்கு. மனிதருக்கு இருக்க வேண்டிய பல குணங்களுள் ஒழுக்கமும் ஒன்றாகும். ஒரு சிலருக்கு கல்வி, கேள்வி, பொருள், பண்டம், பட்டம், பதவி போன்றன இருப்பினும் அவர்களிடம் ஒழுக்கம் இல்லாதிருக்குமானால் அவர்கள் சிறப்படைய மாட்டார்கள். உணவுக்கு உப்பு எவ்வளவு இன்றியமையாததோ அது போல ஒழுக்கமும் முக்கியமானதாகும்.

ஒழுக்கமானது எமது மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் பிறரிடம் பணிவாக நடந்து கொள்ளும் பண்பாகும். மற்றவர்களிடம் அன்புகாட்டி பணிவாக நடந்து கொள்ளும் எம்மிடத்தில் அகம்பாவம் வராது. இந்த அரிய குணம் எம்மில் பலருக்கு அமைவதில்லை ஒழுக்கமானது நமக்கு கிடைக்கப்பெற்ற ஒரு அரிய செல்வமாகும்.

ஒழுக்கமும் பணிவும் உள்ளவர்கள் தம் வாழ்வில் சிறப்படைவார்கள். இந்த உண்மையை நம்முன்னோர்கள் தாம் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மூலம் எமக்கு எடுத்துணர்த்தியிருக்கிறார்கள். எங்களை எப்போதும் அறிவூட்டி நல்வழிப்படுத்தும் ஆசான்களான தமிழ் நூல்கள், நீதி இலக்கியங்களெல்லாம் ஒழுக்கம் என்னும் அரிய பண்பின் உயர்வைக் கூறுபவையே. ஒழுக்கமும், பணிவும், பொறுமையும் மக்கள் வாழ்வில் எத்துணை அவசியமானவை என்பதை திருவள்ளுவர் பெருமானும் தமது அறநூலிலே அடக்கமாக முக்கியப்படுத்தியிருக்கிறார். 1330 குறட்பாக்களுடைய தம் திருக்குறளிலே “ஒழுக்கமுடைமை” என்ற அதிகாரத்தை படைத்துள்ளார். அவற்றை படித்து மனனம் பண்ணி அவற்றின் வழி வாழப்பழகிக் கொள்ளல் எமக்குச் சிறப்பைத் தரும்.

தற்போது ஒழுக்கமானது சிலரிடமே காணப்படுகிறது. பலரோ பெரியோர்களை மதிக்காமலும் அவர்களது சொல்லுக்கு மதிப்பளிக்காமலும், அவர்களை ஏளனம் செய்தும் ஒழுக்கமற்ற செயற்பாடுகளை செய்வதாலும் மகிழ்ச்சியற்ற நிம்மதி அற்ற வாழ்க்கையை பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறு ஒழுக்கமில்லாது நடப்பதனால் மகிழ்வற்ற வாழ்வையும் கௌரவம் மரியாதை போன்றவற்றை இழக்கும் வாழ்வையும் பெறுகின்றனர்.

நண்பர்களிடமும் சரி எம்மைவிடத் தாழ்ந்தோரிடமும் சரி, எச்சந்தர்ப்பத்திலும் சினந்து, கடிந்து, வெட்டென பேசுவது அடக்கமுடைய பண்பாகாது. அவ்வாறு பேசுவதன் மூலம் எதையும் சாதிக்கவும் முடியாது. மாறாக எமது வசைமொழிக்குள்ளானவர்க்கு அவ்வசை மொழியானது மூளாதீப்போல் உள்ளே கனன்று கொண்டிருக்கும் வேதனையையும் வெறுப்பையும் உண்டாக்கும்.

*"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்டவடு"*

என்ற குறளானது அடக்கமிழந்து நாம் கூறும் வெஞ் சொற்களால் ஏற்படும் கொடூரம் பற்றி கூறுகின்றது. நாவடக்கம் எம் எல்லோருக்கும் மிக அவசியமானது. நாவினைக் காக்கும் பண்பு எமக்கு மிகத் தேவையான ஒன்று. என கூறியுள்ளனர்.

மனிதருக்கு இருக்க வேண்டிய விழுமியங்களிலெல்லாம் தலையாயது எனக் கொள்ளத்தக்க ஒழுக்கத்தை நாம் நம் வாழ்விலும் எச்சந்தர்ப்பத்திலும் கடைப்பிடித்து ஒழுகினால் நம் வாழ்வு ஒளிரும், இனிமை பெறும் என்பதில் ஐயமேதும் இல்லை. ஒழுக்கமும் பணிவும் எமக்கு விருத்தியையே தரும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பணிவாக ஒழுக்கமாக நாம் நடப்பதால் எமக்கு எந்த வேளையிலும் இழிவு வராது. மாறாக நமது பெருமையை உயர்வை அது புலப்படுத்துவதாய் அமையும் என்பதை நம்ப வேண்டும் காய்த்துப் பழுத்துப் பயனுடைய மரத்தினது கிளைகள் தாழ்ந்து இருக்கும். பொத்தி வெளிவந்த வாழை தலைசாய்த்து நிற்கும். காய்களைத் தோற்றாத கிளையும் பொத்தி வெளிவராத வாழையும்தான் நிமிர்ந்து நிற்கும். தாழ்ந்த கிளைக்கும், தலைசாய்ந்த வாழைக்கும்தான் பெருமை.

தண்ணீரை கிணற்றிலிருந்து வெளிக்கொணருவதற்காக துலா கிணற்றுள் பதிந்து செல்வதைப் பார்க்கிறோம். அதுபோல நாமும் கற்றோரையும் பெரியோர்களையும் பணிந்து நடக்கும் போது அவர்களிடத்தே தேங்கிக் கிடக்கும் நற்பண்புகளையும் அறிவுப்பொக்கிஷங்களையும் பெற்றுக் கொள்ளலாம். "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்று பொய்யா மொழிப்புலவர் உபதேசித்துள்ளார். ஒழுக்கமானது ஒருவனுக்கு சகல பேறுகளையும் தரும். மகிழ்ச்சி நிறைந்த தேவருலக வாழ்க்கையைத் தரும் என்று கூறும் அவர், ஒழுக்கமின்மையானது எம் வாழ்வை இருளடையச் செய்கிறது என்று எச்சரிக்கிறார்.

எமது பேச்சிலே அடக்கம், ஒழுக்கம், பணிவு இருத்தல் வேண்டும். மாணவர்களாகிய நாம் எமது அதிபரையோ, ஆசிரியர்களையோ, எமது அலுவலக

அதிகாரிகளையே, சான்றோர், மூத்தோர்களையோ பெரியோர்களையோ சந்திக்க நேரிட்டால் அவர்களிடம் முதல் "வணக்கம்" தெரிவித்து பின் விடயத்தை பணிவாக எடுத்துக்கூற வேண்டும்.

நண்பர்களிடம் கூட ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நண்பர்கள் தானே என அவமரியாதையுடன் நடக்கக்கூடாது. நண்பர்களிடம் ஒழுக்கமாக நடப்பதினாலும், அவர்களிடம் அன்புடன் பழகுவதாலும் நண்பர்கள் எமக்குத் தேவையான போது உதவி செய்வார்கள்.

ஒழுக்கமுடையவராக வாழ வேண்டுமானால் நாம் மன வலிமை உள்ளவராக வாழ வேண்டும். மன வலிமை இல்லாதவரிடத்து ஒழுக்கமும் அடக்கமும் பணிவும் இல்லாமலே இருக்கும். நாம் இந்த மனவலிமையை வளர்த்துக் கொள்வதற்கு தியானப்பயிற்சி, நல்ல நூல்களை வாசித்தல், மூச்சுப்பயிற்சி, இறைவழிபாடு என்பவற்றை மேற்கொள்ள வேண்டும்.

எனவே உயிரினும் மேலான ஒழுக்கத்தை எம் வாழ்வில் கடைப்பிடித்து நல்லதொரு எழுச்சி மிக்க பண்பான சமூகத்தை உருவாக்க நாமெல்லாம் ஒழுக்க சீலர்களாக எம்மை ஆக்கிக் கொள்ள முனைவோம்.

**ச.மேகவர்தினி**
**9B**



# சுற்றுப்புறச் சூழலைப் பேணுவோம்

இன்று உலகெங்கும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. பத்திரிகைகளும் தொடர்ச்சியாக விளக்கங்களைத் தந்துகொண்டிருக்கின்றன. விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்த அளவிற்குச் சுற்றுச் சூழலை பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் வளர்ச்சி காணவில்லை. சூழலைப் பேணாது விட்டால் நிலம், நீர், வளி எல்லாம் எமக்குத் தீராத நோய்களையும், துன்பங்களையுமே பரிசாக வழங்கும். இதனால் தான் 'சுத்தம் சுகம் தரும்' எனக் கூறியுள்ளனர்.

இன்றைய காலத்திலே செயற்கைப் பசளைகளை அதிகம் பயன்படுத்துவதனால் மண்வளம் குறைந்துகொண்டே செல்கிறது. அத்துடன் மண்ணில் நச்சுக்கழிவுகளைப் புதைப்பதால் அவை கசிந்து மண்ணையும் நிலத்தையும், நீரையும், மாசுபடுத்துகின்றது. இன்று பொலித்தீன் கழிவுகளால் ஏற்படும் பிரச்சினை பூதாகாரமாக வடிவெடுத்துள்ளது பிளாஸ்ரிக் பொருட்கள் கடினமானவை. நீண்டகாலம் நிலைத்திருப்பவை. இவற்றைப் புதைப்பதால் மண் மாசுபடுகிறது. எரித்தாலோ வளி மாசடைகிறது. எனவே பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தினால் எமது சமுதாயம் புதைகுழிக்குள் தள்ளப்படும். புற்றுநோய்களின் தாக்கமும் அதிகரித்து மனிதர்களை நோயாளர் சமுதாயமாக மாற்றிவிடலாம்.

சுத்தம் பேணிச் சூழலைக் காக்கவேண்டிய மக்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றனர். "உன்னை நீயே திருத்திக்கொள் உலகம் தானாகவே திருந்தும் என்பது ஆன்றோர் வாக்கு. அதற்கிணங்க முதலில் நாம் ஒவ்வொரு வரும் எம்மையும் எம் இல்லத்தையும் சுற்றாடலையும் சுத்தமாகப் பேணப்பழகிக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நாடு முழுவதும் சுத்தமாக இருக்கும்.

அடுத்து வாகனங்களின் பாவனை, இன்று அளவிற்கு அதிகமாக அதிகரித்துள்ளது. வாகனங்கள் வெளியேற்றும் புகைகளாலும், தொழிற்சாலைகளிலிருந்தும் வெளியேறும் புகையாலும் மனித இனமே அழிவை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இதனைச் சற்றுக் குறைக்கும் வகையில் இன்று சகல வாகனங்களும் புகைப்பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தோடு இயற்கைத் தாவரங்கள் கண்டபடி அழிக்கப்படுவதால் இயற்கைச் சமநிலை பாதிப்புறுகிறது. இதனால் மழைவீழ்ச்சி குறைந்து

விடுகிறது. வரட்சி ஏற்படுகிறது. இதனால் நிலம், நீர், வளி அனைத்துமே மாசடைகின்றது.

உயிர்கள் வாழ்வதற்கு இன்றியமையாதது நீர். நீரின்றி உலகில்லை. எனவே நாம் நீரைப் பேணிப்பாதுகாக்கவேண்டும். நீர் நிலைகளில் தொழிற்சாலைக் கழிவு நீர்களும், அழுக்குப் பொருட்களும் வந்து கலப்பதால் நீர் மாசடைகின்றது. வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சாக்கடை வழியே செல்கிறது. இதனால் நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கிறது. இதனால் மலேரியா, வாந்திபேதி, டெங்கு போன்ற நோய்கள் உருவாவதற்கு காரணமாக அமைகின்றன. கழிவுகளை உரிய வகையில் அகற்றுவதற்கு ஏற்பாடு செய்தல் மிக அவசியமாகும். அதாவது கழிவகற்று வதற்கான சரியான பொறிமுறை இல்லாமையால் சூழற் சுத்தம் பாதிப்படைகின்றது.

எனவே மக்களின் ஒத்துழைப்பின்றி எந்த ஒரு செயற்பாட்டையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. கழிவுகளை வெளியே வீசாது உரிய இடங்களில் வீசப்பழக்க வேண்டும். இவற்றைச் சிறுவயதிலிருந்தே பழகிக்கொள்ள வேண்டும். தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் அல்லவா! சிறுவயது முதலே சூழலைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி அறிவூட்டல் வேண்டும். சுற்றாடலைப் பேணுவதன் மூலம் சுத்தமான காற்றையும் சுத்தமான நீரையும் பெறலாம். நோயின்றி வாழலாம். சூழல் இயற்கை எமக்குத் தந்த அருங்கொடை அதை அழியாது பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும். சுத்தம் பேணி சுகத்துடன் வாழ்வோம்.

**செல்வி.க.அனுப்பிரியா**
*தரம்* - 8B



# சமுதாய மாற்றத்தில் பாடசாலைகளின் பங்கு

ஆரோக்கியமான சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் எனின் அதில் மாற்றங்கள் என்பது தவிர்க்கமுடியாதது ஆகும். சமுதாய மாற்றத்தில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலத்துகின்றன. சமுதாய மாற்றத்தில் சில வேண்டத்தகாத மாற்றங்களும் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் சமுதாயம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையும் உருவாகின்றது. வேண்டத்தக்க சமுதாய மாற்றமே எல்லோராலும் விரும்பப்படுகின்றது.

சமுதாய மாற்றத்தில் பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்ற போதிலும் கல்வியே ஒரு வலுவான கருவியாக விளங்குகின்றது என்பது இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இன்று கல்வியை பல்வேறு வழிகளிலும் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் முறைசார்ந்த கல்வியை வழங்குவதில் பாடாலைகள் உயர்ந்த இடத்தைப் பெறுகின்றன.

சமுதாய மாற்றங்கள். என்பது பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றம், கலாசாரங்களில் ஏற்படும் மாற்றம், சமயத்துறையில் ஏற்படும் மாற்றம், அரசியல் துறையில் ஏற்படும் மாற்றம், பண்பாட்டுக் கோலங்களில் ஏற்படும் மாற்றம் எனப் பல்வேறு துறைகளாக பிரிந்து காணப்படுகின்றது.

சமுதாய மாற்றங்கள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன.

“சமுதாய நிகழ்வுகள், சமுதாயச் செயல்கள், சமுதாய நிர்வாக அமைப்பு என்பவற்றில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது வித்தியாசங்களை விளக்குவதே சமுதாய மாற்றம் எனப்படுகின்றது” என சேர் ஜோன்ஸ் (Sir Jones) குறிப்பிடுகின்றார்.

“ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கை முறைகளினது புவியியல் நிலமைகளுக்கு ஏற்றவாறு மக்களின் கண்டுபிடிப்புகளுக்கு ஏற்றவாறும் மாறுதல் அடைவதே சமுதாய மாற்றமாகும்” என கில்லின் (Gillin) என்பவர் குறிப்பிடுகின்றார்.

"சமுதாயத்தின் வடிவிலோ அல்லது சமுதாய நிறுவனங்களிலோ அல்லது அதன் உறவுமுறைகளிலோ ஏற்படும் மாற்றம் சமுதாய மாற்றமாகும்" என மக்சிவர் (Maciver) குறிப்பிடுகின்றார்.

எவ்வாறான மாற்றங்களாகவிருப்பினும், எவ்வாறான காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும் பாடசாலைக் கல்வி மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. பாடசாலை என்பது சமூக நிறுவனம் எனும் வகையில் மாணவர்கள். பெற்றோர்கள், சமூக நிறுவனங்கள் என்பவற்றுடன் நல்ல இடைத் தொடர்புகளைப் பேணி சமூகப் பெறுமானம் உடைய மாணவர்களை உருவாக்குவது அதன் கடமையும் பொறுப்புமாகும். இதனை தட்டிக்கழித்துவிட முடியாது.

ஒரு பாடசாலையில் பல்வேறு சமூகங்களில் இருந்து வெவ்வேறுபட்ட பண்பாடு, மன உணர்வு, அறிவு, கலாசாரம் போன்றவற்றுடன் வரும் பிள்ளைகள் மத்தியில் பாடசாலைச் சமூகத்திற்கு பொருந்தும் வகையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட வேண்டும்.

மாணவன் ஒருவனது நடத்தையை மாற்றியமைப்பதில் பாடசாலைகளின் பணி முக்கியமானது ஆகும். பாடசாலையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்களை மாணவர்கள் மீண்டும் சமுதாயத்திற்கு செலுத்துகின்றனர். ஒவ்வொரு தனி மாணவனும் இவ்வாறு கொண்டு செல்லும் விடயங்கள் சமுதாய வளர்ச்சிக்கு அல்லது மாற்றத்திற்கு உறுதுணையாகின்றது.

மனிதர்கள் மத்தியில் காணப்படும் பண்பாடற்ற நடத்தைகளையும், நெறிப்பிறழ்வான செயற்பாடுகளையும், வன்முறைச் செயற்பாடுகளையும் மாற்றி பண்பாடுள்ள சிந்திக்கும் தன்மைபெற்ற மனிதனை உருவாக்குவதில் பாடசாலைக்கல்வி முக்கியம் பெறுகின்றது.

சமுதாய மாற்றத்தினை ஏற்படுத்தும் பாடசாலையும் அதன் செயற்பாடுகளும் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

01. மனிதனை சிந்திக்க வைக்கும் வகையில் பொருத்தமான பாடங்கள் கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.
02. சமுதாய மாற்றத்தில் முக்கிய பங்குதாரராக விளங்கும் ஆசிரியர்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
03. பாடசாலைகளின் ஊடாக சமுதாய தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.
04. பாடசாலைகள் சமுதாயத்தின் அடிப்படையான கலாசாரப் பண்புகளை பிரதிபலித்தல் வேண்டும்.

05. சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும்.
06. சமூகத்திற்கு தேவையான நற்பிரஜையை உருவாக்க வேண்டும்.
07. மாணவர்களின் தீய செயற்பாடுகளையும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.
08. தேசியப்பற்று மனிதாபிமானம் என்பவற்றை வளர்த்துவிட வேண்டும்.
09. சமுதாயத்தின் குறிக்கோள்கள் அடையப்படும்வரை கல்வியில் நெகிழ்ச்சித்தன்மை இருக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்கள் திறம்பட ஏற்பட்டாலும் கூட சில சமூகங்களில் பெரியளவான மாற்றங்கள் ஏற்படவில்லை. இதற்கு அடிப்படை யாக அமைந்த காரணிகள் பின்வருமாறு,

1. மூட நம்பிக்கைகளுக்கும், மரபுகளுக்கும் மனிதன் கட்டுப்பட்டு வாழுதல்.
2. கல்வியில் நாட்டம் குறைவாகக் காணப்படுதல்
3. தமக்கு கிடைக்கும் அளவில் திருப்தியுடன் வாழ்க்கை நடாத்துதல்
4. தேவையற்ற நம்பிக்கைகளை தூக்கி வீச விருப்பம் இல்லாமை
5. புதுமைகளை சந்திக்க சில சமூகம் விரும்பாமை
6. புதுமைகளால் ஏதாவது நடந்துவிடும் என்கின்ற அச்சம் or பயம் காணப்படுதல்

எது எவ்வாறு இருப்பினும் சமுதாயத்தின் சில கட்டுப்பாடுகளில் இருந்து இன்று மக்கள் வெளிவருகின்றனர். பாடசாலைகளிலும் கற்பித்தல் கற்றல் முறைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது அவையாவன.

1. ஆரம்பகால குருகுல கல்வி மாறி இன்று குழந்தை கல்வியாக மாறியுள்ளது.
2. பாடசாலைகளில் மேலதிக கல்வி, சீர்மியக்கல்வி, விசேட கல்வி, உட்படுத்தல்கல்வி என மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
3. வரவொழுங்குக்குழு, ஏற்படுத்தப்பட்டுள்ளது
4. சுயகற்றல், தேடிக்கற்றல், அஞ்சல்வழி கற்றல், இணைய வழிக்கற்றல், குழுவாகக் கற்றல் என மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
5. கற்றல் – கற்பித்தல் கலாசாரம் தொழில்நுட்பத்தை நோக்கி நகர்ந்துள்ளது.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன.

1. சமூக நடவடிக்கைகளில் இருந்து விலகிவிட முடியாது.
2. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை உணர்ந்து காப்பாற்றி வாழும் தன்மை பெற்றிருக்க வேண்டும்.

3. தான்வாழும் சமூக நிலைமைக்குப் பொருந்துபவனாக தன்னை மாற்றி அமைக்க வேண்டும்.
4. ஏனையவர்கள் மீது எல்லாத் தேவைக்கும் தங்கி இருக்கக்கூடாது.
5. மற்றவர்களை புரிந்துகொண்டு அவர்களையும் இணைத்து வாழுதல் வேண்டும்.

மேற்குறித்த பண்புகளை கல்வி மனிதனுக்கு வழங்க வேண்டும். சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப கல்வி வழங்கப்பட வேண்டும் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. உயர்கல்வி நிறுவனங்கள் பல வகையான கற்கைநெறிகளை கொண்டிருத்தல்
2. போதியளவு ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் நியமித்தல்
3. ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்
4. ஆராட்சி மனப்பான்மையை தூண்டிவிடுதல்
5. ஒவ்வொருவரும் திறமையாகச் செயற்படுவதை உறுதிப்படுத்தல்
6. நிறுவனங்களில் செயற்படுபவர்களிடையே புரிந்துணர்வு ஏற்படுதல்
7. பண்பாடு கலாசாரம் என்பதில் சமதன்மை காணப்படல்
8. சிறந்தசேவை என்பது நிறுவனத்தின் நோக்கமாக இருத்தல்

எவ்வாறு இருக்கும்போதும் சமூக மாற்றத்திற்கு சில காரணிகள் அல்லது சக்திகள் இடையூறாகவும் உள்ளன அவையாவன

1. சாதி மத வேறுபாடுகள்
2. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்
3. அரசியல் சக்திகளின் தலையீடு
4. இளைஞர்களின் மனமுறிவுகள்
5. கலாசார வேறுபாடுகள்
6. தேசிய தலைமையில் விருப்பமின்மை

எனினும் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சமூக மாற்றம் தாமாகவே ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. இலவசக்கல்வியை வழங்குதல்
2. ஒரே மாதிரியான கல்வி வாய்ப்புகளை வழங்குதல்
3. பேதங்கள் அற்ற பாடசாலைகளை நிறுவுதல்
4. பிரதேச ரிதியான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்
5. பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தல்
6. கல்விக்கான உதவித் தொகையை வழங்குதல்

7. விசேட தேவையுள்ளோரை கருத்தில் எடுத்தல்
8. கல்விக்கான ஒதுக்கீடுகளை அதிகரித்தல்.

எது எவ்வாறிருப்பினும் சமுதாயமாற்றம் என்பது நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. ஆனால் வேண்டாத மாற்றங்களை தடுப்பதற்கு பாடசாலைகள் முனைப்புடன் செயற்படுவது வரலாற்றுக் கடமையாகும்.


உசாத்துணை நூல்கள்

1. டாக்டர்.பேரின்பநாதன் – ஆ.பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு, கலைமகள் கொம்பியூட்டர் பிறிண்டேர்ஸ்
2. பேராசிரியர் சின்னத்தம்பி.மா, புதிதாக சிந்திப்போம் சமுதாய மாற்றத்திற்கான கல்வி கரிகணன் பிறிண்டேர்ஸ் இல.681 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.
3. கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம், கடல், சமுதாய மாற்றத்தில் பாடசாலைகள்.



**திரு.இ.பாலச்சந்திரன்**

B.A(Hons), PGDE MEd (Hons)

*பிரதி அதிபர்*

*யா/செங்குந்த இந்துக்கல்லூரி*

*திருநெல்வேலி கிழக்கு*

*யாழ்ப்பாணம்.*



# கல்விச் செயற்பாட்டில் தாய்மொழி பெறுமிடம்

*"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலும் தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்"*

எனும் பாரதிதாசன் கூற்றுப்படி எல்லாவுயிர்க்கும் தாய்மொழியே இன்னுயிராம். இன்று உலகில் மூவாயிரம் மொழிகளுக்கு மேல் உண்டெனினும் பயன்பாட்டில் உள்ளதாயும் இலக்கிய வளமுடையதாயும் உலகச் செம்மொழியாயும் உள்ளவை சொற்பமேயாகும். இவற்றுள் தமிழ் மொழியும் ஒன்று என்பது தமிழர் அனைவரையும் இறும்பூது எய்த வைக்கும் ஒன்றாகும். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் நடைபெற்ற கடற்கோள்களினால் பல நூல்கள் அழிந்தொழிந்தும், இன்றும் இளமை குன்றாத வளரும் மொழியாகத் தமிழ் மொழி வாழ்கிறது. தமிழ் மொழியின் ஓசைகள் தொண்டைக்குக் கீழே போகாமல் அதற்கு மேலேயே எல்லா எழுத்துக்களின் ஓசைகளையும் இசைக்கும் பேறு உடையது வல்லோசை மெல்லோசை, இடையோசை ஆகியவற்றைக் கொண்ட (த, மி, ழ்) மொழியாக மிகக் குறைந்த மனித சக்தியையும் முயற்சியையும் வெளிப்படுத்தும் ஆற்றல் உடையதும் இதுவே.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட தாய்மொழியாகிய தமிழ் கல்விச் செயற்பாட்டில் பெறும் இடத்தைப்பற்றிச் சுருக்கமாக நோக்குவோம். உலகத்தில் வாழும் உயிரினங்கள் பலவும் தம் உணர்ச்சிகளை வெளிப்படுத்த ஓலியெழுப்புகின்றன. அவற்றை நாம் சிறப்புச் சொற்களால் கூறுகின்றோம். ஆனால், மக்கள் மட்டுமே 'பேசுகின்றனர்' எனச் சொல்கின்றோம். ஒருவர் தம் உணர்ச்சிகளையோ எண்ணங்களையோ மற்றவருக்கு வெளிப்படுத்தக் கருவியாயிருக்கும் எதனையும் நாம் மொழியென்று கூறுதல் சாலப் பொருந்துவதாகும். அந்தவகையில் விலங்கு முதலியவற்றின் ஒலிகள் அன்றிலிருந்து இன்றுவரை அவ்வாறேயிருக்க, மக்கள் எழுப்பிய ஒலி சிறிது சிறிதாகப் பொருள் தரும்

ஒன்றாக மாற்றம் பெற்று இன்றைய வடிவத்தை அடைந்துள்ளது. அதாவது ஒலி மூலமாகப் பரிமாறப்பட்ட கருத்துகள் ஒலிக்குறியீடுகளாக உருமாறி பேச்சுமொழியாக உருவெடுத்தது. காலப்போக்கில் மக்கள் தம் செவிகளால் மட்டும் உணரவல்ல ஒலி வடிவமான குறியீடுகளுக்குக் கண்களால் அறிந்துகொள்ளக் கூடிய வரிவடிவக் குறியீடுகளை அமைக்க முயன்று வெற்றி பெற்றதால் எழுத்துமொழி உருவாகிற்று. இன்றுகூட உலகில் பல மொழிகள் பேச்சுவழக்கில் மட்டுமே உள்ளன. எனவே பேச்சுமொழி மூலமாகவும் எடுத்துமொழி மூலமாகவும் நுட்பமான கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி அறிவின் வளர்ச்சியை எடுத்துக்காட்டி நிற்கும் உச்சநிலையே மொழி ஒன்றின் பேராற்றலாகும்.

கல்வியில் தாய்மொழியின் பயன்பாடு என்பது பல விடயங்களை உள்ளடக்கியது. ஒன்று மொழியின் இன்றியமையாமை மக்களுடைய அனைத்து விடயங்களிலும் மொழியின் பயன்பாடு அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது. பிறருடைய கவனத்தைத் தூண்டி ஈர்ப்பது மட்டுமல்லாமல் உணர்ச்சிகளை நிறைவு பெறத் தெளிவாக விவரிப்பதற்கும் கட்டளைகளையிட்டு வேலை வாங்கு வதற்கும் மொழி பயன்படுகிறது. மேலும் மொழியானது இலக்கியங்களைப் படித்து, உணர்ந்து, சுவைத்து மகிழவும் அறிவியல் ஆராய்ச்சி செய்யவும் கட்டுரைகளைப் படித்து, உணர்ந்து, சுவைத்து மகிழவும் அறிவியல் ஆராய்ச்சி செய்யவும் கட்டுரைகள் எழுதவும் சொற்பொழிவுகள் ஆற்றவும் உதவுகிறது. கற்றோருக்கு மட்டுமல்லாது மற்றோருக்கும் அன்றாட வேலைகளிலும் அன்போடு அரவணைத்துப் பேசவும் தவறு காணுங்கால் கடுஞ்சொல் கூறித் திருத்தவும் பயன்படுவதோடு உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் மறைக்கவும் உதவுகிறது. இவ்வாறு மொழியின் இன்றியமையாமை கல்வியிலும் சமூகத்திலும் பெறுமிடம் பெருமதிப்புக்குரியது.

மொழியானது எண்ணத்தை வெளியிடும் கருவியாகும். தாய்மொழி மூலமாக நம் எண்ணங்களையும் கருத்துகளையும் உணர்ச்சிகளையும் வெளியிடும்போது அவை சிறந்த முறையில் அமைவது மட்டுமல்லாது கூற நினைத்த கருத்துகளைச் செவ்வனே கூறுகிற தன்மையையும் பெற்று விடுகிறது. மொழித்தேர்ச்சி இதற்கு மிக அவசியமாகும். நுண்ணிய எண்ணங்களைக் கேட்பவர் மனங்கொள்ளத் தக்கவகையில் கூறுவதும், கூறும் திறன் பெறுவதும் மொழித்தேர்ச்சியினாலே யாகும், சொல்ல வந்த கருத்தை சொல்லக்கூடிய முறையிலே சொல்லுபவனை இவ்வுலகத்திலே வெல்லுதல் அரிதான செயலாகும். இதனால் தான் திருவள்ளுவர்.

***"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை***
***இகல் வெல்லல் யார்க்கும் அரிது"***

என்று கூறிச் சென்றார், இந்த நிலை வரவேண்டுமாயின் சிந்தனைத் தேட்டம் இருக்கவேண்டும் சிந்தனையற்ற செயல்திறன் அடைவதில்லை. இதனைக் கருத்திற்கொண்டே திருவள்ளுவரும் 'எண்ணித் துணிக கருமம்" என்றார்.

கருத்துகளைச் சிந்தனைக்குட்படுத்தும் போதுதான் அவை உரமும் தெளிவும் பெறுகின்றன. தெளிவுடன் பேசுகின்ற போதே கூறவந்த எண்ணங்களை செவ்வை யாகக் கூறமுடியும். சிந்திக்கும் ஆற்றல் மொழித்திறனையும் வளர்த்துச்செல்லும் கல்வி மேம்பாட்டிற்கு சிந்தனை வளர்ச்சியும் மிக அவசியமான ஒன்றாகும்.

நாம் பெறும் அனுபவங்களைச் சிறப்பாகக்கூறும் ஆற்றல் பெறுதலும் எண்ணங்களை வெளிப்படுத்துவது போன்ற ஒன்றாகும். அனுபவங்களைக் கூறுகின்ற போது மனநிறைவும், கேட்பதால் அனுபவ அறிவும் கிடைக்கப்பெறுகிறது. அனுபவ அறிவு வாழ்க்கையை நடத்திச்செல்ல உதவும் ஒன்றாகும். ஒருவன் சமூக வாழ்க்கையில் சிறந்த உறுப்பினராகத் திகழ மொழியைத் திறமையாகக் கையாளுதலின் தேவையை நாம் நன்குணரலாம். மேலும் செயலாற்றலோடு எந்தக் காரியத்திலீடுபட்டாலும் அதனைத் திறமையாகவும் மிகுந்த பயனுடையதாகவும் செய்ய மொழியின் துணை இன்றியமையாததாகும். ஒரு விடயத்தைப்பற்றி அறிய வேண்டுமாயின் பிறர்கூறக் கேட்டோ அல்லது நூல்களை வாசித்தோ ஆராய்ந்தோ அறிய வேண்டும். கூறுவதைக் கேட்கவும் வாசித்ததை நன்குணரவும் மொழியறிவு மிகத் தேவையானது தாய்மொழியில் இவற்றிலீடுபடுகிறபோது முழுமையான பயனைப் பெறமுடிகிறது. எனவே தாய்மொழிக் கல்வியில் பெறுமிடம் என்பது மிக முக்கியமான தொன்றாகும்.

அறிவுக் களஞ்சியங்களில் தேர்ச்சிபெறுதலும் தாய்மொழி மூலம் பெறக்கூடிய பயன்களில் ஒன்றாகும். ஒவ்வொரு மொழியிலும் அம்மொழி பேசும் மக்கள் தம் அனுபவத்தினையும் தம் உயர் கருத்துகளையும் உரைநடையில் எழுதியும் பாடல்களால் பாடியும் பின் சந்ததியினர் பயன் அடையும் படி விட்டுச் சென்றுள்ளனர். அவை என்றும் இறவா நிலையுடைய இலக்கியங்களாக விளங்குகின்றன. அவ்வறிவுக் களஞ்சியங்களைப் படித்துணரவும் சுவைத்து இன்புறவும் போற்றிப் பாதுகாக்கவும் மொழித்தேர்ச்சி இன்றியமையாததாகும். நம் முன்னோர் அளித்த அருஞ் செல்வங்களையறிய மொழி ஒரு கருவியாகத் திகழ்கிறது. பண்டைய மக்களின் வாழ்வியலை அறிந்து இன்றைய வாழ்வியலுடன் இணைத்துப் புதிய பயன்களைப்பெற உதவுவது தாய்மொழிக் கல்வியாகும். 'இலக்கியம் வாழ்க்கையையும் எதிரொளித்துக் காட்டும் கண்ணாடி' என்று அறிஞர் கூறுவர். 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நம்மொழியில் ஆக்கவேண்டும்' என்ற பாரதியின் கனவு மெய்ப்பட மொழி அறிவு மிக அவசியமானதாகும்.

மொழியானது கற்பிக்கும் வாயிலாக விளங்கி ஆசிரியருக்கும் மாணவருக்கு மிடையில் நல்லிடைத் தொடர்புகளை வளர்க்க ஏதுவாகின்றது. மேலும் தாய்மொழிக் கல்வியில் ஒரு விடயத்தின் நேர்ப்பொருளையும் எதிர்ப்பொருளையும் அறியமுடியும். அது மட்டுமல்லாது அனுபவத்தோடு கூடிய பண்பும் பொருளையும் உணர்ந்துகொள்ள

முடிகிறது. எனவே தாய்மொழியில் தான் ஒருவர் எளிதாகக் கற்க முடியும். இச் சிறப்புணர்ந்தே தாய்மொழிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.

தாய்மொழிக் கல்வியால் மொழியைத் திறமையாகக் கையாளமுடியும். ஏனைய மொழிகளை விளங்கிக்கொள்ளவும் முதலில் தாய்மொழிக் கல்வி அவசியமாகும். அடிப்படைத் திறன்களான கேட்டல், பேச்சு, எழுத்துத் திறன்கள் பெறுதல் ஆரம்ப நிலையாகும். ஆரம்ப வகுப்புகளிலும் இடைநிலை வகுப்புகளிலும் அடிப்படைத்திறன்களில் போதிய தேர்ச்சியை மாணவர்கள் பெற்றுக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட வேண்டும். கிரகித்தல் திறனையும் இலக்கணப் பயிற்சியையும் எழுத்தாற்றலையும் வளர்பதற்குரிய பயிற்சிகளை ஆசிரியர்கள் வழங்கி மாணாக்கர்களை தோச்சியுறச் செய்யவேண்டும். அடிப்படைத் திறன்களின் தேர்ச்சி, இலக்கிய நயமுணர்ந்து செயற்படவும், சிந்தனையை வளர்க்கவும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கவும், எண்ணங்களை வெளியிடவும், படைப்பாற்றலை வளர்க்கவும், வாழ்க்கை நுகர்வுகளை எடுத்துக்கூறவும் கற்பனைத் திறனை வளர்க்கவும், மக்கட் பண்பாட்டை அறியவும், ஒழுக்க உயர்வை வலியுறுத்தவும் சமூகப் பண்பாட்டு மரபை அறியவும் மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் ஏற்படுத்தவும் பெரிதும் உதவுகிறது. எனவே தாய்மொழிக்கல்வி, கல்விச் சொற்பாட்டில் பெறுமிடத்தையும் அதனால் கிடைக்கும் பயன்களையும் உணர்ந்து தாய்மொழியைத் தவறின்றிக் கற்றுப் பயன்பெற முனைவோம்.


உசாத்துணை நூல்கள்

1. தமிழ்மொழியின் மாட்சியும் – கதிர்.தணிகாசலம் பரந்த பண்பாடும்
2. நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் – பேராசிரியர் வி.கணபதி



**திருமதி.வ.சத்தியபாலன்**

*ஆசிரியர்- யா/செங்குந்த இந்துக் கல்லூரி*



# உடற் திணிவுச் சுட்டியைப் பேணவேண்டியதன் அவசியம்

## (Body Mass Index -BMI)

வேகமான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி,வேகமான உணவுப் பழக்க வழக்கங்கள், வேலைவாய்ப்பு முறைகள் மனிதர்களை உடல்பருமன் என்னும் புதிய நெருக்கீட்டினுள் தள்ளியுள்ளமை தற்போதுள்ள பிரச்சினைகளில் ஒன்று. அந்தவகையில் இத்தொடர் உடற்திணிவுச்சுட்டியை எவ்வாறு பேணுவது என்பதனை மையமாகக் கொண்டது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கு இணங்க மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நேயின்றி சுகதேகியாக வாழ்வதே அவனுக்கு குறைவில்லாத செல்வமாகும். அந்தவகையில் ஒவ்வொரு மனிதனும் சுகதேகியாக வாழ்வதற்கு அவனது உடற்திணிவுச்சுட்டியைப் பேணவேண்டியது அவசியமான ஒன்றாகும்.

உடற்திணிவுச்சுட்டி என்பது எந்த வயதைச் சேர்ந்தவராயினும், தனது உயரத்திற்கு பொருத்தமான நிறையைப் பேணவேண்டியது அவசியமாகும். அதாவது ஒருவரின் உயரம்,நிறை ஆகியவற்றுக் கிடையிலான தொடர்பைக் காட்டுவதே உடற்திணிவுச்சுட்டி எனக் கூறப்படுகின்றது.

உடற்திணிவுச் சுட்டி பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.

$$BMI = \text{நிறை (kg)} / \text{உயரம்}^2 \text{(m)}$$

நபர் ஒருவரின் உயரம் 1.5m, நிறை 49kg ஆகவே உடற்திணிவுச்சுட்டி 49/1.5x1.5=21.78

எனவே ஆசிய நாட்டு அளவீட்டு ரீதியில் கணிக்கப்படும் உடற்திணிவுச் சுட்டிக்கணிப்பானது சர்வதேச ரீதியிலான உடற்திணிவுச்சுட்டிக் கணிப்பிலும் பார்க்க சிறிதளவில் வேறுபட்டுள்ளதைப் பின்வரும் அட்டவணை மூலம் அவதானிக்க முடியும்.

**ஆசிய நாட்டவருக்கு சிபார்சு செய்யப்பட்ட உடற்திணிவுச்சுட்டி**

| உடற்திணிவுச்சுட்டி | ஆளின் உடல் நிறையின் தன்மை |
|---|---|
| 18.5 இலும் குறைவு | குறைவான உடல் நிறை |
| 18.5–22.5 வரை | அங்கீகரக்கப்பட்ட / சாதாரன நிறை |
| 22.5–25.0 வரை | உயர்வான உடல் நிறை |
| 25.0 இற்கு அதிகம் | மிக உயர்வான நிறை |

சர்வதேச ரீதியில் சிபார்சு செய்யப்பட்ட உடற் திணிவுச் சுட்டியானது

| உடற்திணிவுச்சுட்டி | ஆளின் உடல் நிறையின் தன்மை |
|---|---|
| 18.5 இலும் குறைவு | குறைவான உடல் நிறை |
| 18.5–22.5 வரை | அங்கீகரக்கப்பட்ட / சாதாரன நிறை |
| 22.5–25.0 வரை | உயர்வான உடல் நிறை |
| 25.0 இற்கு அதிகம் | மிக உயர்வான நிறை |

இவ்வாறு கணிக்கப்பட்ட ஆசிய மற்றும் சர்வதேச அளவுகளில் 18.5–24.9 வரையான அளவினை உடற்திணிவுச் சுட்டியாகக் கொண்டிருக்கும் நபர் சுகதேகியாகக் கணிப்பிட முடிகின்றது இங்கு 25.0 ற்கு மேற்பட்ட நபராயின் நோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். எனவே வாழ்வில் உடற்திணிவினைப் பேணல் என்பது முக்கிய விடயமாகக் கொள்ளப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை மூலமாக அன்றி வேறு சில வழிமுறை ஊடாகவும் உடற்திணிவினைக் கணிக்கலாம்

- நபர்களின் இடைச்சுற்றளவு ஆண் 90 செ.மீ,பெண் 80 செ.மீ கூடுமாயின்
- குருதி அமுக்கம் 140/100 இலும் கூடுமாயின்
- நபரின் இடைக்கும் இடுப்பிற்கும் இடையிலான சுற்றளவு கூடுமாயின் (ஆண்கள்–0.9, பெண்கள்–0.8) அந்நபர் நோய்த் தொற்றுக்கு ஆளாகும் வாய்ப்பு அதிகம் என வைத்தியர்கள் கூறுகின்றனர். இவ்வாறு சராசரி அளவிலும் கூடுதலாகக் காணப்படும் உடற்திணிவுச்சுட்டி பின்வரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்
- நீரிழிவு
- அதிக உடற்பருமன்
- இதய நோய்
- கொலஸ்ரோல் அதிகரித்தல்
- உயர்குருதி அமுக்கம்

**திருமதி. உஷாஆனந்தி வித்திஆனந்தன்**
*மனைப்பொருளியல் ஆசிரியை*
*யா/செங்குந்த இந்துக் கல்லூரி*



# சவால்மிக்க ஆசிரிய உலகில் சாதிக்க உதவிடும் விழுமியக்கல்வி

"கற்றலின் பயன் கடவுளை அடைதலாகும்" இது எமது நாட்டின் தேசிய வீரர்களுள் ஒருவரும் சமய, சமூக, கல்விப்பணி ஆற்றியவரும் கட்டாய கிறிஸ்தவ மதச் சட்டத்தை தனி ஒருவராக நின்று சட்டசபையில் அடுத்தவருமாகிய சேர் பொன் இராமநாதனது அருள் வாக்காகும். கடவுகளை அடையாவிடினும் கடையனாக இல்லாது கடைத்தேற்றம் அடைந்து பிறர் மதிக்க வாழ்வது ஆன்மீகம், விழுமியம் அவசியமல்லவா? இன்று கலைத்திட்டத்தில் ஆன்மீகம் சார் பாடத்திட்டம் அல்லது விழுமியம் அல்லது நீதிசார் கலைத்திட்ட உள்ளடக்கம் குறைவாகவே காணப்படுகின்றது. சமய பாடம் கூட வாரத்தில் இரு நாட்கள் இருபாட வேளைகளுடன் நிறைவு பெறுகின்றது. இதற்கும் மேலாக பாட வேளை குறைவான ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்படும் பாடமாகவும் எவரும் கற்பிக்கக்கூடிய இலகுவான பாடமாகவும் இது நோக்கப்படும் பரிதாப நிலையம் உள்ளது. சமய விழுமியங்களைப் பின்பற்றாத வரும் அல்லது நீதிவழுவாது வாழ்வோர் அல்லாதவராலும் போதிக்கப்படும் நிலையுமே உள்ளது. மனிதனுக்காகவே சமயம் உருவாகியது சமயத்திற்காக மனிதன் இல்லை என்ற உண்மையை நாம் உணர வேண்டும். அப்போது தான் மாணவர்களுக்கும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியரும் கற்றலின் பயனை அடைய முடியும்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்பது தமிழராகிய எமது கோட்பாடாகும் பண்புடையவரை உருவாக்குவதில் இன்றைய பாடசாலைகளும் கலைத்திட்ட வடிவமைப்பாளரும் ஆசிரியர்களும் தோல்வியையே தழுவி வருகின்றனர் என்பது பலரது குற்றச்சாட்டாகும். இவ்வாறு குற்றம் சுமத்திக் கொண்டிருப்பதால் என்ன பயன்? இதற்கு தீர்வு கிடைக்காதா? ஆசிரிய உலகம் இது குறித்து மீளவும் சிந்திக்க வேணடிய காலமிது எமது சமயமானது பண்பாட்டை மறைமுகமாக சுட்டி நிற்கிறது. மாணவரை ஆன்மீக, நீதிநெறி சார் வாழ்க்கைக்கு உட்படுத்தும் பட்சத்தில் இதில் ஓரளவு வெற்றி காண முடியும் எனலாம். இன்று பலரும் காலையும் மாலையும் இறைவனை வழிபடுவது தான் சமயமென நினைக்கின்றார்கள். பேராசிரியர் இராதாக் கிருஷ்ணனும் "மறைபொருள் பற்றிய கல்வியையும் கரிகைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மைகளையும் அறிதல் மட்டும் சமயமாகி விடாது" என்கிறார். எனவே உண்மையான வாழ்வியலிலேயே தான் கடைப்பிடிப்பதிலேயே சமய வாழ்வு பெரிதும் தங்கி உள்ளது. ஆசிரியர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். முன்னைய காலங்களில் பாடசாலைகள் தோறும் சமயப்

பெரியார்கள், ஞானிகளது குருபூசைகள், நினைவுதினங்கள் கொண்டாடப்படுவதும் அவ் விழாக்களிலே ஆன்மீக அல்லது சமூகப் பெரியார்களை அழைத்து சொற்பொழிவாற்றுவதும் மாணவர்களுக்கு விழிப்பையும் கருத்தேற்றங்களையும் மேற்கொண்டிருந்தன. இந்நிலை இன்று அருகிவிட்டது. ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலிருந்தும் பல அறிஞர்கள் ஈழத்திற்கு வருகை தந்து உரை நிகழ்த்தி விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர் இந்நிலையும் இன்று குறைவடைந்து விட்டது.

உண்மைச் சமயம் வேண்டி நிற்பது ஒழுக்கத்தையே இதையே பேராசிரியர் இராதாகிருஷ்ணனும் "உண்மைச் சமயம் வேண்டுவது சடங்குகள் அல்ல நல் நடத்தையையே" என்கிறார் ஜேர்மனிய தத்துவஞானியாகிய இமானுவல் கான்ற் என்பவரும் "நன் மனப்பாங்கு உளத்தூய்மையைத் தருவதே சமயம்" என்கிறார் சுவாமி விவேகானந்தரும் அன்பு, சேவை, காதல், தியாகம், தொண்டு, பக்தி வளர வேண்டும் அன்பே கடவுள் என்கிறார். கல்வியின் நோக்கமும் ஒழுக்க விழுமியம், சமூக மேம்பாட்டுக்கு உதவுவதே ஆகும். இவற்றை வளர்ப்பதில் பாடசாலைகளின் வகிபங்கு மிகவும் காத்திரமாக அமைதல் வேண்டும்.

ஒருவரின் ஆளுமை முழுமையாக விருத்தியமைவதற்கு சமயக்கல்வி அவசியம் என்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். விதிவிலக்காக கல்வியே கற்காத சிலரும் பண்பாட்டாளர்களையும் படிக்காத மேதைகளாகவும் உருவாகி உள்ளனர். வில்லிஸ் பிரபு கூட "கல்வியின் நோக்கம் மனக்கதவுகளைத் திறப்பது" என்கிறார் எனவே மாணவர்களது மனக்கதவுகளை அகலத்திறந்து உள்ளத்து மாசுக்களை முழுமையாக நீக்கி ஒழுக்கசீலர்களாக உருவாகிட எமது கல்வி உதவ வேண்டும். கல்வி நிறுவனங்களும் ஆசிரியர்களின் பணியும் இதற்கேற்பவே அமைய வேண்டும்.

"ஒழுக்க வாழ்க்கை வாழ்வோரையும் வாழ்க்கையை செம்மையாக அமைத்துக் கொள்வோரையுமே கல்விகற்றோர் என்கிறது உலது" எனவே கல்விகற்றோரை உருவாக்கிடும் ஆசிரியர்கள் மேற்படி வாழலை வாழ்வதுடன் தம்மைநாடி வரும் மாணவ உலகையும் அத்தகைய வாழ்வு வாழ வழிகாட்டியும், விழுமியக் கருத்துக்களும் சமய பாடக் கருத்தையும் அவர்களது மனங்களில் விதைத்திட வேண்டும். "தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்கிறது குறள். இத்தகையவரை உருவாக்கிடும் வகையில் எமது கல்விமுறைமை மாற்றமுற வேண்டியது அவசியமாகும். கல்வியினால் அறிவுபெருகும், திறன்வளரும், மனப்பான்மை மாற்றமுறும் இதில் மனப்பான்மை மாற்றத்திற்கு விழுமியக்கல்வி உதவிடும் எனலாம்.

காட்டில் மிதித்த இலைகூட ஒரு பத்து வருடத்தில் திரும்ப பார்த்தபோது அனைத்தும் மாறிவிட்டது எமது பாடசாலைகள் மட்டும் மாறவில்லை. என கூறும்

அளவிற்கு பாடசாலைகள் தம்மை மாற்றவில்லை எனலாம். இவை மாற்றமுற வேண்டும் இன்றைய நிலையில் அறிவியல், திறன்சார் கல்வி வேகமாக வளர்ந்து வரும் அளவிற்கு மனப்பாங்கு சார் கல்வி வளரவில்லை. இவற்றை வளர்க்க வேண்டியது ஆசிரியர்களது பிரதான கடமையாகும். "நல்லார் விளையும் தக்கார் தாராளமும் தாழ்விலாச் செல்வந்தரும் சேர்வதே நாடு" என்றனர். நம்முன்னோர் இவை மெய்த்திடல் வேண்டும் இதற்கு ஆசிரியரும் கல்வியுலகும் உதவிட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மக்கள் அனைவரும் கற்றுச்சிறப்பாக வாழ விரும்புகின்றனர். கல்வியின் மூலம் அவர் அறிவு பெருகுவதுடன் திறன்களும் வளர்கின்றன. மனப்பாங்குகளும் மாற்றம் பெறுகின்றன என்பது கல்வியியலாளர்களது கருத்தாகும். இன்று மாணவர் மையக் கல்வி சிறப்புற்றுள்ள போதிலும் சமூகம் வேண்டத்தக்க தலைமைத்துவமும் சிறந்த ஆளுமையும் செயற்றிறனும் மிக்க ஒரு மாணவர் சமூகம் உருவாக்கப்படுவதற்கு சில தடைகள் உள்ளன. அவை

குடும்பம் சார் தடைகள்

சமூகம் சார் தடைகள்

பாடசாலைகள் சார் தடைகள்

என பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் குடும்பம் சார் தடைகள் எனும் போது எல்லாப் பெற்றாரும் அறிவுசார், திறன்சார் கல்வியையே தமது பிள்ளைகள் பெற வேண்டும் என அல்லும் பகலும் உழைக் கிறார்கள். குடும்ப உறவுகள், கூட்டுக்குடும்ப வாழ்க்கை நன்மை தீமை கொண்டாட்டங்கள், வாழ்வியல் சடங்குகள் சம்பிரதாயங்கள், ஆன்மீக விடயங்கள், அறநெறி போதனைகள், சமூகத்துடன் இணைதல் என எதிலுமே பிள்ளைகளை ஈடுபடுத்தாது கல்வியை மட்டும் இலக்காக்கி பிள்ளைகளை வளர்க்கிறார்கள். இதனால் பிள்ளைகள் தவறுகளை தெரிந்தோ தெரியாமலோ, சரியென நினைத்து செய்வதும் நெறிபிறழ்வுகட்கு இலகுவில் உட்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. முற்காலத்தில் ஊரில் உள்ள உறவுகள் ஆலயங்கள், சமூக நிறுவனங்கள், பெரியவர்கள் பிள்ளைகளுக்கு சீர்மியர்களாக விளங்கி நல்வழிப்படுத்தினர் தவறும் போதெல்லாம் தட்டித்திருத்தினர் இந்நிலை இன்று நகரவாழ்வோடு மறைத்துவிட்டன.

சமூகம் சார் தடைகள் எனும் போது இன்று சமூக அமைப்பு சிதறி பல்இன, மொழி, சமய, சமுதாய நிலை உருவாகிவிட்டன. போட்டி, பொறாமை என பல்வேறு குரோதநிலைகளும் ஏற்பட்டு ஒரு தீங்குறு கூட்டத்தை உருவாக்குவனவாக சமூக செயற்பாடுகளும் மாறி விடுகின்றன. சமூகப்பற்று இளம் சமுதாயத்திடம் வளர்க்கப் படவில்லை. தவறுவிடும் போது சமூகம் தன்னைத் தண்டிக்கும் என கருதும் நிலையும் மாறிவிட்டன. இதுவும் சமூக மாற்றம் காரணமாக மாணவர் மாற்றமுற காரணமாகி உள்ளன.

பாடசாலை சார் காரணிகள் என்ற வகையில் இன்றைய கற்பித்தல் முறைகளில்

அறிவுப் பாடங்கள்

திறன்சார் பாடங்கள்

மனப்பாங்கு சார் பாடங்கள் என மூவகை பாடங்கள் போதிக்கப் படுகின்றன. இம்மூன்று பாடங்களும் அவை சார் திறன்களும் விருத்தி செய்யப்படு கின்ற போதே சமூகப் பொருத்தப்பாடுடைய பிரஜைகளை உருவாக்க முடியும் எந்த ஒரு பாடத்தை கற்பிக்கும் போதும் படிக்கும் போதும் அப்பாடங்களுக்கும் அடிப்படையான மொழித்திறனை கையாளும் திறனை பெற்றிருக்க வேண்டும். மொழித்திறன் விருத்தியினாலேயே ஏனைய திறன்கள் விருத்தி பெற முடிகிறது. நூல்களை கற்று உய்வடைய முடிகின்றது. இதனாலேயே வடநூல் ஒன்று நீதி கூறும் அறநூல் நல்லாசானைப் போலவும் நற்கருத்தைக்கூறும் கதைகள் நண்பரைப் போலவும் இதிகாசங்கள் அன்பு மனைவியை போலவும் விளங்கி மனிதனை வாழ வைக்கிறது என்கிறது. இவற்றை கற்கவும் கற்பிக்கவும் மொழித்திறன் அவசிய மாகின்றது. ஆசிரியர்கள் தாம் மொழித்திறனை விருத்தி செய்வதுடன் மாணவருக்கும் வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் கடமை உணர்வு, கற்பித்தல் திறன், பாடப்புலமை, தியாக மனப்பாங்கு, உதவிடும் மனம் முன்மாதிரியான வாழ்வு, சமூக உறவு, தலைமைத்துவப் பண்பு என்பவற்றை உடையவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். பெரும்பாலானவர்களிடம் இவை குறைவாகவே காணப்படுகின்றன. இதுவும் மாணவர் முன்மாதிரியாக கொள்ளாமைக்கும், தவறு விடுவதற்கும் தவறான முன்னுதாரணத்தை பெறுவதற்கும் காரணமாகி விடுகின்றது. ஆசிரியர் மாணவரிடையே சிறந்த தொடர்பாடலின்மையும் வகுப்பறையின் தோல்விக்கு மற்றொரு காரணம் எனலாம். இதனாலேதான் நெல்சன் மண்டேலா ஒரு மாணவன். ஒரு ஆசிரியன், ஒரு புத்தகம், ஒரு பேனா உலகையே மாற்றும் சக்தி உடையது என்கிறார். எனவே ஆசிரியர் வகிபாகம் மாற்றமுற வேண்டியது அவசியமாகின்றது. ஆசிரியர் அடக்குமுறையாளராக, தண்டனையாளராக இராது உடன்பிறவா சோதரனாகவும் நல்ல நண்பரைப் போலவும் தலைவனைப் போல் வழிப்படுத்தலும் பன்முக வகிபாகத்தை பெற்று செயலாற்ற வேண்டியது அவசியமாகின்றது. அறநீதிக் கருத்துக்களையும் விழுமியப் பண்பு களையும், பெரியார் வாழ்வினையும் மாணவருக்கு உதாரணமாக்கி போதிக்க வேண்டிய பொறுப்பும் ஆசிரியரையே சார்ந்துள்ளது எனலாம். எனவே சங்க இலக்கியம் கூறுகின்ற "பண்புடையார் தம்மை அறிவுடையாராக்குங்கள்" என்ற கோட்பாட்டை ஆசிரியர்கள் ஏற்று மாணவரிடம் முதலில் விழுமியப் பண்புகளை வளர்த்த பின்னே கல்வியறிவை வளர்க்க வேண்டும் இல்லையெனில் எமது சமூகம் வேண்டுகின்ற உத்தமர்களை உருவாக்க முடியாது கோடி செல்வமும் ஆடம்பர வாழ்வும் நிரந்தரமற்றது மனிதன் பிறப்பதும் இறப்பதும்

இயற்கையின் நியதியே ஆயினும் இறந்த பின்னரும் வாழும் அல்லது நல்ல முறையில் பேசப்படும் ஒருவராக எமது வாழ்வு மாற வேண்டும் இதற்கு விழுமியக்கல்விப் போதனையும் அதன் படியான வாழ்வும் வேண்டப்படுகின்றது. ஆசிரியர்கள் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இல்லை எனில் இளம் சமுதாயம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுப்பது தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும் எனலாம். எனவே தீமை செய்தவர் மீதும் அன்பு கொண்ட காந்தியை போல தவறும் மாணவரையும் அரவணைத்துய்தி பெறச் செய்திடல் ஆசிரிய சமூகத்தின் முன் உள்ள சவாலாகும். ஏற்று வெற்றி பெறுவதே நல்ல ஆசிரியத்துவமாகும்.

**உசாத்துணை**


1. விவேகானந்தர் உரைகள் இராமகிருஷ்ணமிஷன் வெளியீடு
2. தமிழ் ஐவகைப் பாடங்களும் திறன் அடிப்படையில் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ் வெளியீடு
3. பாடசாலையும் கலைத்திட்டமும் யாழ்ப்பாணம்.
4. கற்பித்தல் – கற்றல் முறையியல்கள் தேசிய கல்வி நிறுவன வெளியீடு
5. தமிழிலக்கிய வரலாறு நர்மதா பதிப்பக வெளியீடு.



**முனைவர் சின்னத்தம்பி பத்மராசா**
B.A (cey) P.G.D.E, M.Ed, (merit) M.Phil, PhD,
*விரிவுரையாளர்,*
*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*



# ஆங்கில மொழிக்கற்பித்தலில் அரங்கச் செயற்பணிகளின் பயன்பாடு

**(The Use of Theatre Tasks in English Language Teaching)**

**அறிமுகம்**

மனிதன் தனது உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் பிரதிபலிக்க விலங்குகளைப் போல சைகைகளையும், சத்தங்களையும் பயன்படுத்தினான். இதுவே தொடர்பாடலின் ஆரம்பமாக இருந்தது. அத்துடன் தனது முகபாவங்களையும், கண் வீச்சையும் தாக்கமான தொடர்பாடலுக்கு பயன்படுத்திக் கொண்டான். காலம் செல்லச் செல்ல தான் அணியும் ஆடைகள் அணிகலன்கள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி உணர்வுகளைப் பரிமாறினான். உடல் மொழியோடு கூடிய சத்தங்களும் தொடர்ந்து மொழியின் பயன்பாடு என்பன அவனுடைய தொடர்பாடலை மேலும் சிறப்பானதாக வளர சாத்தியமாக்கியது.

மனிதனுடைய இந்தத் தொடர்பாடலோடு அரங்கம் கூடவே வளர்ந்து வந்தது. தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்பட்ட சைகைகள், சத்தங்கள் உடல் மொழிப் பரிமாற்றம் என்பன அரங்கின் ஊடகங்களாக மாறின. ஒரு செய்தியைச் சொல்லுவதற்கான மார்க்கங்கள் ஆகின. கருத்துக்களைச் செய்து காட்டும் அல்லது போலச் செய்யும் கருவிகளாகின. இவையே பின்னர் சடங்குகளாகவும், பண்பாட்டுச் சின்னங்களாகவும் உருவாகின. செய்து காட்டுபவன் முக்கியமானவன் ஆனான். சடங்குகளை நடாத்தும் தலைமை ஆள் ஆனான். வார்த்தைகளை கருத்துச் சொல்லும் ஊடகம் ஆக்கினான். வார்த்தைகள் தாளத்துக்கும், சுருதிக்கும் ஏற்ப பாடல்கள் ஆகின. கருத்துப் பரிமாறும் ஊடகம் ஆக அரங்கு உருமாறியது.

மக்களின் வாழ்வில் செறிவாக உள்வாங்கப்பட்ட அரங்க ஆடல், உடல் மொழிப் பயன்பாடு என்பன சிறுவர்களாக மனிதன் வளர்கின்ற காலம் தொட்டு உயிரோடு ஒன்றாகிய திறன் ஆகியது. இந்தப் "போலச் செய்தல்" என்பதும் "செய்து காட்டுதல்" என்பதும் சிறுவர்களின் இயல்பான குணங்களாக பரிமளித்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

**ஆங்கிலம் கற்பித்தல் முறைகள்**

இன்று ஆங்கிலம் கற்பித்தலில் நமது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை எவ்வாறு தீர்க்க முடியும் என்பதற்கு ஒரு விடைகாண இக்கட்டுரை முயல்கிறது. ஆங்கிலேயரின் நாடுபிடிப்புக் கொள்கையோடு மதமாற்றம், ஆங்கில மொழித் திணிப்பு

அதனோடு கூடிய ஆங்கில மொழி ஆட்சி என்பன காலனித்துவ நாடுகளில் ஆங்கிலத்தை அரசோச்சும் மொழியாக மாற்றியதால் இலங்கைத் திருநாட்டில் ஆங்கிலத்தின் செல்வாக்கு இன்று வரை நிலவுகிறது.

உலகளாவிய ரீதியிலும் ஆங்கில மொழி உயர் கல்வி, வர்த்தகம் சர்தேச அரசியல் என செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருப்பதால் ஆங்கில மொழிக் கல்வி என்பது மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. இதனால் எமது பிள்ளைகளுக்கு ஆங்கில மொழியை சிறப்பான முறையில் கற்பிப்பதற்கான வழிவகைகளை காண வேண்டி உள்ளது.

பாரம்பரியமாக மொழிக்கல்வி என்பது இலக்கண–மொழிபெயர்ப்பு முறையிலே நடத்தப்பட்டு வந்தது. இன்றும் அந்த முறை பல ஆசிரியர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்திக் கொண்டே உள்ளது. ஆங்கில மொழியின் இலக்கணத்தைக் கற்பிப்பதோடு மொழிபெயர்ப்பின் ஊடாக வசனங்களையும், பந்திகளையும் புரிய வைப்பதன் ஊடாக ஆங்கிலக் கல்வி இம் முறையின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ் மொழிபெயர்ப்பைக் கைவிட்டு நேரிடையாக முதல் மொழி கற்பிப்பது போன்றே இரண்டாம் மொழியான ஆங்கிலத்தையும் படிப்பிக்க வேண்டும். என்ற கருத்தின் படி "நேரிடையான முறை" (Direct Method)யில் ஆங்கிலத்திலேயே ஆங்கிலத்தைப் படிப்பிக்க முயன்றார்கள். மாணவர்கள் பேந்தப் பேந்த விழித்தார்களே ஒழிய பாடம் கற்ற பாடில்லை.

அறுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து மொழி பழக்க தோஷத்தினால் கற்கப்படுகிறது என்ற அடிப்படையில் (Languages are learnt by habit) அமைப்பியல் அடிப் படையில் அமைந்த பாடத்திட்டம் (Structural Syllabus) அறிமுகப்படுத்தப்பட்டது. Pattern Practice முறையில் இலக்கண அறிமுகமும் (Drill) தொடர்ந்த பயிற்சியும், வாசிப்பு பந்திகளும் குறைந்த அளவிலான எழுத்துப் பயிற்சியோடு ஆங்கிலப் புத்தகங்கள் உருவாக்கப்பட்டன.

70களில் பேச்சு மொழியின் முக்கியத்துவத்தைக் கருதி பேச்சு சூழல் மற்றும் கேள்வி மொழி முறையாக (Oral-Situational and audio-lingual Method) ஆங்கிலத்தைக் கற்பிக்கும், கற்கும் முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இங்கு ஒரு சூழலில் எப்படி ஆங்கிலம் பேசுவது என்பதும், அதனைப் பயிற்சியினூடாக மாணவருக்குப் பழக்குவது எனும் முறை முன்வைக்கப்பட்டது. ஆயினும் கருத்துக்களை விளங்கி தொடர்பாடலை மாணவர்கள் மேற்கொள்வதில் இடர்பாடுகள் எதிர் நோக்கப்பட்டன. வாசித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் ஆகிய நான்கு வகைப்பட்ட திறன்களில் மாணவரை விருத்திபெற வைப்பதற்கு வேறேன்ன வழிகளை

மேற்கொள்ளலாம் என மொழிக் கற்பித்தல் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற் கொண்டனர்.

அதன் அடிப்படையில் எண்பதுகளில் தொடர்பாடல் முறை என்பது அறிமுகப் படுத்தப்பட்டது. பேச்சு இங்கு முக்கியப்படுத்தப்பட்டது. ஏற்கனவே வழக்கிலிருந்த Audio Lingual situational Approach இருந்து முழுமையான ஒரு மாற்றத்தை புதிய நூலாக்கக் குழு மேற்கொண்டிருந்தது. இலக்கணம் கூட (Grammar in Action) செயல் நிலையில் இலக்கணம் எனக் கற்பிக்கப்பட்டது. பாத்திரப்பங்கை வகிபாக விளையாடல் (Role Play) மூலம் உரையாடல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிற பாடங்களில் காணப்படும் உடலின் பாகங்கள், இலங்கையின் புவியியல், சூழல் நிலைமைகள் பற்றிய வாசிப்புப் பகுதிகள் என மாணவர் உலகில் பயில் நிலையில் உள்ள விடயங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. சிறு கவிதைகள், கதைகள் இணைக்கப்பட்டிருந்தன. மாணவர்க்கு இதமாக பாடத்தெரிவுகள் அமைந்த போதும் பாட அலகுகளின் அதிகரிப்பும், ஆசிரியருக்கான விளக்க செயல் அமர்வுகள் முறையாக நடாத்தப்படாமையினாலும் தொடர்பாடல் அணுகுமுறை சற்று விரிவான தளத்தில் மாற்றம் பெற்றது.

கொள்கையான பேச்சு மொழியை முன்னிலைப்படுத்தல் (Fluency Versus Accuracy) என்பது மாறி இலக்கண சரி எதிர் சரளம் (Accuracy Versus Fluency) வலியுறுத்தப்பட்டன. ஆங்கில பாடப் புத்தகங்கள் 90களிலும், 2000 ஆண்டுகளிலும் பல்வேறு மாற்றங்களைக் கண்டன.

### செயற்பணிகளின் அடிப்படையில் ஆங்கிலம் கற்பித்தல் (Task-based Teaching Method)

உலகளாவிய ரிதியில் இன்று செயற்பாட்டுப் பணிகள் (Task-based Teaching Method) அடிப்படையில் அமைந்த கற்பித்தல் முறை முன் கொண்டு வரப்பட்டது. வகுப்பறையில் 5E முறை கடைப்பிடிக்கப்பட்டது. (Exploration, Engagement, Explanation, Elaboration, Evaluation) ஆராய்தல், ஈடுபடுத்தல், விளக்கப்படுத்தல், விரிவாக விளங்கப் படுத்தல், மதிப்பீடு செய்தல் எனும் கல்விக் கொள்கைக்கு ஏற்ப கல்வி கற்பிக்கும் முறை வடிவம் பெற்றது. அதனால் ஆங்கிலம் கற்பித்தலிலும் Task-based Teaching Method பிரபல்யம் பெற்றுள்ளது.

மாணவர்கான செயற்பாட்டுப் பணிகளை வடிவமைத்து கொள்வதில் ஆசிரியர்களின் பணி அதிகமாவதுடன் அதனை வகுப்பறைகளில் அமுலாக்குவதும் அவர் தம் கடமையாகியது. இலக்கணம் கற்பிப்பதற்கான செயற்பணிகள் (Tasks), பேச்சுப் பயிற்சிக்கான செயற்பணிகள், கிரகித்தற் பயிற்சிக்கான செயற்பணிகள், எழுத்துப் பயிற்சிக்கான செயற்பணிகள் என ஆசிரியர்கள் கூறு பிரித்துக்கொள்வர். இத்தகைய செயற்பணிகளில் சில மாணவர்கட்கு குதூகலத்தை அளிக்க வல்லவை. பல அவர்களை

இக்கட்டான நிலைக்கு இட்டுச்செல்வன. இவ்விடயத்தில் நாம் பாடசாலைக் கல்வி திட்டத்தில் பயன்பாட்டில் உள்ள கல்வி முறை பற்றியும், பாடப்புத்தகங்கள் பற்றியும், நடைமுறையில் அவற்றின் பயன்பாடு பற்றியுமே பறைய விரும்புகின்றோம்.

பாடசாலைக் கல்வித் திட்டத்தில் இரண்டு முக்கிய பிரிவுகள் ஆங்கிலக் கல்வியை முன்னெடுக்கின்றன. ஒன்று ஆரம்பக்கல்வி, மற்றையது இரண்டாம் நிலைக் கல்வி அதுவும் க.பொ.த. சாதாரணதரம் மட்டுமான நிலைமையே பரிசீலனைக்கு எடுக்கப்படுகிறது. ஏனெனில் க.பொ.த. உயர்தரத்தில் ஆங்கிலக் கல்வி "ஏனோதானோ" மனோபாவத்தில் முன்னெடுக்கப்படுவதால் அது பற்றி காத்திரமான உரையாடலை மேற்கொள்ள முடியவில்லை.

இப்போது எமது கவனத்தை ஆறாந்தர மாணவர்களை முன்வைத்து சிந்திப்போமானால் அவர்களின் ஆங்கில தரத்தை முன்னேற்றும் வழிவகைகளை எமது பண்பாட்டுப் பகைப்புலத்தில் கண்டறிவதற்கு இக் கட்டுரை முயல்கிறது.

## ஆங்கிலம் கற்பித்தலில் அரங்க செயற்பணிகள்
## (Theatre Tasks in English Teaching)

ஆறாம் வகுப்புக்கு வரும் மாணவர்களில் ஒரு தொகையினர் நல்ல வசதியான பாடசாலையில் இருந்து ஆங்கிலம் கற்று வருபவர் ஆகவும், இன்னோர் பகுதியினர் சரியான வளங்கள், ஆசிரியவளம் இல்லாது அரைகுறை ஆங்கில அறிவோடு வருபவர் ஆகவும் உள்ளனர். இரு பகுதியினருமே ஆங்கிலப்பேச்சில் அவ்வளவு திறன் வாய்ந்தவர்களாக இருப்பது குறைவு. இந்நிலையில் இருபிரிவினரையுமே ஒன்றாக்கி நாம் முன் வைக்கும் அரங்கப் பட்டறை முறையிலான ஆங்கிலம் கற்பித்தல் முறைமையில் ஈடுபடுத்தலாம் எனும் கருத்தை இங்கு முன்மொழியப்படுகிறது.

மாணவர்களை வகுப்புக்கு வெளியே மர நிழலிலோ, கோயில் மண்டபங் களிலோ, பாடசாலை ஒதுக்குப்புற தாழ்வாரங்களிலோ கூட வைத்து ஆரம்பத்தில் கூடி ஆடிப்பாடும் சூழலை ஏற்படுத்த வேண்டும். அடுத்து சற்று ஒழுங்கு முறைப்பட்ட விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுத்த வேண்டும். குறைந்த நேர அளவில் அணிநடைப் பயிற்சியிலும் ஈடுபடுத்தி, மாணவரின் கவனச் சிதறலை ஒழுங்குபடுத்தி, குதூகல உணர்வை முதல் பத்து நிமிடங்களிலும் ஏற்படுத்தி, செயற்பணிகளில் பங்குபற்றும் மனோஉணர்வை எற்படுத்த வேண்டும்.

தொடர்ந்து சோடிசோடியாக எதிர் எதிராக நின்று கொண்டு கண்ணாடியில் பிரதி பலிக்கும் நிழல் போல (Mirror Image), இரு மாணவர்களும் கைகளை ஆட்டுவது,

தலையை அசைப்பது கால்களைத் தூக்குவது என "போலச் செய்தல்" செயல்களில் தம்மை ஈடுபடுத்துவர்.

அடுத்து இரு கைகளையும் கோர்த்த படி ஓவியம் வரைவது போல காட்சிகளில் ஈடுபடுவர். இப்படியாக உடலையும், மனதையும் தயார்படுத்திய (Warming up) பின் "ஆடு–வீடு", "தவறவிட்டவரைக் கண்டுபிடித்தல்" போன்ற சின்ன சின்ன விளையாட்டுக் களில் ஈடுபடுத்த முடியும். இவை அனைத்தும் ஆங்கில மொழியிலான எடுத்துரைப்பு அறிவித்தல் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அதன் மூலம் ஆங்கிலத்திலேயே தம் பதிலை வழங்க மாணவர் மனோநிலை தயாராகும். இது ஒரு வகையில் மௌனம் கலைதல் (break the ice) நிலைக்கு மாணவரை இட்டுச் செல்லும்.

அடுத்து பல்வேறு அரங்க செயற்பணிகளில் (Theatre Tas) குழு நிலையில் மாணவரை ஈடுபடுத்த ஆயத்தமாக வேண்டும். சிக்கல் குறைந்த இலகுவான செயற் பணிகளில் ஆரம்பித்து படிப்படியாக சிக்கல் நிறைந்த அரங்க செயற்பணிகளில் ஆசிரியர் தமது பாடத்திட்டத்தை வரையறுக்கலாம். உதாரணமாக 30 மாணவர்களை 3பேர் கொண்ட குழுக்களாக 10 செயற்பணிகளை தெரிவுசெய்து, செய்துகாட்டலுக்கு மாணவரை ஆற்றுப்படுத்த வேண்டும். முதலில் 10 களங்களில் மூன்று பாத்திரங்கள் செயற்படும் விதமாக மாணவர் காட்சிகளை வடிவமைக்க முடியும். பாடசாலை, ஆஸ்பத்திரி, கோயில், வீதிச்சந்தி, கடை, அலுவலகம், வங்கி முகப்பு, சலூன், புகையிரத நிலையம், பஸ்வண்டிச்சாலை போன்ற களங்களில் நடைபெறக் கூடிய சம்பவங்களை மாணவர் தம் கற்பனைக்கு விட்டுவிட்டு, மூன்று பாத்திரங்கள் அவ்வக்களங்களில் எப்படி செயற்படும், உரையாடும் எனத் திட்டமிட்டு, உடனடித்தயாரிப்பாக காட்சித் தயாரிப்பை குழு நிலையில் ஒத்திகை பார்க்க வேண்டும். அந்த அந்த பாத்திரங்கள் தமக்கேற்ற மொழியாடலை ஆங்கிலத்தில் மேற்கொள்ள முயல வேண்டும்.

உதாரணமாக சந்தியில் ஒரு சம்பவம் – விபத்து – நடப்பதாயும், அடிபட்ட இருவரும் போக்குவரத்துப் பொலிசாரும் நடிப்போடு கூடிய செயற்பாட்டிலும் உரையாடலிலும் ஈடுபட முயன்று பிரச்சினைக்கு தீர்வு காணும் போக்கில் கதையை வளர்த்து முடிப்பது ஒரு நாடகத் தன்மையை செயற்பணிக்கு வழங்கும். இது அரங்கத்தாக்கம் நிறைந்ததாகவும், உணர்ச்சிகளின் சங்கமம் ஆகவும் உருவாக்கம் பெறும்போது மாணவர் தம்மை மறந்து ஆங்கிலத்தில் உரையாட முயல்வர். இதனூடாக அவர்களின் தூண்டல் உணர்வு அதிகரிக்கும் தேடல் பக்குவம் ஏற்படும் மொழி வாசிப்பில் ஆர்வம் பிறக்கும் ஆங்கில நிகழ்ச்சிகளை, பேச்சுக்களை கேட்க வேண்டும் என உந்துதல் பெறுவர்.

**வகுப்பறை அரங்கம் வளர்க்கப்பட்டால்.....**

இது போன்ற பல்வேறு வகைப்பட்ட அரங்க செயற்பணிகளை திட்டமிட்டு மாணவர்க்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்களிடையே ஆங்கிலக்கல்வியை மேலும் மேம்படுத்த முடியும். ஒரு சிறிய கதையை காட்சிப்படுத்தலாம். தெரிந்த கதையை முதலிலும், பின்னர் மறுநாள் வீட்டில் வாசித்து வந்த கதையை மறுநாளும் காட்சிப்படுத்த முனையலாம்.

கவிதை ஒன்றையும் காட்சிப்படுத்தி எடுத்துச் சொல்லலாம். பாடல் ஒன்றையும் அரங்கமயப்படுத்தி பாடி ஆடலாம். ஒரு வாசிப்புப் பகுதியையும் ஒரு கருத்தரங்க மேடையில் அறிக்கை செய்வது போல வாசிக்கவும் மற்றவர் அதில் கேள்விகள் தொடுக்கவும் என ஒரு நேர் காணல் அரங்கையே ஒழுங்கு பண்ணலாம்.

ஒரு வட்டமேசை மாநாடு போல ஒரு அமைப்பில் தலைவர் ஒருவர் மாநாட்டு அறிக்கையை வாசிப்பதாகவும் பிறர் அதன் மீது கேள்விக்கணைகள் தொடுப்பதாகவும் வளர்ந்த மாணவர் மத்தியில் களம் அமைக்கலாம்.

ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர், அதிகாரிகள், ஊடகவியளார் கேள்விகளுக்கு நாட்டு நிலைமையைப் பற்றி கருத்துக்கள் கூறலாம். இவ்வாறு பல்வேறு சமூகக்களங்களையும் அரங்க செயற்பணிகளாக மாற்றும் கற்பனைத்திறனை ஆசிரியர் வளர்த்து மாணவரின் ஆங்கிலமொழிப் பேச்சை மேம்படுத்த முடியும்.

இது போன்ற வகுப்றைக்கல்வி சார்ந்த அரங்க செயற்பணிகளில் தம்மை முற்று முழுதாக ஈடுபடுத்த ஆர்வம் கொண்ட மாணவர் தாம் புதிது புதிதாக வாசித்த கதைகளை சமூக ஊடகங்கள், மனிதர்களிடம் இருந்து பெற்ற வசனங்கள், தொடர்கள், சொற்களை பயன்படுத்தும் களமாக வகுப்பறை அரங்கம் வளர்க்கப்பட்டால் பெரிதும் பூரிப்பு கொள்வர். மேலும் வாசிப்பில், கிரகித்தல் பயிற்சியில் ஈடுபடுவர். நடித்த நாடக பாடங்களை எழுதி திருத்தி நடிக்க முயல்வர். இதன் மூலம் ஏற்கனவே குறிப்பிட்ட பேசுதல், எழுதுதல், வாசித்தல், கிரகித்தல் என்ற மொழித்திறன் விருத்திகளில் மாணவர் பயிற்சி பெற்று சிறப்புப் பெறுவர் என்பது திண்ணம்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
*சிரேஷ்ட ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளரும்,*
*மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும்.*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*



# பரிகாரக் கற்பித்தல் முறை

**1. அறிமுகம்**

பூமியில் மனிதன் தோன்றிய காலப்பகுதியில் இருந்தே கற்றல்–கற்பித்தல் முறை தோன்றியிருக்கின்றது. மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகள் கூட கற்றல் கற்பித்தல் முறையைப் பயன்படுத்தியிருப்பதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Brown, 1994).

கற்றல் கற்பித்தல் முறையானது வினைத்திறன் மிக்கதாகக் காணப்பட்டால் பிள்ளையானது தன்னைச் சூழவுள்ள உலகை நன்கு பயன்படுத்த முடியும். மற்றவர்களுடன் சுமுகமாக ஒன்றிணைந்து வாழும் கலையை குழந்தை கற்காவிடின் அக்குழந்தை தனது வாழ்வில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்க நேரிடும். கற்பித்தலின் மூலாதாரம் ஆசிரியருக்கும் கற்போனுக்குமிடையேயான இடைத்தொடர்பாகும் (Shulman, 1987).

பிரசினம் தீர்த்தல் முறை (Problem Solving Method), செயற்றிட்ட முறை (Project Method), மொண்டிசூரி முறை (Montessori Method), சிறுவர் பூங்கா முறை (Kindergarten Method), அவதானித்தல் முறை (Observation Method) விரிவுரை முறை போன்ற கற்றல்–கற்பித்தல் முறைகள் பிரபலமான முறைகளாக விளங்குகின்றன. எனினும் இவற்றையும் விட பல்தரக் கற்பித்தல், பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக் கற்பித்தல் போன்ற விசேட கற்றல்–கற்பித்தல் முறைகளும் காணப்படுகின்றன. இவை விசேட சந்தர்ப்பங்களிலும் விசேட தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுபவை ஆகும்.

இக்கட்டுரையின் பிரதான நோக்கம் பின்வருவனவற்றை ஆராய்தலாகும்:

- பரிகாரக் கற்பித்தல் முறை
- பரிகாரக் கற்பித்தல் முறையின் பண்புகள்
- பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கு,
- பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கில் இனங்காணக்கூடிய காரணிகள்

**2. பரிகாரக் கற்பித்தல் முறை**

மெல்லக் கற்கும் மாணவர்கள் தமது பாட அலகுகளில் இழந்தவற்றை கற்பதற்கு உதவும் செயற்பாடானது பரிகாரக் கற்பித்தல்முறை எனப் பொதுவாகக் குறிப்பிட முடியும்.

மாணவர்கள் சுகவீனம், போர், இடப்பெயர்வு போன்ற பல்வேறு காரணங் களால் தமது கற்றல் நடவடிக்கைகளில் ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் ஈடுபட முடியாத நிலை ஏற்படுகிறது. இவர்கள் தமது வகுப்புக்குரிய கலைத்திட்டத்தில் உள்ள விடயங்களில் இடையிடையே சில விடயங்களை இழக்கின்றனர். இவ்வாறு இடையில் இழக்கப்படும் விடயங்கள் தொடர்ச்சியாக இவர்கள் கற்கப் போகும் விடயங்களுக்கு அவசியமானவையாக இருக்கலாம். இதனால் இம்மாணவர்கள் தமது தொடர்ச்சியான கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

ஆரம்ப வகுப்பில் மொழிப் பாடத்தில் வாசிப்பதற்கு பிள்ளைகளுக்கு கற்பிக்கும் தருணத்தில் பாடசாலைக்கு சமூகமளிக்காத பிள்ளை, தொடர்ந்து மொழிப் பாடத்தை மட்டுமல்லாது சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், சமயம், கணிதம் போன்ற பாடங்களைக் கற்பதிலும் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றது. இவ்வாறே ஆரம்ப வகுப்பில் கணித பாடத்தில் எண்களைக் (குறியீடு, எண்பெயர், எண் பருமன்) கற்பிக்கும் போது பாடசாலைக்குச் செல்லாத பிள்ளையால் அதன் பின்னர் கற்பிக் கப்படும் கணிதச் செய்கைகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பவற்றை பரிந்து கொள்ள முடியாதிருக்கும். இதனைப் போலவே மற்றைய பாடங்களிலும் பிள்ளைகள் பல்வேறு முக்கிய விடயங்களை இழந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபட முடியாது சிரமப்படுவர்.

மாணவர்களுக்கு தமது கற்றலில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து தொடர்ச்சியான கற்றலில் ஈடுபடுவதற்கு துணை செய்யும் பரிகாரக் கற்பித்தலானது உள்ளடக்கத்தை விடவும் திறன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

பரிகாரக் கற்பித்தல் சிறார்களின் பார்வைக் குறைபாடு, புலக்காட்சி ஒழுங்கமைப்பு, அரூப காரணம் காட்டுதல், ஒலியை இனங்காணல், கணிதச் செயற் பாடுகள், கவனக் குறைவு, முதல் எழுத்தைக் கொண்டு வாசித்தல், செவிப்புலக் குறைபாடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

பரிகாரக் கற்பித்தல் தேவைப்படும் மாணவர்கள் பெரும்பாலும் சராசரி மட்டத்திலும் குறைவானவர்களாகவே காணப்படுவர்.. இதற்கான காரணமாக அமைவது குறித்த கற்றல்சார் அல்லது நடத்தைசார் பிரச்சினைகள்/இடர்ப்பாடுகள் ஆகும். பரிகாரக் கற்பித்தலை கல்வியில் சராசரி மட்டத்திலும் கூடிய மட்டத்தில் உள்ள மாணவர்களுக்கும் மேற்கொள்ள முடியும். இந்த மாணவர்கள் மேலதிகக் கவனிப்புடன் கற்றலில் ஈடுபடுவார்கள்.

**3. பரிகாரக் கற்பித்தலின் பண்புகள்**

பரிகாரக் கற்பித்தலானது பல்வேறு பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இது பணியாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது. இது அவதானித்தல், நிர்ணயித்தல், பரிகாரம் செய்தல், மதிப்பிடுதல் போன்ற அம்சங்களில் முறைமையாக பணியாற்று வதுடன் தொடர்புபடுகின்றது. பரிகாரக் கற்பித்தலானது மாணவர்களுடன் நோக்கம் கருதி கருத்துடன் பணியாற்றுவதுடன் தொடர்புபடுகின்றது.

மாணவர்கள் குழு வேலைகளில் அல்லது தனி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் அவர்களின் வேலைகளை அவதானித்தலின் மூலம் அவர்கள் எந்த விடயங்களில் இடர்படுகின்றனர் என்பதை அறிய முடியும். உதாரணமாக கணிதத்தில் பிரசினம் தீர்த்தலில் (வசனக் கணக்குகள்) ஈடுபட்டிருக்கும் போது அவர்கள் அதில் வாசித்தல், கிரகித்தல், நிலைமாற்றுதல், செய்கை, குறித்தல் ஆகிய படிகளில் (நேறஅயஉெ 1978) எந்தப் படியில் இடர்படுகின்றனர் என அறிய முடியும் பரிகாரக் கற்பித்தல் தேவைப்படும் மாணவர்களை அவர்களுடைய வகுப்பறையில் ஆசிரியரால் பல்வேறு முறைகளால் இனங்காண முடியும்.

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர் வகுப்பாசிரியராக இருக்கலாம் அல்லது பரிகாரக் கற்பித்தலில் அனுபவம் வாய்ந்த வேறோர் ஆசிரியராக இருக்கலாம். வேறோர் ஆசிரியர் பரிகாரம் வழங்குவதாக இருப்பின் அவருக்கு வகுப்பாசிரியர் மாணவனின் இடர்ப்பாடுகள் /குறைபாடுகள் பற்றிய தகவல்களை வழங்குதல் அவசியமானதாகும்.

பரிகாரக் கற்பித்தல் என்பது மீளக் கற்பித்தல் அல்ல. அது பிள்ளை இடர்ப்படும் விடயத்தை அவதானித்து அந்த இடரப்பாட்டைத் தீர்த்தல் ஆகும். (வைத்தியர் நோயாளி யின் நோயினைக் கண்டறிந்து அதனுக்கு சிகிச்சையளிப்பதற்கு ஒப்பானதாகும்).

**4. பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கு**

பரிகாரக் கற்பித்தலில் ஈடுபடுபவர்கள் பின்பற்ற வேண்டிய செயலொழுங்காக ஐந்து படிகள் உள்ளன. அவையாவன:-

1. மாணவருடன் உரையாடல், பரிசீலித்துப் பார்த்தல், பரீட்சித்தல், அவதானித்தல்
2. ஆசிரியர் மாணவருடன் உரையாடலில் ஈடுபடும் போது மாணவரைப் பற்றிய படம் ஒன்றினை மனதில் உருவாக்கிக் கொள்ளல். மாணவரின் பிரச்சினையை இனங் காணுதல்
3. மாணவரின் பிரச்சினையை இனங்கண்ட பின்னர் அவருக்கு பரிகாரம் வழங்கு வதற்குரிய திட்டத்தை உருவாக்குதல் வேண்டும்.

4. குறைகளைக் கண்டவுடன் பரிகாரம் வழங்கப்படல் வேண்டியது அவசியமும் முக்கியமுமானதாகும்.
5. விசேடமாக பரிகாரம் அளிக்கப்பட வேண்டிய மாணவர்களை குறிப்பான சோதனைகள் (அலகுப் பரீட்சைகள், விடயப் பரீட்சைகள்) கணிப்பீடுகள் (இடை நிலைக் கணிப்பீடு, இறுதிக் கணிப்பீடு ) மூலம் இனங்கண்டு விசேட பரிகார மளிக்கப்படல் அவசியம்.

மேலே குறிப்பிடப்பட்ட செயலொழுங்கில் பரிகாரக் கற்பித்தலில் ஈடுபட முடியும்.

**5. பரிகாரக் கற்பித்தலுக்குரிய செயலொழுங்கில் இனங்காணக் கூடிய காரணங்கள்**

மாணவரிடையே காணப்படும் இடர்பாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் காணப்படலாம். அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

**(1). தவறான எண்ணக்கரு உருவாக்கம் அல்லது தவறான விளக்கம்**

விஞ்ஞான பாடத்தில் திணிவு, நிறை என்பவற்றுக்கிடையிலான வேறு பாடுகளை அறியாது இவற்றினை தவறான இடங்களில் பயன்படுத்தல்.

**(2). தவறான கற்பித்தல் முறை**

சில விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வு கூடத்தில் மேற்கொண்டு கற்பிக்க வேண்டியுள்ளது. ஆனால் சில ஆசிரியர்கள் தமது வசதி கருதி ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளை மேற்கொண்டு கற்பிக்காது வெறுமனே விரிவுரைமுறை யில் கற்பித்தலானது மாணவரிடையே தவறான விளக்கங்களை ஏற்படக் காரணமாக அமையலாம்.

**(3). பாடம் தொடர்பான பீதி**

சில மாணவரிடம் சில பாடங்கள் தொடர்பாக பயம் காணப்படுகின்றது. உதாரணமாக கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை கடினமானவையென சில மாணவர்கள் நம்புகின்றனர். இவர்கள் இப்பாடங்களைப் பற்றிய பயத்துடனேயே கற்பதால் அவர்களால் இயல்பாகக் கற்க முடியாதுள்ளது.

**(4).தவறான கற்றல் பழக்கங்கள்**

விளங்கிக் கற்க வேண்டியவற்றை மனனம் செய்தல் போன்ற தவறான கற்றல் பழக்க வழக்கங்கள் மாணவரின் கற்றலில் இடர்பாட்டைத் தோற்றுவிக்கலாம்.

**(5). பௌதிக மற்றும் உணர்வுபூர்வக் காரணிகள்**

பாடக் கற்பித்தல் நடைபெறும் நாளில் மாணவனுக்கு உடல், உள ரீதியாக பிரச்சினைகள் இருப்பின் அப்பாடத்தைப் பற்றிய விளக்கமானது மாணவனுக்கு சரியாக கிடைக்காது போகலாம்.

**(6). ஆசிரியரின் மனப்பாங்கு**

சில ஆசிரியர்கள் பாடத்தை முழுமையாகக் கற்பிக்காது இடையிடையே சில விடயங்களைக் விட்டு விட்டுக் கற்பித்தல், பிள்ளைகளுக்கு ஆசிரியர் கற்பிப்பது விளங்குகின்றதா என்பதைப் பற்றி ஆராயாது தொடர்ச்சியாக் கற்பித்தல்

பரிகாரக் கற்பித்தலுக்குரிய மாணவரின் இடர்பாடுகளை கண்டறிந்த பின்னர் அந்தக் காரணங்களின் அடிப்படையில் கற்பிக்கும் போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்

- **தலைப்பில் மீளக் கற்பித்தல்**
  எந்த விடயம் மாணவனுக்கு புரியவில்லையென்பதை அறிந்த பின்னர் அந்த விடயத்தை மீளக் கற்பித்தல்
- **கணினி உதவியுடன் கற்பித்தல்**
  மாணவர்களுக்கு கணனி உதவியுடன் ( படங்கள், ஒலிகள் என்பவற்றைப் பயன்படுத்தி)கற்பிக்கும் போது அவர்களுக்கு பாடத்தைப் பற்றிய விளக்கம் பூரணமாகக் கிடைக்கும்.
- **பயிற்சியளித்தல்**
  மாணவருக்கு விளங்காதவற்றைக் மீளக் கறபித்த பின்னர் அந்த விடயத்தில் பல்வேறு பயிற்சிகளை அளிப்பதன் மூலம் அவர்கள் கற்றவற்றறை நினைவில் வைத்திருக்க உதவ முடியும்

**6. பரிகாரக் கற்பிதலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய மாணவரை இனங்காணும் முறைகள்**

**அ. வகுப்பறை இடைவினை:** மாணவர் வினாக்கள் வினவப்படும் போது அடிக்கடி தவறான விடையளித்தல். மாணவர் குழப்பத்துடன் காணப்படல், முழு வகுப்புக்கும் வினவப்படும் வினாக்களுக்கு விடையளிக்காதிருத்தல்

**ஆ. வீட்டு வேலைகள்:** வீட்டு வேலைகள் வழங்கப்படும் போது மாணவர் அவற்றுக்கு விடையளிக்காமல் வருதல், சிலவேளைகளில் எளிதில் இனங்காணத்தக்க வகையில் மற்றையவர்களுடைய விடைகளைப் பார்த்து எழுதிக் கொண்டு வருதல்.

**இ. பாடப்பரீட்சைகள் மற்றும் தவணைப் பரீட்சைகள் போன்றவற்றில் மாணவரின் பெறுபேறுகள்**

- மிகவும் குறைவான புள்ளிகளைப் பெறுதல்
- வினாக்களுக்கு விடையளிக்காதிருத்தல்
- விடைத்தாளை வெறுமையாகக் கையளித்தல்
- ஒரே விடயத்தை மீளமீள எழுதுதல்

**ஈ. கல்விச் செயற்பாடுகள்**

வகுப்பறைச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டாது ஒதுங்கியிருத்தல்

**உ. எண்ணக்கருக்களைக் கற்றல்**

குறிப்பிட்ட தலைப்புத் தொடர்பான எண்ணக்கருக்கள், வாய்ப்பாடுகள் என்பவற்றில் தெளிவற்றிருத்தல்

**ஊ. கணித்தல் திறன்கள்**

அடிப்படைக் கணிதச் செய்கைகளை தவறாகச் செய்தல்

தவறான செய்முறைகள்

**எ. பிரசினம் தீர்த்தல்**

மாணவனுக்கு பிரசினம் தீர்த்தல் தொடர்பாக போதிய விளக்கம் இன்மை காணப்படல்

**ஏ. அறிவின் பிரயோகம்**

வெவ்வேறு நிலைகளில் கற்ற விடயங்களை பிரயோகிக்கத் தெரியாமல் இருத்தல்.

**7. மாணவரில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு பின்வருவனவும் காரணங்களாக அமைய முடியும்**

**அ. ஞாபகம் / நினைவாற்றல்**

தகவல்களை விடயங்களை நினைவில் வைத்திருக்கும் ஆற்றல் குறைவு

**ஆ. விளக்கம்**

தான் வாசித்த விடயங்களைப் புரிந்து கொள்ளாமை

**இ. முன்வைத்தல்**

தனது கருத்துக்களை முன்வைப்பதில் இடர்படுதல்– போதுமான அளவு சொல்வளம் காணப்படாமை

**ஈ. அறிவு இடைவெளி** (Knowledge Gap)

போதிய வரவின்மை

பாடங்களில் கவனம் செலுத்தாமை

**உ. பெற்றோரின் மனப்பாங்கு**

பிள்ளைகளில் கூடியளவு எதிர்பார்ப்பு

**ஊ. கற்றல் மொழி மூலம்**

மொழியில் போதியளவு ஆற்றலின்மை

**எ. பௌதிகக் காரணிகள்**

பார்வை, கேட்டல் குறைபாடுகள்

வேறு நோய்கள்

**ஏ. தனிநபர்க் காரணிகள்**

வாய்மொழி மூலப் பரீட்சைகளில் மட்டும் விடையளித்தல்

கவனம் செலுத்த முடியாமை

சுயநம்பிக்கையின்மை

தாழ்வு மனப்பான்மை

மன உறுதியின்மை

**8. முடிவு**

உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் பரிகாரக் கற்பித்தல் மேற் கொள்ளப்படுகின்றது. இம்முறையைப் பயன்படுத்துவதால் கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் மாணவர்களின் இடர்பாடுகளை களைந்து அவர்களின் தொடர்ச் சியான கற்றலுக்கு உதவ முடியும்.

பரிகாரக் கற்பித்தல்முறையை அபிவிருத்தியடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளான இலங்கை, இந்தியா பொன்ற நாடுகளும் பயன்படுத்துகின்றன.

இலங்கையில் கடந்த மூன்று தசாப்த்தங்களாக நிலவிய கொடிய போரினால் தீவளாவிய ரீதியில் மாணவர்கள் கற்றலில் பல்வேறு விடயங்களை இழந்தனர். இக்காலங்களில் யுனிசெப் (UNICEF) ஆனது தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரிகாரக் கற்பித்தல் பயிற்சிகளை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கு வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் போருக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் கூட பல்வேறு காரணங்களால் இலங்கையில் சிறுவர்கள் தமது கற்றலில் சில பகுதிகளை இழப்பதால் அவர்களை வழமையான கற்றலில் ஈடுபடச் செய்வதற்காக பரிகாரக் கற்றல் முறையைக் கையாள முடியும்.

**உசாத்துணைகள்**


Brown, A.L., 1994. The advancement of learning. Educational researcher, 23(8), pp.4-12.

Newman, M. A. (1977a). An analysis of sixth-grade pupils' errors on written mathematical tasks. In M. A. Clements & J. Foyster (Eds.), Research in mathematics education in Australia, 1977 (Vol. 2, pp. 269-287). Melbourne: Swinburne College Press.

Shulman, L., 1987. Knowledge and teaching: Foundations of the new reform. Harvard educational review, 57(1), pp.1-23.



**கலாநிதி தேவராசா முகுந்தன்**

*சிரேஷ்ட விரிவுரையாளர்*

*முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை கல்விப் பீடம்*

*இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்*

# அதிபருக்கான பாராட்டு நிகழ்வுகள்





# இலங்கை ஆசிரியர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பும் புதிய சம்பளத் திட்டமும்

இலங்கையில் அமரர் 225.00க்கு மேற்பட்ட பாடசாலைகளில் 10012க்கு மேற்பட்ட அரச பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்கள் தொழில் அந்தஸ்தை பேணும் வகையில் கவர்ச்சிகரமான சம்பளத் திட்டமாகும். முறையாக பதவி உயர்வு முறையையும் உள்ளடக்கிய தனியான சேவையொன்றை வேண்டிய நீண்ட காலமாக நடத்தப்பட்ட போராட்டத்தின் பயனாக 1994.10.06 அன்று தொடக்கம் இலங்கை ஆசிரியச் சேவை ஸ்தாபிக்கப்பட்டது என்பது புதிய விடயமல்ல.

